S.S.R. YOGENDRAN

# பொருளியலாளன்

மலர் 2 இதழ் 3 செப்டம்பர் 1988


- இலங்கையின் சனத்தொகைப் பிரச்சினை
- போர்த்துக்கீசர் — ஒல்லாந்தர் பொருளாதாரக் கொள்கை
- மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம்
- ஒபெக்
- சர்வதேச குழுக்கள்
- பீக்ஸ் திட்டம்
- மாற்றத்தக்க ரூபாய்க்கணக்குத் திட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PORULIYALALAN

## YOUNG ECONOMISTS ASSOCIATION


EDITOR

**Mr. N. Perinpanathan**
*B. A. Hons. (Cey.) M. A. (Jaffna)*
Senior Lecturer, Dept. of Economics,
University of Jaffna

ASSISTANT EDITOR

**Mr. M. Sinnathamby**
*B. A. B. Phil. Hons. (Cey), Dip. in. Ed*

MANAGING EDITOR

**Mr. C. S. Ananthan**
*B. A. Hons. (Cey.).*

ADVISORY COMMITTEE

**Prof. S. Rajaratnam** *B. A. Hons. (Cey.) M. Sc. (Lon).*
Head, Dept. of Commerce and Management, University of Jaffna.

**Prof. N. Balakrishnan** *B. A. Hons. (Cey.) M. Phil. (Leeds)*
Dean, Faculty of Arts, University of Jaffna

**Mr. M. Sinnathamby** *B. A. Hons. (Cey) M. A. (Manchester)*
Senior Lecturer, Dept. of Economics, University of Peradeniya.

**Dr. V. Nithianandan** *B. A. Hons (Cey.) Ph. D. (Reading)*
Head, Dept. of Economics, University of Jaffna.

EDITORIAL BOARD

**Mr. V. P. Sivanathan** *B. A. Hons. (Cey.), M. A. (Jaffna)*
Lecturer in Economics, University of Jaffna.

**Mr. K. Kandiah** *B. A. Hons. (Gey.), M. Sc. (Cey.), M. Econ (Thai).*
Lecturer in Economics, University of Jaffna.

**Mr. A. Senthilvadivel** *B. A. Hons. (Cey.). M. A. (Jaffna) S.L.A.S.*
Deputy Director, General Treasury, Colombo.

**Miss. S. Ambikadevi** *B. A. Hons. (Cey.).*
Assistant Lecturer in Economics, University of Jaffna.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SR.Y

YOUNG ECONOMISTS ASSOCIATION
Social Justice Through Knowledge
SRILANKA

# பொருளியலாளன்

செப்டம்பர் 1988


O இலங்கையின் பொருளாதார, சமூகநிலையும் குடித்தொகையும் 1
**கார்த்திகேசு குகபாலன்**

O இலங்கையிலே போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை ஓர் ஒப்பியல் நோக்கு 9
**வி. சிவசாமி**

O ஐரோப்பிய பொருளாதார சமூகம் 18

O இலங்கையின் பொருளாதார விருத்தியில் 'மகாவலி' பெருந்திட்டத்தின் பங்கு பற்றிய ஒரு நோக்கு 19
**S. T. B. இராஜேஸ்வரன்**

O பெற்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பும் (ஒபெக்) அதன் அபிவிருத்திப் பணியும் 27
**இ. நந்தகுமாரன்**

O சர்வதேச நாணய நிதியமும் சர்வதேச அமைப்புக்களும் 33
**மா. சின்னத்தம்பி**

O பொருளாதார முறைமைகள் 39

O பசுமைப்புரட்சியும் இலங்கையின் கிராமிய விவசாயத்துறையின் பொருளியல் சமூக மாற்றங்களும் 50
**க. சண்முகலிங்கம்**

O பாதீடு: அண்மைய மாற்றங்கள் பற்றிய சிறுகுறிப்பு 58

O அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் 59

O மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் திட்டம்* 64


* கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளர்களாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரையாளர்கள்:

O **கார்த்திகேசு. குகபாலன்**
B. A. Hons (Cey) M. A. (Jaf), D. P. S. (Madras)
சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

O **வி. சிவசாமி**
B. A. Hons (Lon), B. A., M.A (Cey)
தலைவர், சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

O **S. T. B. இராஜேஸ்வரன்**
B. A. Hons (Cey) M. A. (Jaf)
விரிவுரையாளர்
புவியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

O **இ. நந்தகுமாரன்**
B, A. Hons (Jaf), M, A. (Jaf) M. Sc (England)
உதவிப்பணிப்பாளர்
தேசிய திட்டமிடல் பிரிவு
நிதித்திட்டமிடல் அமைச்சு
கொழும்பு.

O **மா. சின்னத்தம்பி**
B. A., B. Phil. Hons (Cey), Dip. in. Edu.
வலய ஆசிரிய ஆலோசகர்
துணை ஆசிரியர், பொருளியலாளன்

O **க. சண்முகலிங்கம்**
B. A., LL. B (Cey)
மேலதிக அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார, சமூக நிலையும் குடித்தொகையும்

கார்த்திகேசு குகபாலன்

உலக சமுதாயத்தை வளர்ச்சியடைந்த வளர்ச்சியடைகின்ற, வளர்ச்சி குன்றிய சமுதாயமாக வகைப்படுத்திக் கொள்ளல் பொதுவான வழக்கு. இவ்வகைப்பாட்டில் வளர்ச்சியடைகின்ற சமுதாயத்தையும், பொருளாதார அமைப்பையும் கொண்டு காணப்படும் பல்வேறு நாடுகளில் இலங்கையும் ஒன்று. குடித்தொகை வளர்ச்சி வீதம் 1960 களிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்து வரினும் வேறுபட்ட பௌதீகக் காரணிகள் நிலையற்ற பொருளாதார வளர்ச்சிப்போக்கு, பின்தங்கிய சமூக, கலாசாரப் பண்புகள், அண்மைக்கால அரசியல் சித்தாந்தப் போக்கு, போன்ற பல காரணிகள் மக்களின் அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளைத் தோற்றுவித்து வருகின்றன. இந்நிலை எதிர்கால மக்கள் வாழ்விலும் பலமாக பிரதிபலிக்க வாய்ப்புண்டு. குடித்தொகை சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் குடியேற்றவாத ஆட்சியும் அவர்கள் தம் பொருளாதார, அரசியல் கொள்கைகளும் தான் குடித்தொகையுட்பட பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன என வாதம் புரிகின்றனர். எனினும் இவ்வாறான நிலைமையினை மாற்றியமைக்கும் திறனை இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகள் புதிதாகப் பெற்றுக்கொள்வதுதான் சிறப்பான பண்பாகும்.

## இலங்கையின் பொருளாதார நிலை

இலங்கையின் வலிமை குன்றிய முதலாளித்துவ பொருளாதார அமைப்பு வளரும் குடித்தொகையின் தேவையினைப் பூர்த்தி செய்யவில்லை. கடந்த நான்கு தசாப்த காலத்தில் சமூக, பொருளாதார அபிவிருத்தியானது அரசினூடாகச் செயற்பட்டுள்ளதுடன் அதற்குப் பின்னணியாக சமூக, அரசியல் சார்பான கருத்து நிலை மேலோங்கியிருந்தன. அத்துடன் பாரம்பரிய விவசாயத்துறையின் சீராக்கமும் அபிவிருத்தியும் பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களினதும் பிரதான கொள்கையாகவும் பொறுப்பாகவுமிருந்துள்ளது.[1] எனவே பின்தங்கிய பொருளாதார, சமூக அமைப்பினைக் கொண்ட இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி கடந்த இருபது வருடங்களில் தளம்பல் தன்மை கொண்டதாகவிருப்பினும் வளர்ச்சிப் போக்கைத் தெரிவிக்கின்றது; 1965 — 1973ஆம் ஆண்டுகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வீதம் 4.2 ஆகவும், 1973—1984 இல் 5.2 ஆகவும் அமைகின்றது.[2] 1986ம் ஆண்டு 4.5 வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது என மத்திய வங்கி அறிக்கை தெரிவிக்கின்றது. இதில் விவசாயத்துறையின் வெளியீடு 2.4 வீதத்தாலும் சுரங்கத்தொழில் உற்பத்தித்துறை முறையே 1.5, 8.4 வீதத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலும் அதிகரித்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு 1987ம் ஆண்டு கணிப்பீட்டின்படி 24.2 வீதமாகவும் கைத்தொழிலின் பங்கு 16.5 வீதமாகவும் இருந்துள்ளது. விவசாயத்தைப் பொறுத்தவரை படிப்படியாக கடந்த காலங்களில் அதன் பங்கு குறைவடைந்து செல்வது வரவேற்கக் கூடியதாயினும் அதற்கு மாற்றீடாக கைத்தொழிலின் பங்கு அதிகரித்துச் செல்லவில்லை. சேவைத் தொழில் வளர்ச்சியடைவது வளரும்குடித்தொகையை வளமாக்க வல்லது எனக் கொள்ளமுடியாது.

இலங்கையில் காணப்படும் வளங்களின் இருப்பு, அதன் உற்பத்தி, பயன்பாடு என்பன அதிகரித்துச்செல்லும் குடித்தொகையோடு ஒன்றிணைந்து செயற்படக் கூடியதாயில்லை. குறிப்பாக இயற்கை வளங்களில் நிலம், நீர், கனியங்கள் போன்றன மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நிலமானது குடித்தொகை அதிகரிக்க அதிகரிக்க சுருங்கிக் கொண்டு செல்கின்றது. நீரைப்பொறுத்தவரை பெறக்கூடிய வளமானுலும் அதனைப் பயன்படுத்துவதில் பிரச்சனைகள் ஏற்படுவது மட்டுமல்லாது அதிகளவு செலவும் ஏற்படுகின்றது.இந் நாட்டில்கனியங்கள் மிகவும் அருமையாகவுள்ளது எதிர்கால மக்களின் தொழில்வாய்ப்புக்கருதி புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கக்கூடிய வகையில் இவை நிறைந்திருக்கவில்லை.அல்லது கிடைக்கப்பெறும் உள்நாட்டு மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில்களை உருவாக்குவதற்கு பல சமூக, பொருளாதார, தொழில் நுட்ப, அரசியல் காரணிகள் சிறப்பாக அமைந்துள்ளது எனக் கூறமுடியாது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் பொருளாதார விருத்திகருதி காலத்துக்குக் காலம் பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்தினர். சிறிய, நடுத்தர, பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நீண்டகால, மற்றும் குறுகிய கால ரீதியாக அமுலாக்கினர். இவற்றில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும்சமூகத்துறைகள் முக்கியத்துவமுடையன;எவ்வாறெனினும் உள்நாட்டு வெளிநாட்டு இடர்ப்பாடுகளால் திட்டங்களை திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்தாத நிலை காணப்படுவதுடன் வளர்ந்து வரும் குடித்தொகையின் வேலையில்லாப் பிரச்சனை, வருமானக் குறைவு. குறைந்த வாழ்க்கைத் தர நிலை, கீழுழைப்பு போன்றன இயல்பாகவே ஏற்பட்டு தொடர்ந்தும் மக்கள் வறுமை நிலையை அனுபவிக்க வகை செய்துள்ளது.

நாட்டின் மொத்த குடித்தொகையில் 70 வீதத்தினர் விவசாயமும் அதனுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இந் நாட்டுக்குப் பொருத்தமற்ற மேலைத்தேச தொழில் நுட்ப முறைகளின் உள்நுழைவின் காரணமாக விவசாயத்துறையில் வேலைவாய்ப்பின்மை ஒருபுறமிருக்க கீழுழைப்பும் அதிகரித்துச்செல்லும் நிலை காணப்படுகின்றது. கிராமிய முதலாளித்துவ அமைப்பு உருவாகி நிலமற்ற விவசாய கூலிகளையும் வேலையற்றபடையையும் அதிகரிக்க வாய்ப்பளித்துள்ளது. இதன் விளைவு வளரும் குடித்தொகை வலுவற்ற சமுதாயமாக மாறிவரக்காரணமாக அமைகின்றது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மக்களின் தலைக்குரிய வருமானமும் குறைவாகவே யுள்ளது. 1982ம் ஆண்டில் 5954 ரூபாவாகவும் (280 டொலர்) 1985ல் 9151/- ரூபாவாகவும் (337 டொலர்) காணப்படுகின்றது. இவ்வாறு குறைந்த தலைக்குரிய வருமானத்தைக் கொண்ட இம் மக்கள் மத்தியில் சம பங்கீடு இல்லாமையால் பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே காணப்படுகின்றனர். 1987ம் ஆண்டு அரசினுல் வழங்கப்பட்ட உணவு முத்திரையானது நாட்டிலுள்ள ஏறக்குறைய மொத்த மக்களில் 75 வீதத்தினருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## குடித்தொகைப் போக்கு

இலங்கையின் குடித்தொகை 1981ம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி 14.85 மில்லியனுகும். 1986ம் ஆண்டு மதிப்பீட்டின்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.12மில்லியனுகவுள்ளதுடன் 2000ம் ஆண்டில் 21.0 மில்லியனுக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1971-1981ம் ஆண்டுகளில் வருட வளர்ச்சி வீதம் 1.9 ஆகவிருந்தது. 1985ல் 1.8 வீதமாகவுள்ளதுடன் 1986ல் 1.6 வும் 1987ல் 1.5 வும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வளர்ச்சி வீதம் படிப்படியாக குறைவடைந்துசெல்லினும் இரட்டிப்பாகும்காலம் வளர்ச்சி வீதம் 1.6 ஆக மட்டுப்படுத்தப்படுமாஞல் 43வருடங்களாகவிருக்கும். அதாவது 2029 வருடத்தில் 32.24 மில்லியனுக அதிகரிக்கலாம். 0.5 வீத வளர்ச்சியைக் கொண்ட நாடுகள் தமது குடித்தொகையின் இரட்டிப்பு நிலைபெற 38 வருடங்கள் எடுக்கின்றன. எனவே குடித்தொகை வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்துதல் மிக அவசியமான ஒன்ருகும். சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்ருண்டின் ஆரம்ப காலப் பகுதிகளிலும் இறப்பு வீதத்திற்கும், பிறப்பு வீதத்திற்குமிடையில் மிகச் சிறிய இடை வெளியே காணப்பட்டது. அதாவது 1871ல் 1000க்கு 28.5 பிறப்புகளும் 19.4 இறப்புகளும் காணப்பட 1881 முறையே அவை 27.1, 28.2 ஆகவும் காணப்பட்டன. 1946ல் 36.6 பிறப்புகளும் 20.2 இறப்புகளும் நிகழ்ந்தன. குறிப்பாக 1940களிலிருந்து பிறப்புகள் ஏற்ற இறக்கத்துடனுன வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் இறப்புக்களைப் பொறுத்தவரை திடீர் வீழ்ச்சியைக் கொண்டிருந்ததால் இயற்கை அதிகரிப்பு வேகமாகியது. அதாவது 1953ல் 38.7 பிறப்புகளும் 10.7 இறப்புகளும் நிகழ 1981ல் 28.0 பிறப்புகளும் 6.0 இறப்புகளும் 1986ல் 22.3 பிறப்புகளும் 6.0 இறப்புகளும் நிகழ்ந்துள்ளன. அத்துடன் குழந்தை இறப்புகள், பிரசவத்தாய் இறப்புகள் கடை நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே இறப்பு வீதம் இதற்குமேல் குறையும் என எதிர்பார்க்கமுடியாது. ஆகவே பிறப்புகளைக் கட்டுப்படுத்தலிலேயே அக்கறை செலுத்தவேண்டும்.

குடித்தொகை அதிகரிப்புக்குக் காரணம் இறப்பு, பிறப்பு ஆகியன மட்டுமல்லாது உள், வெளி இடப் பெயர்வும் காரணங்களாகும். வெளி இடப்பெயர்வு தொழில் வாய்ப்பின் நிமித்தம் ஏற்படுவதால் அது தற்காலிகமானதே. இலங்கை இந்திய உடன்படிக்கையின்படி தாயகம் திரும்பவேண்டியவர்களின் எண்ணிக்கையும் இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளால் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களின் எண்ணிக்கையும், ஏறத்தாழ ஒரே அளவினராகவிருப்பதால் எதிர்காலத்தில் உள், வெளி இடம்பெயர்வுகள் குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறமுடியாது. எனவே இலங்கையின் குடித்தொகை வளர்ச்சிக்கு பிரதானமான காரணி ஏனைய விருத்தியுறும் நாடுகளில் காணப்படுவது போன்று உயர்ந்த பிறப்பு வீதமும் விருத்தியடைந்த நாடுகளில் காணப்படுவது போன்ற குறைந்த இறப்பு வீதமுமேயாகும்.

குடித்தொகைப் பிரச்சனைக்கு பல்வேறு காரணிகள் ஒன்றுடனென்று தொடர்புடையதாய் காணப்பட்டாலும் சில பிரச்சனைகள் துலக்கமாகத் தெரிவதைக் காணலாம். பரம்பலில் காணப்படும் வேற்றுமைப் பண்பு, நில - மனித விகிதம், வாழ்விடம், வேலைவாய்ப்பின்மை, உணவு நிரம்பலில் பற்ருக்குறை, அரசியல் நிலை, சூழல் மாசடைதல், வளங்கள் அருகிச் செல்லல், மருத்துவ நிலை, கல்வி மற்றும் குடும்பத்திட்டமிடலின் அசமந்தப் போக்கு போன்ற பல காரணிகள் முக்கிய இடம் பெறுகின்றன,

## பரம்பல் மாதிரி

இலங்கையின் குடித்தொகைப் பரம்பலை பொறுத்தமட்டில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு நிலப்பகுதியைக் கொண்ட ஈரவலயப் பிரதேசத்தில் மூன்றிலிரு பங்கு மக்களும், மூன்றிலிரு பங்கு நிலப்பரப்புள்ள வரண்ட பிரதேசத்தில் மூன்றிலொரு பங்கு மக்களும் வாழ்கின்றனர். ஈர, வரண்ட வலயப் பகுதிகளை நிர்வாக எல்லைகளைக் கொண்டு வகைப்படுத்த முடியாதெனினும் குருநாகல், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தளை கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, பதுளை ஆகிய 11 மாவட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 1 — இலங்கையின் குடித்தொகை, பரம்பல், அடர்த்திப் போக்கு

| மாவட்டங்கள் | குடித் தொகை 1981 | குடித்தொகை வளர்ச்சிவீதம் 1946-1981 | நிலப்* பரம்பல் % | பரம்பல் 1981 | அடர்த்தி 1981 (ச. கி. மீ.) | அடர்த்தி 1986 (ச. கி. மீ) |
|---|---|---|---|---|---|---|
| **ஈரவலய மாவட்டங்கள்** | | | | | | |
| கொழும்பு | 1699241 | 117.6 | 1.0 | 11.45 | 2605 | 2796 |
| கம்பஹா | 1390862 | | 2.2 | 9.37 | 994 | 1187 |
| களுத்துறை | 829704 | 81.7 | 2.5 | 5.59 | 516 | 561 |
| கண்டி | 1048317 | 47.3 | 2.9 | 7.06 | 554 | 620 |
| மாத்தளை | 357354 | 129.5 | 3.1 | 2.41 | 180 | 197 |
| நுவரெலியா | 603577 | 125.1 | 2.6 | 4.07 | 254 | 295 |
| காலி | 814531 | 77.2 | 2.6 | 5.49 | 487 | 534 |
| குருநாகல் | 1211801 | 149.8 | 7.4 | 8.16 | 254 | 277 |
| பதுளை | 640952 | 245.7 | 4.4 | 4.32 | 227 | 234 |
| இரத்தினபுரி | 797087 | 132.0 | 5.0 | 5.36 | 246 | 265 |
| கேகாலை | 684944 | 70.5 | 2.6 | 4.61 | 412 | 426 |
| மொத்தம் | 10078370 | 98.6 | 36.3 | 67.89 | — | 459 |
| **வரண்டவலய மாவட்டங்கள்** | | | | | | |
| மாத்தறை | 643786 | 82.9 | 1.9 | 4.34 | 516 | 599 |
| அம்பாந்தோட்டை | 424344 | 183.5 | 4.0 | 2.86 | 164 | 185 |
| யாழ்ப்பாணம் | 830552 | 95.5 | 3.2 | 5.59 | 401 | 412 |
| மன்னார் | 106235 | 236.8 | 3.1 | 0.72 | 53 | 61 |
| வவுனியா | 95428 | 642.6 | 4.1 | 0.64 | 36 | 55 |
| முல்லைத்தீவு | 77189 | | 3.0 | 0.52 | 39 | 34 |
| மட்டக்களப்பு | 330333 | 254.0 | 3.8 | 2.22 | 134 | 141 |
| அம்பாறை | 388970 | | 7.0 | 2.62 | 86 | 101 |
| திருகோணமலை | 255948 | 237.1 | 4.0 | 1.72 | 98 | 111 |
| புத்தளம் | 492533 | 169.4 | 4.7 | 3.52 | 165 | 183 |
| அனுராதபுரம் | 587929 | 508.8 | 11.0 | 3.96 | 82 | 94 |
| பொலநறுவை | 261563 | | 5.3 | 1.76 | 77 | 91 |
| மொனராகலை | 273570 | — | 8.6 | 1.84 | 49 | 57 |
| மொத்தம் | 4768380 | 201.3 | 63.7 | 32.11 | — | 131 |
| இலங்கை | 14846750 | 123.0 | 100.0 | 100.0 | | 250 |

* மாவட்ட ரீதியிலானது.

ஆதாரம் : குடிக்கணிப்பு அறிக்கை 1981. இலங்கை மத்திய வங்கி மீளாய்வு 1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களும் ஈரவலய மாவட்டங்களாகக் கொள்ளப்படுகின்றன. புத்தளம் மாவட்டத்தின் தென்பகுதி ஈரவலயத்துள் அடக்கப்பட்டாலும், இக்கட்டுரையில் அதன் குடித்தொகையை வரண்டவலயத்துடன் சேர்த்தே கணிப்பிடப்பட்டுள்ளது. 1986ம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி மேற்குறித்த பகுதியில் 68.0 வீதமான மக்கள் வாழ்கின்றனர். அட்டவணை I யில் இலங்கையில் 1981ம் ஆண்டின் ஈர வரண்ட வலய மாவட்டரீதியாக நிலப்பரப்பு, குடித்தொகைப் பரம்பல், அடர்த்தி ஆகியன தெரிவிக்கப்படுகின்றன. குறிப்பாக நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 1.0 வீதத்தைக் கொண்டுள்ள கொழும்பு மாவட்டம் 11.45 வீதமக்களையும் 11.0 வீதமான நிலப்பரப்பைக் கொண்ட அநுராதபுரத்தில் 3.96 வீதமான மக்களையும் காணமுடிகின்றது. 8.6 வீதமான நிலப்பரப்பைக் கொண்ட மொனராகலை மாவட்டத்தில் 1.84 சத வீதமான மக்களே வாழ்கின்றனர்.

பொருளாதார முயற்சியும், அன்னிய செலாவணியைப் பெற்றுக் கொள்கின்ற பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும், ஏனைய ஏற்றுமதிப் பொருட்களில் பெரும்பாலானவையும், கைத்தொழில்களில் 90 வீதத்துக்கு மேற்பட்ட பங்கும், ஈரவலயப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பான 64453.6 சதுர கிலோ மீற்றரில் ஈரவலயப் பகுதி 36.3 வீதம் மட்டுமே. இப்பிரதேசத்தின் தலைக்குரிய நிலப்பரப்பு 1984ல் 0.56 ஏக்கராகவுள்ளது. இந்நிலை குடித்தொகை அதிகரிப்பினுல் எதிர்காலத்தில் வீழ்ச்சியடையும். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் வரண்ட பிரதேசத்தில் அமைந்திருப்பினும் அதன் பௌதிக, பண்பாட்டு அம்சங்களினுல் குடித்தொகை அதிகமாகவுள்ளது. இம்மாவட்டத்தில் 1984ன் கணிப்பின்படி சராசரி தலைக்குரிய நிலப்பரப்பு 0.33 ஏக்கராகும். இதில் விவசாயத்துக்கு ஏற்றதல்லாத நிலப்பரப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது வரண்ட பிரதேசங்களில் பல்வேறு விவசாயக் குடியிருப்புத் திட்டங்கள் பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்ற நான்கு பத்தாண்டு காலத்தில் அரசாங்கத்தின் உதவியுடன் மேற்குறித்த திட்டங்களில் நான்கு லட்சத்துக்கும் மேலான குடும்பங்களும் ஒரு மில்லியன் ஏக்கருக்கு மேலான நிலங்களில் குடியமர்த்தப்பட்டனர். எனினும் ஈரவலய குடித்தொகை அமுக்கம் குறைவதாயில்லை. மீள் குடியேற்றம் திட்டமிட்டமுறையில் அமைந்ததெனக் கூறினும் அரசியல் காரணிகள் அதன் நோக்கத்தைச் சீர்குலைப்பதால் எதிர்பார்த்த வெற்றியைப் பெற்றுத்தரவில்லை. அத்துடன் இலங்கை ஒரு சிறிய நாடாக விருப்பதும் சமூக உறவு முறைகளில் காணப்படும் இறுக்கமான பிணைப்பும் மக்களிடையே அதிகரித்த கல்வியறிவும், போக்குவரவு வசதிகளின் விருத்தியும் மூலவளப் பற்ருக்குறையும் காரணமாக அரசினுல் வரண்டவலயம் நோக்கிய கவர்ச்சியை கொடுக்க முடியாதுள்ளது.

1940 களின் பிற்பகுதிகளில் நாடளாவியரீதியில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கையின் விளைவாக நோய்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமையாலும் நாடு சுதந்திரமடைந்தமையாலும் பல்வேறு பொருளாதார, அரசியல், சமூக காரணிகளின் விளைவாக வரண்ட பிரதேச அபிவிருத்தி நோக்கிய பார்வையை அரசு திருப்பியது. இதன் விளைவாக விரும்பியோ, விரும்பாமலோ மக்களின் இடப்பெயர்வு ஏற்பட்டது. இது ஓரளவுக்கு வெற்றியளித்தது. எனினும் ஈரவலயப் பிரதேச அமுக்கம் குறையவில்லை என்றே கூறவேண்டும். வரண்ட பிரதேசத்தில் யாழ்ப்பாணம், மாத்தறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் 1946/81 காலப்பகுதியில் தேசிய வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிடும்போது மிக அதிகமாக இருந்துள்ளது. இவ்விரு மாவட்டங்கள் வெளியிடப்பெயர்வையே அதிகம் கொண்டிருந்தன எனலாம். ஈரவலயப்பகுதியில் பதுளை, குருநாகல் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் ஏறத்தாழ தேசிய வளர்ச்சியோடு ஒன்றிப்போனதாகவே கொள்ளவேண்டும். களுத்துறை மாவட்ட மக்களுக்கு கொழும்பு இருவிசையாகவிருந்தது. மலையக மாவட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களில் ஸ்ரீமாவோ — சாஷ்த்திரி, ஸ்ரீமாவோ — இந்திரா ஒப்பந்தங்களின் விளைவாக பெருமளவிலான இந்தியத் தமிழர் தாயகம் திரும்பியமையால் வளர்ச்சி வீதம் வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது.

இலங்கையின் குடித்தொகை அடர்த்தி 1986ல் சதுர கிலோ மீற்றருக்கு 250 ஆகும். இது ஈரவலய மாவட்டங்களில் 459 வும் வரண்ட வலய மாவட்டங்களில் 131 ஆகவும் உள்ளது. மாத்தளை மாவட்டம் தவிர்ந்த ஏனைய ஈரவலய மாவட்டங்களின் அடர்த்தி அதிகமாகவுள்ளன. வரண்ட வலயத்தில் யாழ்ப்பாண மாவட்டமும், இடை மாறு வலயத்தில் அமைந்துள்ள மாத்தறை மாவட்டமும் அதிக அடர்த்தியைக் கொண்டிருக்க ஏனைய மாவட்டங்கள் குறைவான அடர்த்தியையே கொண்டிருக்கின்றன.

இலங்கையின் மொத்த குடித்தொகையில் நகர மக்கள் 21.5 சத வீதமாகும். 1953—1981ம் ஆண்டுகளிடையே 157.7 வீத வளர்ச்சியை எட்டியுள்ளது. நாட்டிலுள்ள பெரும்பாலான நகரங்கள் திட்டமிடப்படாத, ஆனல் ஆகக் கூடிய பயன்பாட்டை மக்களால் பெற்றுக்கொள்வனவாகவுள்ளன. பெரும்பாலான நகரங்கள் சேவை மையங்கள் ஆகையால் அதிகரித்து வரும் குடித்தொகையால் பல்வேறுபிரச்சனைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. கிராமிய வேலைவாய்ப்பின்மை, கல்வியின்வளர்ச்சி, நகர வேலைவாய்ப்பு போன்றன நகரங்களை நாடும் பண்பு அதிகரிக்க வழிசெய்துள்ளது. இலங்கையில் குறிப்பாக பிரதான நகரங்களின் முக்கியமான அம்சம்யாதெனில் கிராமிய மக்கள் சிறிய நகரங்களை நாடலையும், நகரமக்கள் கொழும்பு போன்ற பிரதான நகரங்களை நாடலையும், அவதானிக்கமுடிகின்றது.

எனவே மீள் குடியமர்த்தல், நகரம் நோக்கிய குடித்தொகை அதிகரிப்பு என்பன நன்முகத் திட்டமிட்டு செயலாற்றவேண்டியது அவசியமாகும். இதில் எந்தவித அரசியல் இலாபத்தையும் எதிர்பாராது மக்களின் எதிர்கால சுபீட்சத்தை நோக்கமாக கொண்டிருத்தல் வேண்டும். குடித்தொகைப் பிரச்சனைத் தீர்வுக்கு வரண்ட வலயப் பகுதி நோக்கிய மீள் குடியேற்றச் சிந்தனை காணப்படினும் அரச மட்டத்தில் குடித்தொகைக் கொள்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாதது.

நில — மனித விகிதம்

இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 16,2 2,480 ஏக்கர்களாகும். இதில் கட்டிடங்கள், வீதிகள் 1,790,000 ஏக்கரிலும், காடுகள் 4,000,000 ஏக்கரிலும், விவசாயத்துக்கு பொருத்தமல்லாத நிலம் 3,940,000 ஏக்கரிலும் காணப்பட விவசாயம் செய்கை பண்ணக்கூடிய நிலப்பரப்பு 6480,000 ஏக்கர்கள் அல்லது மொத்த நிலத்தில் 40 வீதமாகும். விவசாய நிலம் பற்றுக்குறையாகவிருப்பது மட்டுமல்லாது புதிய நவீன விவசாய தொழில்நுட்ப முறைகளின் பயன்பாட்டுக் குறைவு காரணமாகவும், பாரம்பரிய விவசாய முறைகளாலும் நுகர்வுப் பொருட்களைப் பொறுத்தவரை வெளிநாடுகளிலிருந்து கணிசமான அளவு இறக்குமதி செய்யப்படுகின்றன. 1987ம் ஆண்டுக் கணிப்பின்படி மொத்த இறக்குமதியில் 22.8 வீதமான பங்கு நுகர்வுப்பொருட்கள் என்பது குறிப்பிடத்தக்கது அரிசி இறக்குமதி படிப்படியாக குறைந்துவரினும் தளம்பல்நிலையிலேயே காணப்படுகின்றது. நாட்டிலுள்ள மொத்த நிலப்பரப்பில் 1901ம் ஆண்டு தலைக்குரிய நிலப்பரப்பு 4.5 ஏக்கராகவிருந்தது. 1946ல் 2.4 வும், 1981ல் 1.09 வும் குறைவடைந்து சென்றுள்ளது. இந்நிலை 2001ம் ஆண்டில் காணப்படும் 21.3 மில்லியன் மக்களின் தலைக்குரிய நிலப்பரப்பு 0.76 ஆகக் குறைவடையும். இருப்பினும் விவசாயம் செய்யக் கூடியநிலப் பரப்பு 0.30 ஏக்கர்களாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அதிகரித்துச்செல்லும் குடித்தொகையில் கணிசமாக உயர்ந்த பங்கினர். நிலமற்றவர்களாக வாழும் நிலையை எதிர்காலத்தில் எதிர்பார்க்கவேண்டியுள்ளது.

வாழ்விடமும் மக்களும்

மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் வாழ்விடம் தலையாய ஒன்றாகும். இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் வளரும் குடித்தொகைக்கு ஏற்ப குடியிருப்புவசதிகள் விருத்தியடையாமை குடித்தொகைப்பிரச்சினையை அதிகரிக்கவழிகோலுகின்றது, 1981ம் ஆண்டு குடித்தொகைக் கணிப்பின்படி 29,24,418 வீட்டு அலகுகளும் (Housing Units) 104714 வாழும் குடியிருப்புகளும் (Living Quaters) இலங்கையில் காணப்பட்டன. இவ்வாண்டில் சராசரி ஒரு குடியிருப்பில் 5.2 பேர் வாழ்வதை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ் நகரப்பகுதிகளில் 5.9வும், கிராமப்பகுதிகளில் 5.1வும் தோட்டப்பகுதிகளில் 4.4 வும் காணப்படுகின்றது. வளர்ந்த நாடுகளில் சராசரி ஒரு குடியிருப்பில் 2.6 பேரே வாழ்கின்றனர். இது ஒருபுறமிருக்க நாடளாவியரீதியில் 41.9 வீதமான குடியிருப்புகளே நிரந்தரக் குடியிருப்புகளாகும். 51.6 வீதமான குடியிருப்புகள் நிரந்தரத்தன்மை குறைந்ததாகவும் (Semi-Permanant) 6 5 வீதமான குடியிருப்புகள் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு தற்காலிகமாக அமைக்கப்பட்டவையாகவுமுள்ளன. மேற்குறித்த பண்புகள் கிராம-நகர ரீதியில் வேறுபட்டமைந்துள்ளது. நிரந்தரக் குடியிருப்புகளைப் பொறுத்தவரை நகரங்களில் 68.5வீதமாகவிருக்க கிராமங்களில் 37.2 வீதமாகவுள்ளது. அதாவது கிராமிய பொருளாதார அமைப்பு சீரான வளர்ச்சியைக்கொண்டிராததே முக்கியமான காரணமாக கொள்ளவேண்டும். மேற்குறித்த கணிப்பீட்டின்படி கிராம நகரப் பகுதிகளில் மொத்தக் குடியிருப்புகளில் 30.6 வீதமானவை ஒரு அறையினையும், 32.3 வீதமானவை இரண்டு அறைகளையும் கொண்டமைகின்றது. நகரப்பகுதிகளில் 30.1 வீதத்தினர் சராசரி 1 அறையிலும் 29.0 வீதத்தினர் இரண்டு அறைகளிலும் வாழ கிராமங்களில் முறையே 28.0, 33.3 வீதமாகவும், தோட்டப்பகுதிகளில் முறையே 56.8, 29.6 வீதமாகவும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து இலங்கையில் குறிப்பாக கிராம-நகரப்பகுதிகளில் குடியிருப்பு பற்றுற்குறை மட்டுமல்லாது வாழும் அலகுகளில் நெருக்கமாக வாழும் பண்பினையும் அவதானிக்கலாம்.

இதனைக் கருத்திற் கொண்டு இலங்கையில் சுதந்திரத்தை அடுத்த காலப்பகுதிகளிலிருந்து புதிய குடியேற்றத் திட்டங்களை அமைப்பதன் மூலம் பலநோக்கு அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற கொள்கையின் விளைவாக வரண்ட பிரதேசங்களில் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. ஆனல் எதிர்பார்த்த வகையில் வெற்றியளிக்கவில்லை என பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இன்றைய நிலையில் நாள் ஒன்றுக்கு 100வீடுகள் புதிதாகத் தேவைப்படுகின்றன. இருப்பினும் சராசரி 19வீடுகளே பூர்த்தி செய்யப்படுகின்றன. 1970களிலிருந்து குடியிருப்புப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க காலத்துக்குக்காலம் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தினும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாயில்லை. 197_ல் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டுத் திட்டத்திலும் பட்டினம்சார் குறைந்த செலவிலான வீடமைப்பு, கிராமிய வீடமைப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் மிகச் சிறிய பங்கே செயலுருப் பெற்றன எனலாம். 1977ல் பதவிக்கு வந்த அரசு மக்களின் அடிப்படைத் தேவையான வீடமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. அரசின் வீடமைப்புத் திட்டத்தில் நேரடியான வீடமைப்புத் திட்டம், உதவி வழங்கப்பட்டு தாமாகவே வீடமைக்கும் திட்டம், தேசிய வீடமைப்புக்கடன் திட்டம், தேர்தல் தொகுதிக்கான வீடமைப்புத் திட்டம் மாதிரிக் கிராமங்கள் போன்றவற்றை அமுல்படுத்தியது. இதனடிப்படையில் “ஒரு லட்சம்” வீடமைக்கும் திட்டத்தினை வேகமாக அமுல்படுத்தி 1983ல் முற்றுப் பெறவேண்டும் எனக் கொண்டிருந்தாலும் அரைப்பங்கிற்கும் சற்று அதிகமான வீடுகளே கட்டி முடிக்கப்பட்டன. இருப்பினும் வீடமைப்புத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு “பத்து லட்சம்” வீடு கட்டும் திட்டம் உருவானது. இது குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன் கருதியே ஏற்படுத்தப்பட்டது. எனினும் நாட்டின் தேசிய வருமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தில் பெரும் பங்கு பாதுகாப்பு, மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு அதிகமாகப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் வீடமைப்புத் திட்டங்கள் மந்தகதியிலேயே சென்று கொண்டிருக்கின்றன அத்துடன் அரசினுல் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளில் 65 வீதமானவை ஒரு அறையினைக் கொண்டதாகவுள்ளது. இவை குடியிருப்பாளருக்கு சுகாதார வசதிக் குறைவாக விருப்பதுடன் குடித்தொகை அதிகரிப்புக்கு வாய்ப்பானதாகவுள்ளது. மேலும் அண்மைக் காலங்களில் நகர்ப்புறங்களில் சேரிகள், குடிசை வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. கொழும்பு நகரத்தில் 17 சதவீதமான குடியிருப்புக்கள் குடிசைகளும் சேரி வீடுகளுமாகும். இது எதிர்காலத்தில் அதிகரித்து சூழல் மாசுபடுதலை ஏற்படுத்தவல்லதாக உள்ளது.

( அடுத்த இதழில் முடிவுறும் )

o═══

## இயற்கை அதிகரிப்பு வீதம்

நட்டாண்டு சனத்தொகையில் 100 பேருக்கான இயற்கை அதிகரிப்பு கணிக்கும் முறை:

$$\text{இயற்கை அதிகரிப்பு வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட ஆண்டில் பிறப்பு} - \text{குறிப்பிட்ட ஆண்டில் இறப்பு}}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}} \times 100$$

உதாரணம் :

$$\text{1970 இல் இலங்கையில் இயற்கை அதிகரிப்புவீதம்} = \frac{\text{1970ல் இலங்கையில் பிறப்புக்கள் தொகை} - \text{1970ல் இலங்கையில் இறப்புக்கள் தொகை}}{\text{நட்டாண்டுச் சனத்தொகை}} \times 100$$

$$= \frac{368,211 - 94,116}{12,51[illegible],000} \times 100$$

$$= 2.19$$

இதனை பின்வருமாறும் கணிக்கலாம்

$$\text{இயற்கை அதிகரிப்பு வீதம்} = \frac{\text{பருமட்டான பிறப்புவீதம்} - \text{பருமட்டான இறப்புவீதம்}}{10}$$

பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் சனத்தொகையில் 1000 ற்கு இத்தனை என்று கணிப்பிடப்படுவதனுலும் இயற்கை அதிகரிப்பு வீதம் சனத்தொகையில் 100 ற்கு இத்தனை என்று கணக்கிடப்படுவதாலும் 10 ஆல் பிரிக்க வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலே போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை — ஓர் ஒப்பியல் நோக்கு

வி. சிவசாமி

பொது :

இலங்கையிலே போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய இரு ஐரோப்பியக் கடல் சார்ந்த வல்லரசுகளின் தொடர்புகள் குறிப்பாகச் சுமார் மூன்று நூற்றாண்டுகள் ( கி. பி. 1505-1796 ) வரை நிலவின. இரு சாராரினதும் நேரடி ஆட்சி இலங்கையின் கடற்கரையோர மாகாணங்களிலேயே நிலவிற்று. இவர்களிலே முதலில் வந்த போர்த்துக்கீசரின் நேரடி ஆட்சி ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்குச் சற்றுமேலாக ஏற்பட்டிருந்தது. ஆனால், பின்வந்த ஒல்லாந்தரின் ஆதிக்கம் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளாக நிலவிற்று. இருசாராரும் இலங்கைக்கு வந்த பிரதான நோக்கம் பொருளாதார இடத்தினையே பெற்றிருந்தது. முன்னையவரின் ஆதிக்கம் பின்னையவருக்கு எடுத்துக்காட்டாக இருந்தது. சில அமிசங்களில் முன்னையவர் விட்ட தவறுகளைப் பின்னையவர் நிவிர்த்தி செய்ய முற்பட்டனர்.

ஐரோப்பியப் பின்னணி :

இரு சாராரும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள். கி. பி. 15ம் நூற்றாண்டிலேற்பட்டிருந்த விஞ்ஞான வளர்ச்சி, கீழ்நாட்டு நறுமணப் பொருட்களை நேரடியாகப் பெறுதல், பிறநாடுகளுக்கு குறிப்பாக இந்தியாவுக்கு வரவேண்டும் என்ற விருப்பம் மன்னரின் ஊக்கம், தேசிய எழுச்சி, சமயப் பிரசாரம் முதலிய காரணங்களாலுந்தப் பட்டுப் போர்த்துக்கீசர் கீழ்நாடுகளுக்குப் புதிய பாதை மூலம் ஆபிரிக்கா முனையினைச் சுற்றி வரலாயினர். அவர்கள் கீழ்நாட்டு நறுமணப் பொருட்களான (Spices) , மிளகு ( மலையாளதேசம் ) கறுவா ( இலங்கை ) ஏலம், சாதிக்காய், கராம்பு ( கிழக்கிந்திய தீவுகள் ) முதலியனவற்றினை அவை கிடைக்குமிடங்களிலே பெறவிரும்பினர். வாஸ் கொடகாமா கள்ளிக் கோட்டையினை 1498ல் அடைந்து, மிகக் குறுகிய காலத்தில் ( 1504 அளவிலே ) தமது கீழ்நாட்டு வர்த்தகத்திற்குப் போட்டியாளராக இருந்த முஸ்லிம்களைப் போர்த்துக்கீசர் முற்றாக முறியடித்தனர். சிறிது காலமாக ( 1540 வரை) கீழ்நாட்டுப் பொருட்களை ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லும் ஒரேயொரு நாடாகப் போர்த்துக்கல் விளங்கிற்று. ஆனால், இதற்கிடையிலேயே கீழைத் தேசப் பொருட்கள் செங்கடல் மூலமாகச் செல்லலாயின. புதிய பாதையினாலேற்படக் கூடிய நன்மைகள் குன்றின. அராபியர் லஞ்சம் கொடுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களைப் பெற்றனர். இதனாலே புதிய பாதையினாலேற்படக் கூடிய மாற்றங்கள் பாரதூரமாக ஏற்பட்டில. போர்த்துக்கீசரின் கீழ்நாட்டு வியாபாரம் மன்னர் பெயரிலே நடைபெற்று வந்தது. அங்கு வாணிபத்திற்கு எதிராக அநாகரிகமான, நல்லெண்ணமற்ற கருத்து நிலவிற்று. இதனால் அரசாங்கம் அளிக்கும் ஆதரவால் ஏற்படக் கூடிய ஊக்கமும் ஓரளவு சீரழிந்தது. போர்த்துக்கீசரும், பின் ஸ்பானியரும் பிற நாடுகளிலே தாம் பெற்ற பெருந்தொகையான செல்வங்கள் பலவற்றைப் பலனற்ற அரசியலுக்காக விரயமாக்கினர். 1580–1640 வரை போர்த்துக்கல் ஸ்பானிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. ஆனால் ஒல்லாந்திலோ நிலைமை வேறாக இருந்தது.

"ஐரோப்பிய நாடுகளிலே ஒல்லாந்தில் மட்டும், பின்னர் இங்கிலாந்திலும் வர்த்தக நடுத்தர வகுப்பினர் அரசியலிலே வலுப்பெறக்கூடிய சக்தியினைப் பெற்றிருந்தனர். நிலப்பிரபுகள், வியாபாரிகள், கப்பலோட்டிகள் முதலியோரின் கூட்டு முயற்சிகளினாலே தான் ஒல்லாந்து சுதந்திரமுற்றது. அங்கு மேற்குறிப்பிட்ட பின்னைய இருசாராரும், முன்னையோருக்கு, அரசியலிலோ, சமூக ரீதியிலோ குறைந்தவரல்லர். ஒல்லாந்திற் போன்று வேறெந்த நாட்டிலும் வர்த்தகத் தொழில் நன்மதிப்புப் பெற்றிருக்கவில்லை. குடியரசின் மிக வலுவான தூணாக விளங்கும் வகுப்பினைச் சேர்ந்தவராகவே வர்த்தகர் மரியாதை செய்யப்பட்டனர்; கணிக்கப்பட்டனர்- அதிலுள்ள விருதுகளையும், மிக உயர்வான மதிப்பினையும் அவர்கள் பெறுவதற்கான வாய்ப்பு இருந்தது. அங்குள்ள மிகச் சிறந்த பிரபுக்கள் குடும்பங்களிலே வர்த்தகர் திருமணம் செய்யக்கூடியவராகவுமிருந்தனர். மேலும், ஒல்லாந்து தனது தொழில் விவசாய மூலங்களை அபிவிருத்தி செய்தும், ஐரோப்பிய வர்த்தகத்திலே முதல் தரமாக ஈடுபட்டும் வந்தது. 1600க்குப் பின் கிழைத் தேச வர்த்தகத்தின் ஐரோப்பிய மையம் இத்தாலியிலிருந்து அம்ஸ்ரடம், லண்டன் ஆகிய நகரங்களுக்கு மாறிற்று. ஒல்லாந்தர் பல வழிகளிலும் முன்னேறினர். குறிப்பாகப் பெரிய கப்பல் கட்டுதல், காகித ஆலைகள் நிறுவுதல், விவசாயம் வர்த்தகம் ஆகியவற்றிலீடுபடல், சிறுகைவேலைகள் முதலியனவற்றினை குறிப்பிடலாம். முக்கியமாக விவசாய அபிவிருத்தியினைக் கவனிக்கலாம். 1 ம் நூற்றுண்டிலே, 40வீத நிலம் கடல் மட்டத்திற்குக் கீழேயிருந்தது. அதன் பெரும் பகுதியினை மீட்டு நவீன முறையிலான விவசாய பெருக்கம் செய்தனர். இவ்வகையிலவர்கள் ஏனைய நாடுகளில் வாழ்ந்த முன்னேற்றமான நிலப்பிரபுக்களுக்கு முன்மாதிரியாக விளங்கினர். வடிகால் முறையிலேற்படும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒல்லாந்தப் பொறியியலாளரின் உதவியினைப் பிறர் நாடினர். எனவே, இவ்விரு நாடுகளின் சூழ்நிலைகளை நோக்கும்போது. ஒல்லாந்தரின் பொருளாதாரத்திறன் குறிப்பிடற்பாலது. போர்த்துக்கீசரின் கிழைத் தேய நடவடிக்கைகள் மன்னரால்,மேற்கொள்ளப்பட்டவை ஆனால் டச்சுக்காரரோ வியாபார நோக்கினைக் கொண்ட டச்சுக்கிழக்கிந்திய கம்பனியின் முகவராகவே வந்தனர்; செலவினைக் குறைத்து இலாபம் பெறலே அவர்களின் நோக்கமாயிருந்தது. இந்த அடிப்படை வேறுபாடு கவனத்திற் கொள்ளத்தக்க விடயமாகும்.

இலங்கையில் இருசாராரும் :

இருசாராரும் இலங்கையிலே மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். தமது ஆள்புலங்களிலே மிக முக்கியமான ஒன்றாக இதனைக் கருதினர். இலங்கையில் அக்காலத்திலே நிலவிய சுதேசப் பொருளாதார அமைப்பிலே தத்தம் நோக்கங்களுக்கேற்றவாறு மாற்றங்கள் செய்தும், சில வகையிலே சுதேச நிறுவனங்களை உள்ளவாறே பயன்படுத்தியும் தன்மைப்படுத்தினர். இதனாலே சிலவற்றில் மாற்றம் ஏற்பட்டன; சில புதிய திருப்ப முற்றன; சில தொடர்ந்து நிலவினதெனக் கூறமுடியாது.

இலங்கையில் இருசாராரின் நடவடிக்கைகளை நோக்கும்போது, போர்த்துக்கீசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆட்சிக் காலத்திலே பல போர்களில் குறிப்பாகக் கண்டியரசுக் கெதிரான போர் களிலீடுபட்டு வந்தனர். இதனாலும், தாய் நாட்டுச் சூழ்நிலையாலும், இங்கு வந்த போர்த்துக்கீசரின் போக்குகளினாலும் திட்ட வட்டமான பொருளாதாரக் கொள்கை யொன்றினை அவர்கள் பெரும்பாலும் பின் பற்றிலர். போர்த்துக்கீசர் இலங்கையை இழந்தமைக்கான பிரதான காரணங்களி லிதுவொன்றெனக் குவேரோஸ் சுவாமிகள் தமது கொங்குவிஸ்தா எனும் நூலிலே நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கைத் திறைச்சேரி பல காலமாக வெறுமையாக இருந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், ஒல்லாந்தரின் கொள்கையோ இதற்கு மாறுபட்டதாகும். 17ம், 18ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலேயே தலை சிறந்து விளங்கிய டச்சுக்காரர் தம் தாய் நாட்டிலும், தாம் சென்று ஆதிக்கம் செலுத்திய பிறநாடுகளிலும் பொருளா தார நிலை பற்றி நன்கு கவனித்தனர். இலங்கையில் இயன்றளவு போர்களைத் தவிர்த்துச் சமாதானம் நிலவச் செய்தனர். சமாதானம் நிலவினாற்றான் வியாபாரம் செழிக்கும் என்பதை நன்கு உணர்ந்தனர். றைக்கிளவ் வான்கோவன்ஸ் ஜோன்கிடியன் லோட்டன், சிறெய்டர் போன்ற பல டச்சுத் தேசாதிபதிகளின் அறிக்கைகள் குறிப்பிடற் பாலன. "மூலவளங்களை உள்நாட்டிலேயே வைத்துக் கொண்டு' அதன் உற்பத்தியினை அதிகரிக்கவேண்டும். (வெளியே போகாது) இந்நாட்டிற்குள்ளேயே பணம் நிலவக் கூடி யவகையிலிதன் விளைபொருள் உற்பத்தி யினைப் பெருக்கவேண்டும். இவ்வாறு செய் தலாலே இந்நாட்டுக்குத் தேவையான பொருட்களுக்காகப் பிறநாடுகளிலே தங்கி யிருக்கத் தேவையில்லை. மேற்குறிப்பிட்ட தற்கான வழி வகைகள் உள்ளன. ஆனால் அவற்றை நன்கு பின்பற்ற வேண்டும். இதற்குச் சமாதானம் நிலவ வேண்டும். விவசாயத்தை நன்கு ஊக்கப்படுத்த வேண் டும். ஏனெனில் மக்களின் பணத்திலே பெரும் பங்கு வெளிநாட்டரிசி வாங்குவதற் குச் செலவாகின்றது" என ஆரம்பகால டச்சுத் தேசாதிபதிகளின் ஒருவரான றைக் கிளவ் வான்கோவன்ஸ் குறிப்பிட்டிருப்ப திலே ஒல்லாந்தரின் பொருளாதார அபி விருத்திக் கொள்கை தெளிவு. குறைந்த செலவிலே கூடுதலான இலாபம் பெறுதல் அவர்களின் நோக்கமாகும்.

வர்த்தகம் :

இருசாராரும் இலங்கையின் வர்த்தகத் திலே பெரிய கவனம் செலுத்தி வந்தனர். இவ்வர்த்தகம் ஒரு புறத்தில் இலங்கைக் கும் ஐரோப்பாவுக்குமிடையிலும் மறுபுறத் தில் இலங்கைக்கும் பிற ஆசிய நாடுகள் —குறிப்பாக இந்தியாவுக்குமிடையில் நடைபெற்றது. இவ்வர்த்தகத்திலே கறுவா, ஏலம், மிளகு, பாக்கு, யானை, இரத் தினக் கற்கள் முதலியன குறிப்பிடற் பாலன. இருசாராரும் பல பொருட்களிலே தனியுரிமையினை வலியுறுத்தி வந்தனர். இதனால் அக்காலத்தில் இவர்களுக்கு வியா பாரப் போட்டியாளராகவிருந்த முஸ்லிம் வியாபாரிகள் விரட்டப்பட்டனர், ஆனால் தனியுரிமைக்கட்டுப்பாடுகள் தீவிரமாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டில. பிறநாட்டு வியாபாரிகளும் வந்து சென்றனர். இதனால் சுங்கவரி அதிகரிக்கப்பட்டது.

கறுவா :

இஃது குறிப்பாக உணவினைப் பதப் படுத்தற்கு உபயோகிக்கப்பட்டாலும், மருந் தாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இரு சாராரும் கறுவாவிலே கண்ணுங் கருத்து மாயிருந்தனர்; இவர்கள் இலங்கைக்கு வந் தமைக்கான பிரதான காரணம் உலகப் புகழ் பெற்ற உயர் ரகமான கறுவாவைப் பெறுதற்கேயாம். "இலங்கைக் கறுவா மிகச் சிறந்ததும் மிக நேர்த்தியானதும்,மும்மடங்கு விலை கூடியதுமாகும்" எனக் கருதப்பட்டு வந்தது. "கறுவா எனும் மணப் பெண்ணி னைச் சுற்றி நடனமாடினர்" என ஐரோப் பியரின் கறுவா நாட்டம் பற்றிய கூற்றுக் குறிப்பிடற்பாலது. கறுவா இயற்கையா கவே கோட்டை அரசிலும் சிறிய அளவு கண்டியரசிலும் கிடைத்தது, இதற்கெனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி இலாகா ஒன்றிருந்தது.இது மஹாபத்த எனப்படும். இவ் இலாகா அதிகாரிகளின் கீழ் கறுவாப் பட்டை சேகரிக்கும் "சாலி யர்" எனும் சாதியினர் நன்கு கண்காணிக் கப்பட்டனர். இரு சாராரும் கறுவாவைத் தனியுரிமையாகவே கொண்டிருந்தனர்.

அனுமதியற்றுக் கறுவாப்பட்டை உரித் துவாங்குதல், ஏற்றுமதி செய்தல், கொடை யாக வழங்குதல் போன்ற செயல்கள் மரண தண்டனைக்குட்படுத்தும். போர்த்துக்கீசர் தொடக்கத்திலே 200 பகாரும், பின் தர்ம பாலன் காலத்தில் 400 பகாரும் பெற்ற னர். அங்கு நேரடியான இறைமையுரிமை பெற்றபின் எவ்வளவு தொகை பெறமுடி யுமோ அவ்வளவு தொகை பெற்றனர். இதனாலே சாலியர் கடும்வேலை செய்ய நேர்ந் தது. அரசாங்கம் மட்டுமன்றி, அதிகாரி களும், பிற போர்த்துக்கீசருமே பெருந் தொகை பெற்றனர். இலங்கை வருமானத் தில் ஒரு குறிப்பிடத்தக்க விகிதம் கறுவா விலே கிடைத்தாலும், அரசாங்கம் தொடர்ச் சியாக நன்மை அடைந்திலது. பொதுமக் களும் நன்மை பெற்றிலர். ஆனால் டச்சுக் காரர் தொடர்ந்து கறுவாச் சேகரிப்பினை அதிகரிக்க முயன்றனர். கண்டியிலிருந்து கிடைத்த சிறிய விகிதம் கூட ஒழுங்காகக் கிடைக்கவில்லை. டச்சுக்காரர் தமக்குத் தேவையான கறுவாவைத் தொடர்ந்து ஒழுங்காகப் பெறும் நோக்குடன் அதன் உற்பத்தியை 18ம் நூற்றாண்டிலே பெருந் தோட்ட அடிப்படையில் முதல் முதலாகத் தொடங்கினர். பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாகக் கறுவாவினைப் பயிரிடத் தொடங்கினர். இவ்வாறு செய்தல் மூலம் உற்பத்தியினை அதிகரிக்க முயற்சித்தனர்; ஒழுங்காகப் பெற முயன்றனர். தமது ஆதிக் ககாலத் தொடக்கத்திலே ஒல்லாந்தர் ஆண்டுதோறும் 50, 000 றாத்தல் கறுவா பெற வேண்டுமென்றனர். ஆட்சிக்கால முடி விலே கறுவாத் தனியுரிமையாலே 16,00000 ரிக்ஸ் - டொலர் பெற்றனர். இருசாராரும் கறுவாவைப் பெரும்பாலும் ஐரோப்பா விற்கே கொண்டு சென்றனர். தரம் குறை ந்த கறுவாவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தனர்.

மிளகு, ஏலம் :

மிளகு, ஏலம் ஆகியனவும் குறிப்பிடற் பாலன. இருசாராரும் இவற்றையும் கவனித் தனர். போர்த்துக்கீசர் காலத்தில் மிளகு ஒரு முக்கியமான பொருளாக இருந்தமை யினை றிபெய்ரோவின் இலங்கை பற்றிய நூலினாலும் அறியலாம். ஒல்லாந்தர் இவ் விரு பொருட்களையும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முறையிற் பயிரிட்டனர். இலங்கை ஏலம், மலையாள தேச ஏலம் என இருவகை ஏலம் பயிரிடப்பட்டது. ஏலத்தி லும் மிளகு முக்கியமானது. இதனைப் பயிரி டுவதில் பல தேசாதிபதிகள் கவனம் செலுத் தினர்.

பாக்கு :

இருசாராருக்கும் இதுவுமொரு முக்கி யமான வியாபாரப் பொருளாகும். இவ் வியாபாரத்திலும் அரசே தனியுரிமை பெற் றிருந்தது. போர்த்துக்கீசர் இது கிடைக் கும் ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் குறிப் பிட்ட தொகை பெற்றனர். அதுமட்டுமன் றிச் சுதேசிகள் இவற்றை அரசாங்கத்திற் கும், அதிகாரிகளுக்குமே கொடுக்க வேண் டும். பாக்குத் தென்னிந்தியாவுக்கு ஏற்று மதி செய்யப்பட்டு அதற்காக அரிசி, புடவை முதலிய வாங்கப்பட்டன. ஒல்லாந்தர் காலத் திலும் இதே நிலை காணப்பட்டது. ஆனால வர்கள் இலங்கையின் தேவைக்கான உணவு உற்பத்திப் பெருக்கம் செய்து அரிசி இறக் குமதியினைக் குறைக்க முயன்றனர்.

யானை :

இதுவும் தென்னிந்தியாவுக்கே ஏற்று மதி செய்யப்பட்டது. இலங்கை யானைகள் அரசரின் தனியுரிமையாகும். தென்னிலங் கையிலும், வன்னிப் பகுதிகளிலும் திறை யாகவும் பிறவற்றாலும் பெறப்பட்டு மன் னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஊடாக ஏற்றுமதி செய்யப்பட்டன. சம காலத் தென்னிந்திய அரசுகளிலும், வங்கா ளத்திலும், போர்களுக்கு இவை பயன்படுத் தப்பட்டன. ஒல்லாந்தர் காலத்திலே வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளத்திலிருந்து வியாபாரிகள் மலிவான அரிசியுடன் வந்து யானை பெற்றனர். யானை வியாபாரமும் பெரிய வருவாய் அளித்தது. 1969 — 70ல் (ஒல்லாந்தர் காலத்தில்) இதனால் 29% வருமானம் கிடைத்தது. இந்திய வியாபாரிகளிங்கு வந்து இவற்றைப் பெற்றனர். ஆனால், இவ்வியாபாரம் நிச்சய மற்றதாகும்.

**இரத்தினக்கற்கள், முத்து, சங்கு :**

இலங்கையின் இரத்தினக் கற்கள் பேர் போனவை. இரத்தினதுவீபம் என்பது இலங்கையின் பழைய பெயர்களில் ஒன்றாகும். இரத்தினக் கற்கள் தென்மேற்கு இலங்கையில் குறிப்பாகச் சப்பிரகமுவப் பகுதியிலே கிடைத்தன. போர்த்துக்கீசர் காலத்திலே இவற்றை விற்றுப் புடவைகளும் பெற்றனர். முத்தும் தென்னிந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. முத்துக்குளிப்பினை இருசாராரும் குறிப்பாக டச்சுக்காரர் நன்கு கவனித்தனர். 50 – 60 முத்தல் முத்துக்கள் ஒல்லாந்துக்கு அனுப்பப்பட்டன. இதி லீடுபட்ட கிறீஸ்தவருக்கு வரி குறைக்கப்பட்டது. சங்கும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**தென்னிந்தியா வியாபார முக்கியத்துவம் :**

குறிப்பாக, ஒல்லாந்தர் காலத்திலே தென்னிந்தியாவிலுள்ள செழிப்பானமதுரை, தஞ்சாவூர் பிராந்தியங்களுக்கும் இலங்கைக் குமிடையிலே இலங்கைப் பொருளாதாரத்தின் உயிர் நாடியான வர்த்தகம் நடைபெற்றது. "இலங்கையும் தென்னிந்தியாவும் இக்காலத்திலொரு பொருளாதாரப் பகுதியாகவே விளங்கின" என ஓர் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளமை கவனித்தற்பாலது. ஆனால் போர்த்துக்கீசர் இவ்வியாபாரத்திலே கவனம் செலுத்திலர். இலங்கைக்குத் தேவையான உணவுப் பொருட்கள், மாடுகள்,ஆடைகள் அவ்விடங்களிலிருந்து இறக்குமதியாயின.இவற்றிற்காக இலங்கை பாக்குக் கொடுத்தது. இவ்வியாபாரத்தினை முஸ்லிம்கள், செட்டிகள் ஆகிய சிறு வியாபாரிகள் நடத்தினர். வங்காளம், கோல்கொண்டா முஸ்லிம் வியாபாரிகள் எப்பொழுதும் தேவையான அரிசி கொண்டு வந்தனர் அவர்கள் யானையிற் கவனம் செலுத்தினர். மேலும், சீனி, பட்டு, எண்ணெ, அபின் முதலியனவும் இவ்வியாபாரத்திலிடம் பெற்றன.

**வருமானமும், வருமான மூலங்களும் :**

வருமான மூலங்களிலே நிலம் நன்கு குறிப்பிடற்பாலது. இலங்கையின் பிரதான வருமானமாக நிலவருமானமே இருந்து வந்துள்ளது. இருசாராரும் முன்னைய இலங்கை மன்னரைப் போன்று நிலவருமானம் பெற்றனர். போர்த்துக்கீசர் கோட்டை அரசிலே முற்றான ஆதிக்கம் பெறும்வரை நிலவருமானமே குறிப்பாக விவசாய வருமானமே பிரதான வருமானமாயிருந்து வந்துள்ளது. 17ம் நூற்றாண்டு முற்பகுதியிலே தான் மாற்றமேற்பட்டுக் கறுவா பிரதான வருமான மூலமாயிற்று. பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த சேவைமானிய முறை 17ம் நூற்றாண்டு முற்பகுதியிலே மாற்ற முற்றது. முந்திய முறைப்படி அரசாங்க சேவை செய்தோருக்குச் சம்பளத்திற்குப் பதிலாக நிலமும் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இதற்குப் பதிலாக, சம்பளம் பெரும்பாலும் வழங்கப்பட்டது. இந்நிலை போர்த்துக்கீசர் காலத்திலும், தொடர்ந்து நிலவிய டச்சுக்காரர் காலத்திலும் ஏற்பட்டிருந்தது. வருமானத்தினை நன்கு ஒழுங்காகப் பெறுதற்காகப் போர்த்துக்கீசர் தோம்புகள் தொகுத்தனர். இவற்றிலே குறிப்பிட்ட நிலத்தின் செழிப்பு, விளைபொருட்கள், முதலியன பற்றிய விபரங்கள் இடம் பெற்றன. இத்தோம்புகள் சிங்களப் பிரதேசங்களிலே பழைய சிங்கள லேகம் மிதிய என்ற ஓலை ஆவணங்களைப் பின்பற்றியனவாகும். தமிழ்ப் பகுதிகளிலே பழைய மரபுவழி முறையினைப் பின்பற்றியனவாகும். இரு பிரதேசங்களிலும் மானிய முறையிலான சமூகமும் பொருளாதாரமும் நிலவின என்பது குறிப்பிடற்பாலது. போர்த்துக்கீசரைப் பின்பற்றி ஒல்லாந்தர் தோம்புகளை நன்கு விபரமாக ஒழுங்குபடுத்தினர். நிலம் தொடர்பான தோம்புகள் மட்டுமன்றிக் குடும்பங்கள் சார்பான தோம்புகளும் ஒழுங்காகத் தொகுக்கப்பட்டன. போர்த்துக்கீசர் காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும், பின் ஒல்லாந்தர் காலத்திலும் முன்னைய மானியமுறை தொடர்ந்து ஓரளவு நிலவிற்று. இருசாராரும் ராஜகாரிய முறையினை தத்தம் நோக்கங்களிற்குப் பயன்படுத்தினர். பிரவேணி, அக்கொம்மடேசன், அன்டே, ஒடு எனப்பலவகை நிலங்களிருந்தன ; போர்த்துக்கீசர் காலத்திலே விவசாயிகள்மேலதிகமாகக் கொடுக்க நேரிட்டமையாலே பெரிதும் கஷ்டமுற்றனர். ஆனால்,டச்சுக்காரர் பொருளாதார அபிவிருத்தியையும் ஓரளவு செய்து வரிகளை அறவிட்டனர். வருமானத்தில் ஒரு பெரும்பகுதி நிலத்திலிருந்து பெறப்பட்டது ; விளைபொருட்களில் $\frac{1}{10}$ $\frac{1}{2}$ விகிதம் பெறப்பட்டது. தென்னைத் தோட்டங்களிலே வருமானம் கிடைத்தது. தேங்காய் எண்ணை, சாராயம், கயிறு, முதலியன குறிப்பிடற்பாலன. டச்சுக்காரரின் நிலக்கொள்கை கீழ் மாகாணத்திலே பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. நில உரிமையாளராகத் தாம் பெற வேண்டியவற்றுடன் மெழுகு, மரம், யானை புடவை முதலியனவற்றிலே விற்பனவும் செய்தனர். இதனாலே தனியார் வியாபாரம் முற்றாக மறைந்தது. போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்திலே விளைபொருளில் 1/10 பெற்றனர்.

போர்த்துக்கீசர் துறைமுகங்களிலே இறக்குமதித் தீர்வு விதித்தனர். ஆடைகளுக்கு 1/20 வீதமும், பிறவற்றிற்கு 1/10 வீதமும் அறவிட்டனர். முக்கியமான நகரங்களுக்குச் செல்லும் வழிகளிலே ஆயம் அறவிடப்பட்டது. ஆண்பிள்ளையிருந்து ஒருவர் இறப்பின் அவரின் உடைமைகளில் 1/3 வீதமும், உரிமையாளரில்லாவிடில் முழுவதும் அரசிற்குச் சேரும். ஆனால், உரிமையாளர் கத்தோலிக்கராயின் மராள (மரண வரி) அறவிடப்படமாட்டாது. கோட்டை இராச்சியத்திலே தேங்காயுள்ள ஒவ்வொரு பத்து மரத்திற்கும் பணம் அறவிடப்பட்டது. மேலும் மீன்பிடி வரி, தெக்கும் பிங்கோ, யாழ்ப்பாணத்திலே தலைவரி, ஒவ்விதி முதலியவரிகளை அவர்கள் பெற்றனர். டச்சுக்காரரும் மேற்குறிப்பிட்ட வருமான மூலங்கள் பலவற்றினைச் சில திருத்தங்களுடன் நன்கு அறவிட்டனர். தென்னிலங்கையிலே ராஜகாரியம் போன்று வடஇலங்கையிலே ஊழியம் என்ற கட்டாய சேவையிருந்தது. மேற்குறிப்பிட்ட வரிகளிற் சில ஏலத்திலே விடப்பட்டன. வேறுசில அதிகாரிகளால் சேகரிக்கப்பட்டன.

### விவசாயம், தொழிலபிவிருத்தி :

இலங்கையின் விவசாய மூலவளங்களையும், தொழில்களையும் அபிவிருத்தி செய்ய முயன்றமை ஒல்லாந்தரின் பெரும் தொண்டாகும். புதிய பயிர்களை அறிமுகம் செய்து உண்டு பண்ணினர். பழையனவற்றிற்குத் தேவையான வசதிகளும், ஊக்கமும், அளித்தனர். கோப்பி, ஏலம், மிளகு, தென்னை ஆகியனவற்றின் உற்பத்தி மிகவும் ஆதரிக்கப்பட்டது. நெய்தல், சாயம் போடுதல், ஏற்படுத்தப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டது. கம்பனியே வியாபாரப் பொருட்களை விலைக்குப் பெற்றோ, சந்தைகளைத் தேடியோ விநியோகம் செய்து லாபமும் பெற்றது. தெற்கு, மேற்குக் கரையோரங்களிலுள்ள உப்பளங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

விவசாயத்திலே தன்னிறைவு இலங்கையிலேற்படுத்தலாமெனவும், இதனாலே பெருஞ்செல்வச் செழிப்பு ஏற்படுமெனவும், டச்சு ஆதிக்கம் வலுப்படுமெனவும் வான் கோவன்ஸ் குறிப்பிட்டுள்ளார். "இலங்கையிலே டச்சுக் கம்பனியின் நோக்கங்கள் நிறைவேறுவதற்கான பிரதான வழிவகைகளிலே விவசாயமும் ஒன்றாகும்." விவசாய அபிவிருத்திக்கு இடையூறாக ஆள் தட்டுப்பாடு இருந்தது. இதனை நிவிர்த்தி செய்தற்குத் தென்னிந்தியாவிலிருந்து அடிமைகளைக் கொண்டு வந்தனர். ஓராண்டிலே 2000 குடும்பங்கள் கொழும்பிற்குக்கொண்டு வரப்பட்டனர். உள்ளூரிலே விவசாயப் பெருக்கத்தினை ஊக்கப்படுதற்காக இறக்குமதி அரிசியின் விலையினை அதிகரித்தனர். சதுப்பு நிலங்களைத் திருத்தி அவற்றை நெற் களஞ்சியங்களாக்க முயன்றனர். முத்துராஜவெலத்திட்டம் இத்தகையதே இது ஒரு சிங்கள மன்னனாலே உருவாக்கப்பட்டது. பின் போர்த்துக்கீசர் அதனைத் திருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றும் பயனில்லை. ஒல்லாந்தர் 25,000 டச்கில்டர் செலவிலே அணைகள், கால்வாய்கள் முதலினவற்றை அமைப்பித்தனர். வழக்கமான பிரவேணி நிலங்களுக்குப் போல விளைபொருளில் 1/10 விகிதமும், அதனைத் திருத்தியமைத்தற்கான செலவிற்காக 1/40 விகிதமும் விவசாயிகளிடம் அறவிடப்பட்டன. ஆனால் இத்திட்டம் வெற்றியளிக்க வில்லை. பிற இடங்களிலும் விவசாயப் பெருக்கத்திற்காக விதை நெல் வழங்கினர். எடுத்துக்காட்டாகக் கொழும்பிலே 1000 அமுணம் நெல்லும், காலியிலே 1000 அமுணமும் வழங்கப்பட்டன. அம்பத்தலை தொடக்கம் மாத்தறை வரையுள்ள பிரதேசத்திலே அணைகள் கட்டப்பட்டன. டச்சுக்காரர் கந்தளாய்க் குளத்தில் அக்கறை காட்டினர். சிலாப நெற்வயல்கள் நன்கு விளைந்தன. தமது தாய்நாட்டிற் போன்று கால்வாய்கள், அணைகள் பல அமைத்தனர். களுத்துறை - நீர்கொழும்புக்கிடையில் பல அமைக்கப்பட்டன.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்திலே பெரும் கவனம் செலுத்தினர். அவர்கள் ஆட்சிக் குட்பட்டிருந்த கொழும்பு, காலி, யாழ்ப்பாணக் கொம்மாண்டரிகளில் (மாகாணங்களில்), யாழ்ப்பாணத்திலே தான் ஆண்டு தோறும் தொடக்கத்திலே 100,000 - 200,000 டச்சுக்கில்டர் மேலதிக வருமானம் பெற்றனர். யாழ்ப்பாணத்தினை ஒரு சிறந்த பகுதியாகக் கருதி அதன் விளைபொருள் உற்பத்தியினை அதிகரித்தற்கு இயன்றவாறு அவர்கள் முயற்சித்தனர்; இங்கும் ஆக்கபூர்வமான விவசாயப் பெருக்கத்தினை வலியுறுத்தினர். யாழ்ப்பாணத்திலே அரிசிக்கும், புகையிலைக்கும் பெருந்தொகையான பணம் வெளியே கொடுக்க வேண்டியிருந்தது. இதனைத் தடுத்துப் பொருளாதார நிலையினைச் சீர்படுத்த முயன்றனர். மேற்குறிப்பிட்ட இருபொருட்களிலும் பற்றுக்குறை ஏற்படுத்தற்குக் கவனமற்ற நிருவாகக் கொள்கையும், மக்களின் சோம்பல் தனமுமே காரணங்களென வான்கோவன்ஸ் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள நிலங்களை நன்கு பயன்படுத்தி, இங்கு மட்டுமன்றி ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையின் பகுதிகளுக்குமே தன்னிறைவு ஏற்படுத்தலாமென அவர் குறிப்பிட்டுள்ளார். நெல் உற்பத்தியினை விஸ்தரிப்பதற்குத் தென்னிந்தியாவிலிருந்து மாடுகளை இறக்குமதி செய்தனர். மேற்குறிப்பிட்டவாறு விவசாயப் பெருக்கம் ஏற்படின் டச் கம்பெனிக்கு நன்மைகள் ஏற்படுமெனக் கருதப்பட்டது. மேலும், சோழ மண்டலக் கரையிலிருந்து ஆடைநெய்வோர், சாயம் போடுவோர் இங்கு கொண்டுவரப்படுதல் மூலம் ஆடை உற்பத்தி அதிகரிக்குமெனவும் அவர்கள் கருதினர். இவற்றின் விளைவாக "அரிசிக்கும் ஆடைக்கும் பிறநாடுகளிலே தங்கியிருக்கத் தேவையில்லை வருமானமும் அதிகரிக்கும்" எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் விவசாய விஸ்தரிப்பிற்காகப் பழைய நீர்ப்பாசன வசதிகளை யாழ்ப்பாணத்தில் அவர்கள் திருத்தினர். புதிய சிறு குளங்கள் அமைத்தனர்; தாய் நாட்டிற் போன்று யாழ்ப்பாணத்திலும், வேறு சில இடங்களிலும் கடலிலிருந்து நிலங்களை மீட்டு விவசாயம் செய்ய முற்பட்டனர். சிறெய்ட்ர் தேசாதிபதியாக இருந்த காலத்திலே வடமராச்சியிலுள்ள கடலேரிக்குள் உவர் நீர் வராது தடுத்தற்கு அணைகள் கட்டி அதனை நன்நீர் ஏரியாக்கி விவசாயம் செய்வதற்கு ஒரு விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதற்கு அணைகட்டுவது பற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவின. போர்த்துக்கீசரிலும் பார்க்க ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்திலும், குறிப்பாக வன்னிப்பகுதியிலும் பருத்தியுற்பத்தியினை வலியுறுத்தினர். கைலாய வன்னியன் ஆண்டுதோறும் பெருந்தொகையான பருத்தி வழங்குவதாக வாக்களித்திருந்தான். ஒல்லாந்தர் அவனுக்கு உதவி செய்ய முன் வந்தனர். பருத்திச் செய்கையினை அத்தியவசியமாக வலியுறுத்த வேண்டுமெனவும், இதன் மூலம் போதிய ஆடைகளுக்கான நூல் கிடைக்குமெனவும் 17ம் நூற்றாண்டிலே கூறப்பட்டது.

புகையிலை :

புகையிலை உற்பத்தியும் கவனிக்கப்பட்டது இறக்குமதிப் புகையிலையிலும் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் புகையிலை உயர் ரகமானது. அதன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு ஒல்லாந்தர் இறக்குமதிப் புகையிலைக்கு 30% வரி விதித்தனர். இதனாலே உற்பத்தி அதிகரித்து, 18ம் நூற்றாண்டிலே புகையிலை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டமை பற்றித் தேசாதிபதி சிறெய்டர் குறிப்பிட்டுள்ளார்.

சாயவேர் :

யாழ்ப்பாணத்திலுள்ள வருமான மூலங்களிலே சாயவேரும் ஒன்றாகும். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் இது நன்கு சேகரிக்கப்பட்டது; அதனால் அவர்கள் லாபம் பெற்றனர். காரைதீவிலும், மன்னாரிலுமே மிகச் சிறந்த சாயவேர் கிடைத்தது. ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தில் இவ்விடங்களிலே கிடைத்தவற்றை தமது கம்பனிக்கு ஒதுக்கி வைத்தனர். ஏனைய இடங்களிலே கிடைத்தவற்றில் எட்டு மாதங்களில் 200 றிக்ஸ் டொலர் லாபம் பெற்றனர். டச்சுக் கப்பல்களுக்காகக் கம்பியும், கயிறும் உற்பத்தி செய்யப்பட்டன.

நெய்தல் :

அக்காலத்திலே நெய்தல் தொழில் மிக இழிவாகக் கருதப்பட்டமையாலே தான் அதிலீடுபடுவோர் தொகை மிகக் குறைவாயிருந்தது. எனவே, ஒல்லாந்தர், தென்னிந்தியாவிலிருந்து நெசவு தொழிலாளர் இங்கு வருதற்கு ஊக்கமளிக்க வேண்டுமென கூறப்பட்டது. அவர்களுக்கு மத சுதந்திரமும் அளிக்கப்பட்டது. மேலும், இங்குள்ள உயர் சாதியினரையும்அத்தொழிலில் ஈடுபடச்செய் வேண்டுமெனக் கூறப்பட்டது. அடிமைகளும் நெய்தல், பட்டுநூற்பூச்சி வளர்த்தல், சாயம் போடுதல் முதலியனவற்றில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மல்பரிச்செடிப் பயிர்ச்செய்கைப் பரிசோதனை :

யாழ்ப்பாணத்திலே மல்பரிச் செடியினை உண்டு பண்ணிப் பட்டுநூற் பூச்சி வளர்த்தற்கான பரிசோதனைகளை ஒல்லாந்தர் மேற்கொண்டனர். ஆனால் இத்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

பெருந்தோட்டப் பயிச்செய்கை :

ஒல்லாந்தர் ஆட்சியின் காலத்திலே தான் இலங்கையிலே பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையின் ஆரம்பம் ஏற்பட்டது. தமது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியிலே கறுவாவினை அவர்கள் பெருந்தோட்ட முறையில் உற்பத்தி செய்ய முயற்சித்தனர். நெடுங்காலமாகக் கறுவா இயற்கையாகவே வளர்ந்தது. அவர்கள் அதனைச் சேகரித்து வந்தனர். ஆனால் காலம் செல்லக் கண்டியரசர்களின் ஒத்துழையாமையாலும், பிறவற்றாலும் அவர்கள் தாமே அதிலே தன்னிறைவினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அதனை பயிரிட்டு வெற்றி கண்டனர். இதற்காக அதனைப் பெருந்தோட்ட முறையில் உற்பத்தி செய்ய முற்பட்டனர். இவ்வாறு தான் கொழும்புக் கறுவாத் தோட்டம் தோன்றியது. ஒல்லாந்தர் இதனைப் பின்னர் கிழக்கிந்திய தீவுகளிலும் பயிரிட்டு வெற்றி கண்டனர். கோப்பிப் பயிர்ச் செய்கையினையும் அவர்களே முதன் முறையாக இலங்கையில் அறிமுகம் செய்தனர். இதுவே, பின் 19ம் நூற்றாண்டிலே பிரித்தானியர் காலத்திலே பிரதான பெருந்தோட்டப் பயிராயிற்று. மிளகு, தென்னை முதலியனவும் பெரிய அளவிலே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முறையில் பயிரிடப்பட்டன. இவற்றினையும் அவர்கள் நன்கு ஊக்குவித்தனர்.

போக்குவரத்துச் சேவைகள் :

இலங்கையில் ஏற்கனவே நிலவிய பாரம்பரிய போக்குவரத்துச் சேவைகள் பெருமளவு தொடர்ந்து இவ்விரு சாரார் ஆட்சிக் காலங்களிலும் நிலவின. வண்டிகள், குதிரைகள், பல்லக்கு, யானை, படகு சேவைகள் முதலியன குறிப்பிடற்பாலன. பிரதான இடங்களை இணைக்கும் பாதைகள் தொடர்ந்து இருந்து வந்தன. குறிப்பாக டச்சுக்காரர் போக்குவரத்துச் சேவைகள் சிலவற்றைத் திருத்தியமைத்தனர், சில புதிய தெருக்கள் அமைக்கப்பட்டன. வண்டிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பிரயாணம் செய்தனர். சிற்ருறுகளை கடத்தற்குப் பாலங்கள் அமைக்கப்பட்டன. கடலில் பெரிய கப்பல்கள் சேவையிலீடு படுத்தப்பட்டன. தரைமார்க்க, கடல் மார்க் கப் போக்குவரத்துச் சேவைகள் ஓரளவா வது சீர்ப்படுத்தப்பட்டமை பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி அவர்களின் ஆதிக்கத்தினை வலுப்படுத்தற்கும், பொரு ளாதாரத் தன்னயப்படுத்தற்கும் உதவிற்று. துறைமுக நகரங்கள் வளர்ச்சியுற்றன.

வரவு செலவுகள் :

இருசாராரும் கோட்டை, யாழ்ப்பாணப் பகுதிகளின் வரவு செலவுகளைப் பெரும்பா லும் தனித்தனியாகவே கவனித்தனர். போர்த்துக்கீசர் ஆட்சியின் போது 1618 – 1628க்கும் இடையிலுள்ள காலப்பகுதியிலே சமாதானம் நிலவிய போது (சிறு செலவு களை விட்டு) ஆண்டுதோறும் சராசரி வரு மானம் 64017 செரவின்களாகும் அடுத்து பத்து ஆண்டுகளில் இத்தொகை242,250ஆக அதிகரித்தது. 1620ம் ஆண்டினைத் தொடர் ந்த ஆண்டுகளிலே முதல் தடவையாக இலங் கையின் வரவு செலவுகளிலே பற்ருக்குறை யற்றுப் போயிற்று. 1621 - 1638 வரைக் கோட்டை, யாழ்ப்பாணச் செலவுகள் உள் நாட்டு வருமானங்கள் மூலமாகச் சமாளிக் கப்பட்டன. ஆனல், கண்டிப் போருடன் மறுபடியும் செலவு அதிகரித்தது. பொது வாகப் போர்த்துக்கீசர் தமது ஆட்சியின் போது நிலைமை நன்ருயின் ஆண்டுதோறும் 61,337 செரவின்ஸ் பெற்றனர். 1634லே கறுவா தவிர்த்துப் பிற பொருட்களினுலே 40,774 செவின்ஸ் பெற்றனர். 18ம் நூற் ருண்டுப் பிற்பகுதியிலே எல்லா மூலங்களா லும் ஒல்லாந்தருக்கு 2,150,000 ரிக்ஸ் டொலர் வருமானம் கிடைத்தது. இலங்கை வரவு செலவுத் திட்டத்திலே 4000 பவுண் (400,000 ரிக்ஸ்டொலர்) குறைபாடு காணப்படினும், உண்மையிலே இலங்கை சார்பில் 11லட்சம் பவுண் வருமானம் காணப்பட்டது. இருசாராரும் தத்தம் நாணயங்களைப் புழக்கத்திலே விட்டிருந்த னர். டச்சு நாணயங்களிலே அவர்களு டைய வர்த்தகக் கம்பனியைக் குறிக்கும் VOC பொறிக்கப்பட்டிருந்தது.

பல நூற்ருண்டுகளாக இலங்கையிலே நிலவிய பொருளாதார அமைப்பிலே மிகக் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்கனவே குறிப் பிட்டவாறு போர்த்துக்கீசர் ஆட்சியின் போது ஏற்பட்டது. அதாவது பிரதான வரு மானம் வியாபாரப்பொருள் — கறுவா விற் பனையிலிருந்து கிடைத்தது. மேலும், இவர் களுடைய ஆட்சியின் போது தான் முதன் முதலாகக் கடல் சார்பான கறுவா வியா பாரத் தனியுரிமையினை அரசாங்கம் மேற் கொண்டது. தொடர்ந்து டச்சுக்காரரும் இதே கொள்கையினை மேலும் விரிவாகப் பின்பற்றினர்.

இவ்வாறு இருசாராரும் இலங்கையிலே தத்தம் வருமானத்தினை அதிகரிக்க முயற் சித்தாலும் டச்சுக்காரரே திட்டவட்ட மான பொருளாதாரக் கொள்கையினைப் பின்பற்றினர். பழைய விவசாய முறைகள் உற்பத்திகளை ஊக்கிப் பெருக்குவதோடு, புதிய அம்சங்கள் சிலவற்றையும் அறிமுகம் செய்தனர்.

—O—O—O—

## தேறிய பெயர்வு

ஒரு குறித்த காலத்தில் ஒரு பிரதேசத்தின் உட்பெயர்வோர் தொகைக்கும் வெளிப்படுவோர் தொகைக்குமிடையிலான வித்தியாசம்(இது நேர்க்கணியமாகவோ, அல்லது எதிர்க்கணியமாகவோ இருக்கலாம்). உதாரணம் :—

1970இல் இலங்கையின் தேறிய பெயர்வு = உட்பெயர்ந்தோர் தொகை — வெளிப்பெயர்ந்தோர் தொகை

= 89,956 — 100,325

= 10369

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்
# European Economic Community (EEC)

மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமக்கிடையேயான பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருட்கள், சேவைகள், மூலதனம், மக்கள் எல்லைகளுக்கிடையில் எந்தவிதத் தடங்கலும் இன்றி அசைவுற வேண்டுமென்னும் குறிக்கோளுடன் 1957ம் ஆண்டு பங்குனித் திங்கள் 27ம் திகதி றோம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் உருவாகியது. இதன் ஆரம்பகால அங்கத்துவ நாடுகளாக பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மன் ஜனநாயக குடியரசு (FRG), இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து ஆகிய ஆறு நாடுகள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. 1973இல் டென்மார்க், அயர்லாந்து குடியரசு, ஐக்கியராச்சியம் ஆகிய மூன்று நாடுகளும் சமூகத்தின் அங்கத்தவர்களாகின. இதனைத் தொடர்ந்து 1982இல் கிரேக்கமும் 1986இல் போர்த்துக்கல், ஸ்பெயின் என்பனவும் அங்கத்துவநர்டுகளாயின தற்போது 12 நாடுகள் ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் அங்கத்துவ நாடுகளாக இருக்கின்றன.

சமூகம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் ஐரோப்பிய முதலீட்டு வங்கியும், ஐரோப்பிய சமூக நிதியமும், அங்கத்துவ நாடுகளில் முதலீட்டுத் தேவைக்கான இலகு கடன்களை வழங்கவும், சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி வழங்கவும் ஆரம்பிக்கப்பட்டது. அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான சுங்கவரியிறுப்புக்களில் இருந்த வேறுபாடுகளை போக்கி பெருமளவுக்கு ஒரு சுங்கக் கூட்டாக மாற்றமடைவதில் சமூகம் பெற்றது. எனினும் பல்வேறு கொள்கைகளுக்கிடையில் இணக்கமேற்படாமல் இருப்பதினால் இன்னும் அதனுடைய குறிக்கோள்களை எய்தவில்லை, குறிப்பாக பொது விவசாயக் கொள்கையில் விசேடமாக பிரிட்டன் அங்கத்துவநாடாக சேர்ந்து கொண்டதின் பின்னர் இணக்கம் காண்பதில் இழுபறிகள் வெளிப்படையாயின. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பூகோள ரீதியான எல்லைகளை தாண்டி எல்லா நாடுகளும் ஒரு எல்லைக்குட்பட்டது போல் சகல விடயங்களிலும் அமையவேண்டு மென்பதை இப்போது பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. 1992இல் இந்த இலக்கை அடையவேண்டும் என்பதில் அரசாங்கங்களும் பொருளியலாளர்களும் முழுமூச்சாக இயங்கி வருகின்றனர். கடந்த முப்பது ஆண்டுகளில் அடைய முடியாத இலக்குகளை அடுத்துவரும் நான்கு ஐந்து ஆண்டுகளில் அடைவதென்பது அவ்வளவு இலகுவானதல்ல. எனினும் ஒரு ஐரோப்பா எல்லைகளைக் கடந்து இயங்க வேண்டியதன் அவசியத்தை அங்கத்துவநாடுகள் உணர்ந்திருப்பதுடன் அண்மைக்கால சூழ்நிலைகளும் சுதந்திரமான ஐரோப்பிய சந்தை உருவாவதற்கு சாத்தியமாக இருப்பதனால் 1992இல் எல்லையற்ற மேற்கு ஐரோப்பாவை உருவாக்கலாம் என்று நம்பப்படுகிறது. எனினும் பல நாடுகள் தமது இறைமையை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தினால் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கத் தயங்குகின்றன. தங்குதடையற்ற எல்லையற்ற சுதந்திரமான ஒரு மேற்கு ஐரோப்பா உதயமாகுமா என்பதை 1992 வரை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார விருத்தியில் 'மகாவலி' பெருந்திட்டத்தின் பங்குபற்றிய ஒருநோக்கு

S. T. B. இராஜேஸ்வரன், M. A.

இலங்கையின் எதிர்கால பொருளாதார விருத்தி மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் வெற்றியிலேயே பிணைக்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது. இத் திட்டம் இதுவரையில் இலங்கையில் எத்திட்டமும் ஈர்த்திராத அளவிற்கு பாரிய மூலவளத்தினை உறிஞ்சியுள்ளது. இப் பெருந்திட்டம் உறிஞ்சிக் கொண்ட மூலவளங்களின் பாரிய அளவுடன் ஒத்துப்போகக்கூடிய அளவிற்கு அது பொருளாதார நன்மைகளைத் தருமா என்ற கேள்வி தற்போது எழுகின்றது. தற்போது இலங்கை எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சனைகளைவிட எதிர்காலங்களில் ஏற்படப் போகும் பிரச்சனைகள் பல மடங்குடையதாக இருக்கும் என்பதில் கருத்துவேறுபாடு இருக்காது. இந்நிலையில் மகாவலி பெருந்திட்டம் போன்ற பாரியமுதலீடுகளை முடக்குகின்ற அபிவிருத்தி திட்டங்கள் பூரண வெற்றியை அடையாத நிலை ஏற்படுமாயின் அது இலங்கையின் பொருளாதாரத்தின் அடிநிலையையே நிலைகுலையச் செய்துவிடும். மேலும், மீண்டும் மேலெழ முடியாத பொருளாதாரவீழ்ச்சிக்கும் இட்டுச்செல்லும். எனவேதான் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் பாரிய அபிவிருத்தி திட்டங்களை தெரிவுசெய்யும் பொழுதிலும், வடிவமைக்கும் பொழுதிலும், அமுலாக்கம் செய்யும் பொழுதிலும் மிகக் கூடிய கவனத்தைச் செலுத்தவேண்டியது அவசியமாகின்றது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் மகாவலி பெருந்திட்டத்தின் அனுபவங்கள் இத்திட்டம் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை கோடிட்டுக் காட்டுவதாகவுள்ளது. இந்நிலையிலேயே மகாவலிபோன்ற பெருந்திட்டங்கள் எமக்கு அவசியமா என்ற சர்ச்சைகளும் எழுகின்றது. திட்டங்கள் சிறப்பாக இருப்பினும் அவற்றை அமுலாக்குவதில் இடம்பெறும் இடர்கள் திட்ட இலக்குகளையே திசை திருப்பி விடுகின்றன. மேலும் மகாவலி போன்ற பெரும் திட்டங்களை குறுகியகாலங்களில் அமுலாக்க முற்படும்பொழுது ஏற்படும் விளைவுகள் எதிர்பாராத விதமாக எமக்குப் பாதகமாகவும் அமைந்து விடுகின்றன. இந் நிலையில் மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் நீண்ட செயற்திட்ட வரலாறுகளை மதிப்பிடும் பொழுதுதான் அவை தமது குறித்த இலக்குகளை அடைகின்றனவா அல்லது வேறு எங்கோ எம்மை இட்டுச் செல்கின்றனவா என்பது புலனாகும். இம் மதிப்பீடுகள் மூலமே எமது பொருளாதார அபிவிருத்தியில் இத்தகைய திட்டங்களின் பங்குபற்றி விளங்கிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலப் பெருந்திட்டம்

இலங்கை மக்களின் உணவுத்தேவையை முழு அளவில் நிறைவேற்றுவதை அடிப்படையாகக் கொண்டு வரண்ட பிரதேசத்தில் பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தியை மேற்கொள்வதற்காகவும், இதனுடன் இணைந்த முறையில் காணிப்பங்கீடு, குடியேற்றம், மின்வள அபிவிருத்தி போன்றவற்றையும் செயற்திட்டமாகக் கொண்டு மகாவலி மூலப் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டது. 1960 களில் பழைய திட்டம் ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஸ்தாபனத்தினுல் வகுக்கப்பட்டதெனினும் 1968 ம் ஆண்டில் ஐ.நா.அ. திட்ட ஸ்தாபனமும் உணவு விவசாய ஸ்தாபனமும் இத் திட்டத்தை மீள வடிவமைத்தன. இத்திட்டம் தயாரிக்கப்பட்ட காலங்களில் இலங்கை மக்களுக்கான தானிய மொத்தத் தேவை (கோதுமை தவிர்த்து) 20 இலட்சம் தொன்களாக கணிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் 23.5 இலட்சம் ஏக்கர்தேறிய பயிர் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு தேவையாக இருந்தது. இப்பரப்பளவை வைத்திருப்பதற்கு 28 இலட்சம் ஏக்கர் பண்படுத்திய காணி தேவைப்படும் என்றும் பயிர்ச்செய்கையில் இருக்கும் நிலம் போக புதிய நிலங்களின் பரப்பளவு 9 இலட்சம் ஏக்கர் புனரமைக்கப்பட வேண்டியிருந்தது. மேலும் இந் நிலப்பகுதிகளுக்கும் ஏற்கனவே இருக்கின்ற விவசாயக் காணிகளுக்கும் தொடர்ச்சியான நீர்ப்பாசனமும் அவசியமாக இருந்தது. ஆகவே பழைய மகாவலித் திட்டத்தின் முக்கியத்துவம் விவசாயத்திற்கும், நீர்ப்பாசனத்திற்கும் முதலிடம் அளிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிடலாம்.

மகாவலி கங்கை வருடா வருடம் கடலில் கொண்டுபோய்ச் சேர்க்கும் 64 லட்சம் கன அடி நீரில் ஏறத்தாழ 43 லட்சம் கன அடி நீரை வரண்ட பிரதேசத்தில் பயன்படுத்தக்கூடிய வகையில் மூலப் பெருந்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஏறத்தாழ 500 மெகாவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யும் பல மின்சார நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும், இப்பகுதியில் தங்கள் வாழ்க்கையை வளம்பெற அமைத்துக்கொள்ளக்கூடிய முறையில் ஏறத்தாழ 5 இலட்சம் மக்களை குடியேற்றுவதற்கும் இத்திட்டத்தில் வழிகோலப்பட்டிருந்தது.

புதிய காணிகளுக்கும் பழைய காணிகளுக்கும் சீரான நீர்ப்பாசன வசதியை வருடம் முழுவதும் கிடைக்கும் விதத்தில், 30 வருட காலத்தில் படிப்படியாக நிறைவேற்றக்கூடிய முறையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன் ஏறத்தாழ 70-80 நீர்த்தேக்கங்களும் அமைக்கப்படவேண்டியிருந்தது.

1970ம் ஆண்டு பெப்ருவரி மாதம் இத்திட்டத்தின் முதற்கட்ட வேலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1977 வரையில் மெதுவாக செயற்பட்ட இத்திட்டம் அதன்பின்னர் மறு வடிவமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

## மூலப்பெருந்திட்ட மாற்றம்

1970 களின் ஆரம்பத்தில் எண்ணெய் விலைகள் எதிர்பாராத வகையில் சர்வதேச சந்தையில் உயர்வடைந்ததைத் தொடர்ந்து எரிபொருள் நெருக்கடி இலங்கையின் முக்கிய பிரச்சனையாக மாற்ற முற்றது. இலங்கையின் எதிர்கால சக்திப் பிரச்சனை சமாளிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கத்தோடு மகாவலி மூலப்பெருந்திட்டமும் அதற்கேற்ப மாற்றமுற்றது. பழைய திட்டத்தில் நீர்ப்பாசனத்துக்கு இருந்த முக்கியத்துவம் இப்போது நீர்மின்சாரத்துக்கு வழங்கப்பட்டது. இக் கட்டத்தில் செய்யப்பட்ட முடிவு பொருளாதாரக் காரணங்களின் பேரில் செய்யப்பட்டதாகும். ஆகக்குறுகிய காலத்தில் ஆகக்கூடிய எரிசக்தியைப் பெறுவது என முடிவு செய்யப்பட்டிருந்தது.

மேலும், உலகம் பூராவும் நிலவிவரும் மிக உயர்ந்த பணவீக்க நிலைமை எவ்வளவிற்கு ஒரு செயற்திட்டத்தின் அமுலாக்கம் தாமதமடைகின்றதோ அவ்வளவிற்கு அதன் நிருமாணச் செலவும் அதிகரித்தே செல்லும். பணவீக்க அதிகரிப்பு வீதத்தை ஆண்டொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கு 10./' என குறைத்து நோக்கினுற்கூட ஒவ்வொரு எட்டு ஆண்டுகளிலும் செலவுகள் இருமடங்காக அதிகரிக்கும். இந்நிலையில் திட்டத்தின் பலாபலன்களை விரைவாக அடைவதற்கு திட்டத்தினை சுருக்கி வடிவமைத்து துரிதப்படுத்தல் அவசியம் என உணரப்பட்டது.

பெருந்திட்டம் மகாவலிகங்கை வடிநிலத்தை 30 வருட காலப்பகுதியில் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாட்டைத்தான் அளித்திருந்தது. ஆனுல், இத்தகைய ஒரு நீண்ட நிகழ்ச்சித்திட்டம் நாட்டை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு ஒரு பரிகாரத்தை வழங்கமாட்டாதென கருதப்பட்டது. உணவும் அது தொடர்பான இறக்குமதிகளிலும் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவு செய்யப்படுகின்றது. எனவே, நீர்ப்பாசன வழியிலான கமத்தொழிலை துரிதமாக அதிகரிப்பதனுல் அது வேலைவாய்ப்பை மட்டுமல்ல பொருளாதார அபிவிருத்தியின் வேறு துறைகளில் வெளிநாட்டுச் செலாவணி மூலவளங்களை முதலீடு செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் எனவும் புதிய வழியில் சிந்தனை செய்யப்பட்டது. எனவே தான் பழைய மகாவலித்திட்டம் குறுங்காலத்தில் முடிவடையக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டு துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித்திட்டம் என அழைக்கப்பட்டது.

**துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி :**

மகாவலி பெருந்திட்டத்தில் கண்டுள்ள முக்கிய செய்திட்டங்களை மட்டுமே விரைவாக்கி சாத்தியமானவரை மிகக் குறுகிய காலத்திற்குள் மகாவலி திட்டத்தினை நிறைவேற்ற 1977ம் ஆண்டு முடிவில் அரசாங்கம் தீர்மானித்து செயற்பட ஆரம்பித்தது. அரசாங்கத்தின் மேற்படி தீர்மானம் நெதர்லாந்து 'நெடிகோ' ஆலோசகர்களின் சிபாரிசின் அடிப்படையில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி திட்டத்தில் புதிய குடியேற்றங்களை விரைவாக ஸ்தாபிக்கவும், விவசாய அபிவிருத்திக்காகவும், நீர்ப்பாசன வசதிகளுடன் ஆற்றேட்டத் திசையில் இருக்கும் பகுதிகளில் உள்ள காணிகளைப் பெருமளவிற்கு அபிவிருத்தி செய்வதற்காக நீர்மின் இயந்திரத் தொகுதிகளுடன் தொடர்ச்சியாக நீர்த் தேக்கங்களை துரிதமாக நிர்மாணிக்க வழிவகுக்கப்பட்டிருந்தது.

இத்திட்டத்தில் ஏறக்குறைய 3,40,000 ஏக்கர் காணிகளின் நீர்ப்பாசன விவசாய உள்ளமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஆறு முக்கிய நீர்த் தேக்கங்களையும், ஐந்து மின்சார நிலையங்களையும் நிர்மாணிப்பதற்கும் இத்திட்டம் வழிகோலியிருந்தது. இத்திட்டத்தில் 400 மெகாவாட் நீர்மின் சக்தி உற்பத்தி செய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

'நெடிகோ' அறிக்கையில் முறையான நீர் முகாமையுடன் கொத்மலை, விக்டோரியா, மதுறுஓயா நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பது மட்டும் காணிப்பகுதிக்கு நீர்ப்பாய்ச்சவும், துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு நீர் மின் சக்தியை உற்பத்தி செய்யவும் போதும் எனவும் கூறப்பட்டிருந்தது. ஆனுல் 'ரந்தெனியகல' நீர்த்தேக்கமும் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆகவே விக்டோறியா, கொத்மலை, மதுறுஓயா, ரந்தெனியகல ஆகிய நான்கு முக்கிய வேலைத்திட்டங்கள், ஆற்றேட்டத்திசையில் திசைதிருப்புவேலைகள், பழைய திட்டத்தின் 'B' 'C' தொகுதியில் உள்ள பகுதிகளையும் 'H' தொகுதியின் எஞ்சிய பகுதிகளையும் 'G' தொகுதியில் உள்ள சில காணிகளையும் அடக்கிய ஆற்றேட்டத்திசையில் உள்ள பகுதிகளின் நீர்ப்பாசனமும் அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின் சுருக்க வேலைத்திட்டமாகும்,

மகியங்கனையில் இருந்து திரிகோணமலை வரை நீண்ட மகாவலிச் சமவெளிக்கு துரிதப்படுத்தப்பட்ட திட்டம் நீர் வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வரும் புதிய காணிகளின் பரப்பளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-1ல் அண்ணளவாகத்தரப்பட்டுள் ளது. அட்டவணை-II ல் இத் திட்டத்தின் மூலம் நீர் மின்சக்தி உற்பத்தி விபரங்கள் தரப்பட்டுள்ளது.

அட்டவணை I

**புதியநீர்ப்பாய்ச்சலுக்கு உட்படுத்தப்படும் காணிகள்**

| | | |
|---|---|---|
| தொகுதி 'ஏ' | | 89,000 ஏக்கர் (36,000 ஹெக்டயர்) |
| தொகுதி 'பி' | — | 1, 18, 000 ஏக்கர் (48, 000 ஹெக்டயர்) |
| தொகுதி 'சி' | — | 59, 000 ஏக்கர் (24, 000 ஹெக்டயர்) |
| தொகுதி 'டி' | — | 47, 000 ஏக்கர் (19, 000 ஹெக்டயர்) |
| தொகுதி 'ஜி' | — | 7000 ஏக்கர் (2800 ஹெக்டயர்) |
| | | 1, 26, 000 ஹெக் / 3, 12, 000 ஏக்கர் |

அட்டவணை - II

**நீர் மின்சக்தி உற்பத்தி**

| | | |
|---|---|---|
| கொத்மலே | — | 134 மெகாவாட் (67 மெகாவாட் உற்பத்தி பின்னர் இடம் பெறும்) |
| விக்டோரியா | — | 210 மெகாவாட் (மேலும் 210 மெகாவாட் பின்னர் இடம் பெறும்) |
| ரந்தெனிகல | | 126 மெகாவாட் (மேலும் 49 மெகாவாட் வேறுவழிகளில் உற்பத்தி செய்யப்படவுள்ளது) |

மகாவலித்திட்டம் நாட்டின் வளர்ச்சிகள் மீது விடுக்கும் கோரிக்கையைக் கவனிக்கு மிடத்து அதுவே மிகப் பிரமாண்டமான ஒரு திட்டமாக இருக்கின்றது. திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் குறித் துள்ள காலக்கெடு மேலும் அதன் முக்கி யத்துவத்தை அதிகரிக்கச் செய்துள்ளது எனலாம். இத் திட்டத்திற்கான செலவுகள் 1968ல் 600 கோடி ரூபா் தேவைப்படும் என்றும் பின்னர் 1973 ல் பணவீக்க நில மை காரணமாக 2500 கோடி ரூபா செல வாகும் எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனல் 1986ம் ஆண்டு வரை இத்திட்டத் திற்கு ஏற்பட்ட செலவு 3800 கோடி ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயும் தாண்டிவிட்டது. 1979 — 1986 காலப்பகுதியில் மட்டும் 3000 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. மேலும் செய்து முடிக்கப்படவேண்டிய வேலைகளுக்காக 2000 கோடி ரூபா வரை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மிகப் பிரமாண்டமான செலவு செய்து முடிக்கப்பட இருக்கும் இத்திட்டம் எமது பொருளாதாரத்தினை எம் மட்டத்திற்கு உயர்த்தும் என்பதும், எதிர்பார்த்த பலன்களைத்தருமா என்பதும் பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியது. ஆனாலும் மகாவலி செய்திட்ட அநுபவங்கள் கற்றுத்தரும் பாடங்களில் இருந்து இத்திட்டம் எமது பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களை ஓரளவாவது மட்டிட முடிகின்றது.

**மகாவலி அபிவிருத்திப்பிரதேச சாதனைகளும் பிரச்சனைகளும்**

இன்று வரை 4000 கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் அபிவிருத்தித்திட்ட சாதனைகள் பட்டியல் போட்டு பலவாறுக காட்டப்படுகின்றது. திட்டத்தின்படி நான்கு தலை வேலைகளும் (விக்டோரியா, மதுறுஓயா கொத்மலை, ரந்தெனிகல) பூரணப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது புதியகாணிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டு வருகின்றது. நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் 20% ஐ செயற்திட்டப்பகுதியே உற்பத்தி செய்கின்றது, எனவும், உபஉணவுப் பயிர்களில் 20% மும் மிளகாயில் 53% மும் இப்பகுதியில் இருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்பகுதியில் ஹெக்டயர் ஒன்றிற்கான நெல்விளைச்சல் 5·0 தொன்னிலும் கூடுதலாக உள்ளது என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மகாவலிதிட்டத்திற்கு முன்னர் நாட்டில் கிடைத்த மின்சார விநியோகம் திட்ட அமுலாக்கலின் பின்னர் 100% அதிகரித்திருப்பது திட்டத்தின் முக்கிய சாதனை என்று குறிப்பிடப்படுகின்றது. தேசத்தின் மின்சார அமைப்பிற்கு 469 மெகாவாட் நீர்மின்வலு புதிதாகச் சேர்க்கப்பட்டதை அடுத்து ஏற்கனவே 2300 கிலோ வாட் வலு மணித்தியாலங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதனால் வருடத்தில் 325 கோடி வெளிநாட்டு செலவாணி மீச்சப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் சக்தியில் 40%க்கும் கூடுதலான அளவினை 1986ல் மகாவலித் திட்டம் வழங்கியுள்ளது.

துரிதப்படுத்தப்பட்ட மகாவலித் திட்டத்தில் குடியேற்றம் மிக முக்கியமான அம்சமாக குறிக்கப்பட்டுள்ளது. 1977 — 83 காலப்பகுதியில் (இலக்கு) 1, 40, 000 குடும்பங்கள் குடியமர்த்தப்படுவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 1985 வரையில் 7, 808 குடும்பங்களும் 1987 செப்ரெம்பர் வரை 56,000 குடும்பங்களுமே குடியமர்த்தப்பட்டுள்ளனர். குடியேறிய விவசாயிகளின் வருமான மட்டங்கள் ஏனைய பகுதி விவசாயிகளிலும் பார்க்க உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலே, சுருக்கமாக கோடிட்டுக் காட்டிய அம்சங்களே இதுவரை அடையப்பட்ட இலக்குகளாகும். இங்கு முக்கிய பிரச்சனை என்னவெனில் இத்திட்டம் முழுவெற்றியடையும் பொழுதுதான் எமது பொருளாதாரம் உயர்வடையும். முழுவெற்றியல்லாமல் ஒரு பகுதி வெற்றியோ, பல நோக்கங்களில் ஒரு சில நோக்கங்களோ வெற்றியடைந்தாலோ எமது பொருளாதாரத்தின் அடித்தளமே ஆட்டங்காண வாய்ப்பேற்படும். இதுவரை இடம்பெற்ற செயற்திட்ட அனுபவங்கள் இத் திட்டத்தின் சிக்கல் வாய்ந்த பல பிரச்சனைகளை வெளிக்கொணர்ந்துள்ளது. இப் பிரச்சனைகள் முழுத் திட்ட இலக்குகளையே மாற்றி அமைக்கக் கூடியது. வளவை, கல்ஓயா, திட்டங்களின் தோல்வி வரிசையில் மகாவலியும் சேர்க்கக்கூடியது. ஏற்கனவே அபிவிருத்தி அடைந்தபகுதிகளில் செய்யப்பட்ட பல மாதிரி ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் சில முக்கிய பிரச்சனைகள் இங்கு கோடிட்டுக் காட்டப்படுகின்றன. அவையாவன

* மகாவலித்திட்டத்தின் முழு வெற்றியும் அப்பகுதிகளில் வழங்கப்படும் சமூக பொது முதலீட்டு வசதிகளிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியுள்ளது. திட்டத்தில் வடிவமைக்கப்பட்டது. போல இத்தகைய சமூகப் பொது முதலீட்டு வசதிகள் பல குடியிருப்புப் பகுதிகளில் சிறப்பாக இன்னும் அமையவில்லை. (பாடசாலை, போக்குவரத்து அமைப்பு, விவசாய பதனிடுதல்,களஞ்சியங்கள்,ஆரம்ப சுகாதார வசதிகள், தடுப்புச் சேவை, மருத்துவ சேவைகள்; வீடமைப்பு, குடிநீர், வடிகாலமைப்பு போன்றன)

* வர்த்தக அமைப்புக்கள் சிறப்பாக இன்னும் வளர்ச்சி அடையவில்லை. (கடைகள், வங்கிகள், சந்தை அமைப்புக்கள்)

* காணி வழங்கப்பட்ட விவசாயிகள் பலர் காணியிழந்து இருப்பதுடன் விவசாய கூலிக் குழுக்களாகவும் மாறி வருகின்றனர். மேலும் கட்புலனுகா குத்தகை விவசாயிகள் குழு ஒன்றும் 'அந்தே' பயிரிடும் வகுப்பொன்றும் மெதுவாக தலை தூக்கிவருகின்றது.

* விவசாயத்தின் வெற்றி முறையான நீர்ப்பாசனத்தில் தங்கியுள்ளது. இப் பகுதிகளில் வரட்சிக்காலங்களில் நீர் விநியோக சீர்குலைவுகள் பயிர்செய்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் தமது எண்ணப்படி பயிர் செய்கையை மேற்கொண்டபடியினுல் நீர்த்தேவை நிறைவேற்றப்படவில்லை. இத்தகைய நீர் விநியோகம் — பண்ணை முகாமைத்துவம் போன்றவற்றில் ஒழுங்கீனம் குறைபாடு பெருமளவு அவதானிக்கப்பட்டுள்ளது.

* பல குடியேற்றவாசிகள் பகுதிநேர குடியேற்றவாசிகளாக மாறிவருகின்றனர்.

* கைத்தொழில் நடவடிக்கைகள் (விவசாயம் சார்ந்த)எதிர்பார்த்தஅளவுவெற்றி அளிக்கவில்லை.

* வருமான ஏற்றத்தாழ்வினுல் பலமட்டக் குழுக்கள் உருவாகிவருகின்றன.

மேலே சுருக்கமாக கோடிட்டுக் காட்டப்பட்ட விடயங்கள் உரியமுறைப்படி தீர்க்கப்படாதவிடத்து திட்டத்தின் இலக்குகளே மாற்றமடைந்து இலங்கையின் எதிர்கால நலனுக்கே ஆபத்து விளைவிப்பதாக அமையலாம்.

### மகாவலித் திட்டமும் இலங்கையின் எதிர்கால நிலையும்

மகாவலித் திட்டத்தின் பரிமாணம், இலக்குகள், சமூக பொருளாதார நலன்கள் என்பனவற்றின் பின்னணியில் அணுகும் போது நமது நாட்டின் இலட்சக்கணக்கான மக்களின் சுபிட்சம் நிறைந்த எதிர்காலம் ஒன்றை சிருஷ்டிப்பதாகவே இத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பது புலனுகின்றது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு, உணவு இறக்குமதியில் செலவிடப்படும் பாரிய அந்நிய செலாவணியை மீதப்படுத்தல், இலங்கை எதிர்நோக்கும் சக்திநெருக்கடியை சமாளித்தல், குடியேற்றம் போன்ற இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச் செயற்திட்டம் எதிர்பார்த்த விளைவுகளை வழங்குமா என்பது பலரின் மத்தியில் கேள்வியாக எழுந்துள்ளது. இத்தகைய சந்தேகம் இதுவரை நிகழ்ந்து முடிந்துள்ள அபிவிருத்திப் பகுதிகளில் காணப்பட்ட அனுபவங்களின் விளைவாக எழுந்துள்ளது. மகாவலி செயற்திட்டப்பகுதிகளில் செய்யப்பட்ட பல மதிப்பீட்டு ஆய்வுகள் பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளன. இதன் அடிப்படையில் நோக்கும் போதுதான் மகாவலி அபிவிருத்தியின் மூலம் இலங்கையின் பொருளாதாரம் பல மடங்கு உயரும் என்பது கனவாகிவிடுமோ என்றும், கல்லோயா, வளவை, வரிசையில் மகாவலியும் தோல்வியடைந்த திட்டங்களில் ஒன்றுகி விடுமோ என்றும் சந்தேகிக்க இடமுண்டாகிறது.

மகாவலி செயற்திட்டப் பகுதிகளில் நெல்லை மட்டும் பிரதான பயிராக உற்பத்தி செய்து கொண்டு ஏனைய உணவுசார்ந்த பொருட்களைத் தொடர்ந்து இறங்குமதி செய்வதினுல் அந்நியசெலாவணியை மீதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தல் (உணவு இறக்குமதிக்குப் பயன்படுத்தும்) என்பது தீர்ந்து விடக்கூடிய சுலப மான பிரச்சினை அல்ல. மேலும் நெல்லின் உற்பத்திக்கான உள்ளீடுகைப் பொருட்கள் (வளமாக்கிகள், கிருமிநாசினி, களைகொல்லிகள், இயந்திரங்கள்) தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. நெல்லின் உற்பத்திச் செலவில் இவை ஏறத்தாழ ⅓ பங்காகவும் இருக்கின்றன. இந்நிலையில் எவ்வாறு உணவு இறக்குமதி மூலம் வெளிப் போகும் செலாவணி முழுவதையும் மீதப் படுத்துவது என்பது கேள்விக்குரியது.

மேலும், செயற்திட்டப் பகுதிகளில் இடம்பெறும் உப உணவுப்பயிர்ச் செய்கை மூலம் தன்னிறைவு ஏற்படும்.' எனக் கூறப் படுகின்றது. ஆனல் இப் பிரதேசங்களுக்கு வெளியே இதுவரை காலமும் இடம்பெற்ற உப உணவுச் செய்கையில் பெரிய வீழ்ச்சியை ஏற்படுத்துவதற்காகவே இப்பகுதிகளில் உப உணவுச் செய்கை இடம் பெற்றிருக்கின்றது. என்று எண்ணத்தோன்றுகின்றது. மேலும் அண்மைக்கால அனுபவங்கள் மகாவலி செயற்திட்டப்பகுதிகளில் ஏற்கனவே மிள காய் செய்கை இடம்பெற்ற பகுதிகளில் தாடர்ந்து மிளகாய்ச் செய்கை இடம்பெற முடியாத அவலநிலை தோன்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திடீரென்று மண்வளத்தில் ஏற்பட்ட மாற்றம் இப்பயிர் நடவடிக்கைக்கு ஒரு கட்டுப்பாட்டை ஏற் படுத்தியுள்ளது. இதனல் மிளகாய்ச்செய்கை தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இப் பயிர்செய்கை பகுதிகளின் எதிர்காலம் என்ன என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மகாவலித்திட்ட அபிவிருத்திக்கு இது வரை 4000 கோடி ரூபாவரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2000 கோடி ரூபாவரையில் செலவு செய்யப்பட இருக்கின் றது. இதனல் நாட்டின் வெளிநாட்டுப் படு கடனின் அளவு அதிகரித்துக்கொண்டு போவதுடன் கடனுக்கான வட்டியும் அதி கரித்துக்கொண்டு போகின்றது. இந்நிலையில் மகாவலி அபிவிருத்திப்பகுதிகளில் இருந்து பெறப்படும் உற்பத்தி வெகு விரைவாக ஏற்பட்டாலொழிய இத்திட்டத்தினல் பெரிய பயன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. மேலும் இவ்வபிவிருத்திப்பகுதிகளில் இருந்து பெறப்படும் உற்பத்திப்பொருட்கள் ஏற்று மதிக்கு தயாராக மாற்றப்படும் பட்சத்திலே அந்நிய செலவாணி சம்பாத்தியம் ஏற்ப டும். ஆனல் இங்கு இதுவரையில் ஏற்றும திக்குத் தயாராக எப்பொருளும் தயாரிக் கப்படவில்லை. இந்நிலையில் மகாவலித்திட் டம் இலங்கையின் பொருளாதாரக் கட்ட மைப்பில் எத்தகைய பாரிய மாற்றத்தை (அபிவிருத்தி)ஏற்படுத்தும் என்பது நோக்கப் படவேண்டிய விடயம்.

இலங்கை போன்ற குறைவிருத்தி நாடு கள் பாரிய மூலதனத்தைக் கொண்டு மகா வலி போன்ற அபிவிருத்தி முயற்சியில் ஈடு படும் பொழுது அந்நாடுகளின் பணவீக்கம் பலமடங்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின் றது. மகாவலித்திட்டத்தில் இறக்குமதி செய் யப்பட்ட உள்ளீடுகள் (சர்வதேச பணவீக் கத்திற்கு உட்படுத்தப்பட்ட பொருட்கள்) பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. இந் நிலையில் செய்திட்டங்களின் மீது செலவு வழியாக நாட்டின் பணவீக்க நிலை அதி கரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் இத்திட்டத்தின் மீது அதிகரித்த செலவீடு கள் பொதுமக்களது வருமானத்தினை பகுதி அளவில் அதிகரிக்கவே செய்யும். இந்நிலை யில் வருமானம் அதிகரிக்க கொள்வனவு சக்தி அதிகரிக்கும். குறுங்காலத்தில் உற் பத்தி அதிகரிக்காத நிலையில் கேள்வி அதி கரிக்க பொருட்களின் விலையும் அதிகரிக்கும். இது பணவீக்கத்தைத் தூண்டும். ஆகவே, மகாவலி பிரதேச அபிவிருத்தி இலக்குகள் உடனடியாக அடையாத நிலையில் பண வீக்க நிலை நாட்டின் பொருளாதார நிலை யைப் பெருமளவு பாதிக்கவே செய்யும்.

மகாவலி செயற்திட்டப் பகுதிகளில் கைத்தொழில் வாய்ப்புக்கள் குறிப்பிடப்பட் டிருந்த போதிலும் இதுவரையில் விவசாயம் சார்ந்த, சாராத கைத்தொழில் விருத்தி குறிப்பிடத்தக்க முறையில் வளர்ச்சியடை யவில்லை. சனத்தொகை அதிகரிக்குமிடத்து அதிகரிக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கூடிய துறையாக விவசாயத்துறை அமைவதில்லை. இந்நிலையில், திட்டத்தின்கீழ் குடியேற்றப்படுவோர் விவசாயத்தில் மட்டுமன்றி ஏனைய கைத்தொழில்களை ஏற்படுத்தக்கூடிய விதத்திலும் அவர்களின் தொழில் முறைகள் பன்முகப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் அவர்களது வருங்கால சந்ததியினர் வளரும்போது விவசாயம் செய்து வாழ புதிய நிலமும் நீர்வளமும் இருக்கமாட்டாது. ஆகவே, இப்பகுதிகளில் கைத்தொழில் துறையை விருத்தி செய்வதற்குரிய (விவசாயம் சார் கைத்தொழில்) வழிவகைகளில் உடனடியாக கவனம் செலுத்தப்படாத இடத்து எதிர்காலத்தில் அபிவிருத்திப்பிரதேச மக்களின் நிலைமை மோசமடையவே செய்யும்.

மகாவலி மின்சார உற்பத்தி, திட்டத்தின் சாதனையாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இவ்உற்பத்தி இலங்கையின் கைத்தொழில்துறையில் அபிரிமிதமாக பயன்படுத்தப்பட்டால் மட்டுமே பொருளாதார அபிவிருத்தி ஏற்படுமெனலாம். நுகர்வோரின் தேவைகளை மட்டும் திருப்திப்படுத்த மின்சாரம் முழு அளவில் பயன்படுத்தப்படுமேயானால் எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்ப்பதுபோல அதிகரிக்கமாட்டாது. மேலும் வெளிநாட்டுக் கைத்தொழில் நிலையங்கள் எமது மலிவான ஊழியத்தைப் பயன்படுத்தல்போல எமது சக்தி வளத்தையும் சுரண்டும் அபாயமும் உண்டு.

மகாவலி செயற்திட்டத்தின் முழுவெற்றியும் இப்பகுதியில் செய்து கொடுக்கப்படும் சமூக பொது முதலீட்டு வசதிகளிலேயே தங்கியுள்ளது. இந்நிலையில், செயற்திட்டப் பகுதிகளில் இவ்வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. திட்டவரைவின்போது குறிப்பிட்டதுபோல திட்டத்தின் மிகப்பிரதான இலட்சியம் நாட்டில் வாழும் மிகப் பெருந்தொகையான வறியோரின் வாழ்க்கைத்தர நிலைமைகளை மேம்படுத்துவதாகும். எனவே, சமூக பொது முதலீட்டு வசதிகள் திருப்திகரமாக அமையாத நிலையில் இத்திட்டம் தோல்வியிலேயே முடிவடையக் கூடிய நிலை ஏற்பட இடமுண்டு.

மேலும்,சமூகங்களுக்கிடையிலான பகையுணர்வு, சந்தேகம், வெறுப்பு மிக அண்மைக்காலங்களில் விரிவடைந்து வருவதனால் மகாவலி போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கக் கூடிய அபாயம் ஏற்படுகின்றது. திட்டமிட்ட சில குடியேற்றம் இனங்களுக்கிடையிலான பகையுணர்வுகளை அதிகரிக்கவே செய்கின்றது. இது வன்செயல்களை தூண்டக்கூடியன. நீண்டகால துரித அபிவிருத்தி, நாட்டின் ஒற்றுமை, அமைதி, புரிந்துணர்வு என்பவற்றில் பெருமளவு தங்கியுள்ளது என்பதை மறக்கக் கூடாது.

இலங்கை மக்களின் சுபிட்சமான எதிர்காலம் ஒன்றை சிருஷ்டிக்க தோற்றுவிக்கப்பட்ட பாரிய மகாவலித்திட்டம் பல்வேறுபட்ட சிக்கலான சோதனைகளை மீறியே பூர்த்தியடைய வேண்டும். இன்றைய நிலையில் கூட இத்திட்டம் பூரண பலனைத்தருமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் வரையறுக்கப்பட்ட பலனுக்கு இப்பாரிய முதலீடு அவசியமா என்ற கேள்வியும் எழுகின்றது. அத்துடன் மேலும் பல ஆயிரம் கோடி ரூபாக்கள் இத் திட்டத்தின் பேரில் செலவிட உள்ளன. இலங்கையின் எதிர்கால சந்ததியின் பேரிலும் வாங்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட கடன்கள் இத் திட்டத்தின் மூலம் குறைக்கப்படுமா அல்லது அதிகரிக்கப்படுமா என்பது சிந்திக்கப்படவேண்டியதாக உள்ளது. ஆனாலும் முழுத்திட்டமும் நிறைவேற்றப்பட்ட பின்னரே அதன் விளைவுகள் பற்றி முடிவு கூற முடியும் எனினும் வளர்ச்சிக்கட்ட அனுபவங்களில் இருந்து சில முடிவுகளைக் கூற வேண்டுமாயின் திட்டப்பகுதிகளில் இடம் பெறுகின்ற குறைபாடுகள், பிரச்சனைகள் நீக்கப்படாத இடத்து திட்டம் எதிர்பார்த்த பலனை கொடுக்க முடியாது போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றேலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பும் (ஒபெக்) அதன் அபிவிருத்திப் பணியும்

இ. நந்தகுமாரன்

தென்அமெரிக்க எண்ணெய் வளநாடான வெனசுவெலாவின் அயராத முயற்சியுடன் ஈரான், ஈராக், குவைத், லிபியா, சவுதி அரேபியா ஆகிய ஆறு எண்ணெய் வளநாடுகளை உள்ளடக்கியதாக 1960இல் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பே ஒபெக் ஆகும். எண்ணெய்த் தொழிலில் ஈடுபட்டிருந்த அபிவிருத்தியடைந்த நாடுகளின் பலம் பொருந்திய பாரிய சர்வதேச கம்பனிகளிடமிருந்து தங்களது நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்குடனேயே இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இக்காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளினதும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் எண்ணெய் வளங்களை சர்வதேச எண்ணெய்க் கம்பனிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தமையால் ஒபெக்கின் செயற்பாடு குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லை. அறுபதுகளில் உலகளாவிய எண்ணெய்த் தொழில்அதாவது எண்ணெய் வள ஆய்வுதொடக்கம் நுகர்வோர்மட்டத்திலான விநியோகம் வரை அனுபவம் மிகுந்த ஏழு கம்பனிகளின் வசமிருந்தது. இவற்றை ஏழு சகோதரிகள் என்று எண்ணெய்த் தொழில் வட்டாரத்தில் அழைப்பர். எஸ்ஸோ (Esso) மொபில் ( Mobil ), செவரோன் ( Chevron) கால்ப் ஒயில் ( Gulfoil ), ரெக்ஸ்எகோ ( Texaco ), செல் ( Shell ), பிரிட்டிஷ் பெற்ரேலியம் ( British Petroleum ), என்பனவே அந்த ஏழு சகோதரிகளும் ஆகும். இதில் முதல் ஐந்தும் அமெரிக்க கம்பனிகளாகவும் ஏனைய இரண்டும் ஐரோப்பிய கம்பனிகளாகவும் இருந்தன. உலகின் மீட்கக் கூடிய மசகு எண்ணெய்வளத்தின் 58 சதவீதத்தினை கொண்டிருந்த ஆறு ஒபெக் அங்கத்துவ நாடுகளினதும் கூட்டமைப்பு எண்ணெய்க் கம்பனிகளுக்கோ, அல்லது அவற்றின் பிறப்பிடமான அமெரிக்க பிரிட்டன் அரசாங்களுக்கோ திருப்தி அளிக்கவில்லை. எனினும் இக்காலகட்டத்தில் எண்ணெய்க் கம்பனிகளின் கையே ஓங்கியிருந்ததால் தம்முடன் ஒபெக் போட்டியிட முடியாது என்ற நம்பிக்கையில் ஆரம்பகாலத்தில் வாளாதிருந்தன.

ஆனால் எழுபதுகளில் பல அரசியல் மாற்றங்கள் இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து ஒபெக்கின் வளர்ச்சி கம்பனிகளுக்கு அச்சுறுத்தலாக மாறலாயிற்று.மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து எண்ணெய்வளங்களை தேசிய மயமாக்கும் அலை வீசத் தொடங்கியதும் ஒபெக் நிறுவனம்எண்ணெய்த்தொழிலில் சக்தி வாய்ந்த அமைப்பாக மாறலாயிற்று. பல புதிய எண்ணெய்வள நாடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கும் நோக்குடன் ஒபெக்கில் அங்கத்துவம் பெற்றன. தற்போது இவ்வமைப்பில் ஆரம்ப கால அங்கத்தவர்களுடன் ஐக்கிய அரபு எமிரேட், இந்தோனேசியா, நைஜீரியா, கட்டார், அல்ஜீரியா, ஈக்குவடோர், காபோன் ஆகிய ஏழு நாடுகளும் சேர்ந்து எல்லாமாக பதின்மூன்று நாடுகள் அங்கம் வகிக்கின்றன. மீட்கக்கூடிய உலக மசகுஎண்ணெய்வளத்தில் 68 சதவீதத்தினை இவை கொண்டிருக்கின்றன. வளர்முக நாடுகளின் பலம் வாய்ந்த ஒரு கூட்டாக ஒபெக் அமைப்பு வளர்ந்து வருவதை விரும்பாத அபிவிருத்தியடைந்த நாடுகள் கவிழ்ப்பு முயற்சிகளிலும் சீர்குலைப்பு நடவடிக்கைகளிலும் இறங்கியும் பூரண வெற்றி காணவில்லை. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பல்வேறு கூட்டமைப்புக்கள் தோன்றி சிலவருடங்களில் முறிவடைந்ததுபோல் அல்லாமல் கடந்த மூன்று தசாப்தங்களாக பல்வேறு சூழ்நிலைகளுக்கும் ஈடுகொடுத்து கூட்டமைப்பு இயங்கி வருவது அங்கத்துவ நாடுகளுக்கு மட்டுமல்லாமல் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் பெருமையாகவுள்ளது.

இன்று ஒபெக் நிறுவனம் உற்பத்தி, விலை தொடர்பாக எடுக்கும் தீர்மானங்கள் உலக எண்ணெய்ச் சந்தையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு இந்நிறுவனம் முக்கியத்துவம் பெற்று விட்டது. எனினும் அங்கத்துவ நாடுகளுக்கிடையே காணப்படும் சில அடிப்படை வேறுபாடுகள் காரணமாக தீர்மானங்களில் இணக்கமேற்படுவதும் காணப்பட்ட இணக்கத்தினை தொடர்ந்து பேணுவதிலும் இடர்பாடுகள் இருந்து வருகின்றது. அங்கத்துவநாடுகளின் எண்ணெய்வளத்தின் தரமும், அளவும் வேறுபட்டிருப்பது குறிப்பிடத்தக்க அடிப்படைப் பிரச்சனையாகும். சில நாடுகள் உயர்தரமுடைய அதிகளவு எண்ணெயையும் வேறுசில நாடுகள் குறைந்தளவு எண்ணெய் வளத்தையும் கொண்டிருக்கின்றன. அதிக வளத்தினை கொண்டுள்ள சவுதி அரேபியா, குவைத் போன்ற நாடுகள் நீண்டகால நலன்களைக் கருத்திற் கொண்டு மிதமான விலைஉயர்வு வருமான அதிகரிப்புக் கொள்கையை ஆதரிக்க, குறைந்த வளமும் தீவிரமான அரசியல் கொள்கையும் கொண்ட லிபியா, ஈரான் போன்ற நாடுகள் உயர்ந்த விலை, குறுங்கால வருமான அதிகரிப்பு என்ற கொள்கையை ஆதரிக்கின்றன. இவ்விரு வேறுபட்ட பொருளியற் கொள்கைகளே கருத்தொருமித்த முடிவுகளை எடுக்கத் தடையாக இருந்து வருகிறது. இவ்வமைப்பு தோன்றிய கால கட்டத்தில் இதனை ஒரு காட்டல் எனக் கருதிய போதும் அண்மைக்காலத்தில் குறிப்பாக எண்பதுகளில் விலை வீழ்ச்சி ஏற்பட்டபோது விலையையும் உற்பத்தித் தொகையையும் கட்டுப்படுத்த அமைப்பு முயன்றதை மனதிற் கொண்டு இதனை ஒரு காட்டல் அமைப்பென ஏற்க மறுக்கின்றனர்.

ஒபெக் அங்கத்துவ நாடுகளுக்கிடையே காணப்படுகின்ற அடிப்படை வளவேறுபாடு, அரசியல் சித்தாந்தம், வளர்ச்சியடைந்த நாடுகளுடனான உறவுகள், சனத்தொகை, உள்நாட்டு அரசியல் என்பவற்றால் பொதுப் பிரச்சனைகள் குறித்து இணக்கமேற்படுவதில் சிக்கலும் காலதாமதமும் வளர்ந்துவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எத்தனையோ இடர்பாடுகள் மத்தியிலும் ஏன் இரண்டு ஆரம்பகால அங்கத்துவ நாடுகளுக்கிடையேயான எட்டு ஆண்டு கால எல்லை யுத்தத்தின் மத்தியிலும் அமைப்பு உடைந்து விடாமல் இருக்கிறது என்றால் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான அமைப்பைக் கட்டிக் காக்கவேண்டும் என்ற உணர்வு பூர்வமான மன உறுதியிருப்பதையே இது காட்டுகின்றது. இவ்வமைப்பின் பலவீனம் வெளிப்படுவதால் வெளிநாட்டவர் தலையீடு அதிகரித்து சக்தி வளங்களின் கட்டுப்பாடு அந்நியர் கைக்கு மாறிவிடக்கூடிய நிகழ்தகவு உயர்வாக இருப்பதை நன்குணர்ந்த அங்கத்துவ நாடுகள் அமைப்பில் பிளவுகளும் பிரிவினைகளும் ஏற்படும்போது முழுமூச்சாக ஒருமனதோடு செயல்பட்டு இடைவெளிகளை குறுக்கியோ அல்லது முற்றாக ஒழித்து விடுவதிலோ வெற்றி கண்டுள்ளன. தொடர்ந்தும் இவ்வாறு செயல்படலாம் என்று நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓபெக் நிதியம் (OPEC FUND)

ஓபெக் அமைப்பில் அங்கம் வகித்த நாடுகளினுல் ஓபெக் அல்லாத அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குதவும் உன்னத நோக்குடன் 1976இல் உருவாக்கப்பட்டதே ஓபெக் நிதியமாகும். தற்போதைய அங்கத்துவ நாடுகள் பதின்மூன்றும் ஓபெக் நிதியத்திலும் அங்கத்துவம் பெற்றுள்ளன. ஓபெக் அங்கத்துவ நாடுகளின் கூட்டுமுயற்சியும் அபிவிருத்தியடைந்து வரும் வறிய நாடுகளின் சமுக பொருளாதார முன்னேற்றத்திற்கு கூடியளவு உதவி வழங்கவேண்டும் என்ற உயர்வான நோக்கமுமே ஓபெக் நிதியம் ஒரு அபிவிருத்தி நிதியமாக வளர்ச்சியடையக் காரணமாக இருந்தது.

இந்த நிதியத்தின் தோற்றத்திற்கு 1970 களின் முதற்காற் பகுதியில் ஏற்பட்ட எண்ணெய் விலைஉயர்வும் ஒரு முக்கிய காரணியாகும். எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பன்மடங்கு விலை உயர்வினுல் எண்ணெய் இறக்குமதி செய்யும் வளர்ச்சியடைந்த நாடுகள் மட்டுமல்லாமல் வளர்முக நாடுகளும் அந்நியச் செலாவணிப் பிரச்சனையை எதிர்நோக்கின. இவ் விலையேற்றத்தின் பின்னணியில் பொருளாதாரக் காரணிகளை விட அரசியல் காரணிகளே முதன்மையாகக் காணப்பட்டன. அமெரிக்காவிற்கும் அதனைச் சார்ந்து நின்ற ஐரோப்பிய நாடுகளுக்கும், அரபுநாடுகளுக்குமிடையிலான உறவுகளில் பிளவுகள் தோன்றி கருத்து வேறுபாடுகள் அதிகரிக்க இவ் அரபு நாடுகளின் எண்ணெயில் பெரிதும் தங்கியிருந்த அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளுக்கு புத்தி புகட்டும் முகமாக எண்ணெயை ஆயுதமாகப் பயன்படுத்தின. எண்ணெயை ஆயுதமாகப் பயன்படுத்த அரபுநாடுகள் எடுத்த முடிவு விலை உயர்விற்கு காரணமாகியது. இதனுல் எண்ணெய் இறக்குமதி செய்யும் வளர்முக நாடுகளின் அபிவிருத்தி முயற்சிகள் அச்சுறுத்தலுக்குள்ளாகின. அபிவிருத்தியின் ஆரம்ப படியில் காலடி வைத்துள்ள பல நாடுகளின் பின்னடைவிற்கு அதிகரித்த எண்ணெய் விலை முக்கிய ஒரு காரணியாக அமைந்து விடும் என்ற ஒரு அச்சம் நிலவியது. எனவே சர்வதேச நாணய நிதியம் தனது கடன் வழங்கல் வசதிகளில் விசேட எண்ணெய் வசதிக் கடன்களை ஏற்படுத்தியது. எண்ணெய் விலை ஏற்றத்தின் காரணமாக சென்மதி நிலுவையில் பெரும் பாதிப்புக்களை அனுபவித்த வளர்முக நாடுகளுக்கு உதவியது. இவ்விசேட கடன் வசதிக்கு எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் குறிப்பாக ஓபெக் நாடுகள் விலை ஏற்றத்தால் கிடைத்த உபரி வருமானத்திலிருந்து பெருமளவு நிதி வழங்கின. இதே போன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஏனைய அபிவிருத்தி முயற்சிகளுக்கும் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும், இந்த நாடுகளின் அபிவிருத்திக்கு முக்கிய உள்ளீடான எண்ணெய் விலை அதிகரிப்பு அபிவிருத்திக்கு இடையூறுக விளங்கியது என்ற பழிச்சொல்லுக்கு இடமளிக்க விரும்பாமையும் ஓபெக் நிதியத்தின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தன என்றுல் மிகையாகாது.

ஐக்கிய நாடுகளின் வரைவிலக்கணத்திற்கமைய மிகவும் அபிவிருத்தி குன்றிய நாடுகள் (Least Developed Countries, LLDC's), மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகள் (Most Seriously affected Countries M S A C's) என்ற வரையறைக்குள் அடங்கும் நாடுகளுக்கு உதவி வழங்குவதில் நிதியம் முன்னுரிமை வழங்குகின்றது. நிதியத்தின் அங்கத்துவ நாடுகள் தனித்தனியாகவோ அல்லது ஒரு சில நாடுகளின் கூட்டாகவோ இயங்கும் ஏனைய நிதி அமைப்புக்களுக்கு (உ+ம் குவைற் நிதியம், சவுதி நிதியம், அரபு நிதியம், ஆபிரிக்க அபிவிருத்தி நிதியம்) ஊடாக வழங்கும் உதவிகளுக்கு மேலாகவே ஓபெக் நிதியத்தின் உதவிகள் அமைகின்றன. ஓபெக் நிதியம் ஒன்றுதான் ஓபெக் அங்கத்துவ நாடுகள் எல்லாம் ஒன்றுக பங்குபற்றும் நிதியமாகும். ஓபெக் அங்கத்துவ நாடுகள் அல்லாத அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அனைத்தும் இந் நிதியத்திலிருந்து கடன் பெறும் தகுதியை பெற்றிருக்கின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அரசாங்கங்களுக்கு நேரடியாக உதவி வழங்குவதற்கு மேலாக இந் நாடுகளின் சமூகப் பொருளாதார முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேற்றத்திற்கு அக்கறையுடன் உழைக்கும் பல்வேறு ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுக்கும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுக்கும் ஆண்டுதோறும் நன்கொடையாக பெருமளவு நிதியை வழங்குகிறது,

ஒபெக் நிதியத்தின் மூலதனமும் உதவிகளும்

1976 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் அங்கத்துவ நாடுகள் வழங்கிய U S டொலர் 800 மில்லியனுடன் தொழிற்பாட்டை ஆரம்பித்த நிதியம் இதுவரையில் மும்முறை அங்கத்துவ நாடுகளின் முதல்கொடுப்பனவை புதுப்பித்துள்ளது. வழங்கிய மூலதனத்தினை விட சர்வதேச நாணய நிதியத்தில் ஒபெக் அங்கத்துவ நாடுகளின் ஒதுக்கில் உள்ள தங்கத்தின் விற்பனை மூலம் பெறப்படும் இலாபத்தினலும், தொழிற்பாட்டின் மூலம் திரண்ட வருமானத்தினலும் மூலதனம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. நிதியத்தின் கடந்த பதினெரு ஆண்டு தொழிற்பாட்டில் அங்கத்துவ நாடுகளால் நிதியத்திற்கு வாக்குறுதியளித்த தொகை US டொலர் 3435 மில்லியனகவும செலுத்திய தொகை U S டொலர் 2658 மில்லியனகவும் இருக்கிறது. இந்த முதலீட்டிலிருந்து நிதியத்தினல் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள், நிகழ்ச்சி திட்டங்களுக்கு மட்டுமல்லாமல் சென்மதி நிலுவைச் செலுத்துகைகளுக்கும் உதவி வழங்கியிருக்கிறது. மேலும் நிதியம் பட்டினியால் வாடும் நாடுகளுக்கு உணவு உதவிகளையும், தொழில் நுட்ப, ஆராய்ச்சி உதவிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளது. உலகின் தென்பகுதியில் ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்க கரிபியன் பிராந்தியங்களில் உள்ள தொண்ணூற்றெரு நாடுகள் நிதியத்தின் உதவியை இதுவரை பெற்றுள்ளன. 1987இல் முடிவடைந்த நிதியாண்டு வரை மொத்தமாக US டொலர் 3318 மில்லியனை அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு கொடுத்துதவ முன்வந்துள்ளது. இதில் 79.2 சதவீதமான U S டொலர் 2560.0 மில்லியனை இந்நாடுகளுக்கு வழங்கியிருக்கிறது.

நிதியம் உறுதியளித்த மொத்த தொகையான U S டொலர் 3318.0 மில்லியனில் கடன்களுக்கு U S டொலர் 2136.0 மில்லியனும், நன்கொடைகளுக்கு US டொலர் 209.0 மில்லியனும் சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கை நிதிக்கு U S டொலர் 110.0 மில்லியனும், சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியத்திற்குUS டொலர் 861.0 மில்லியனும் உள்ளடங்கும். நிதியம் இதுவரை வழங்கிய US டொலர் 2560.0 மில்லியனில் US டொலர் 1602.0 மில்லியன் பலதரப்பட்ட கடன்களுக்காகவும், US டொலர் 115.0 மில்லியன் நன்கொடைத் திட்டங்களுக்காகவும், US டொலர் 732.0 மில்லியன் சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியத்திற்கும், US டொலர் 110.0 மில்லியன் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்கியுள்ளது. கடன்களாக வழங்கிய U S டொலர் 1602.0 மில்லியனில் செயற்திட்டங்களுக்காக வழங்கிய US டொலர் 848.0 மில்லியனும், நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழங்கிய US டொலர் 60.0 மில்லியனும், சென்மதி நிலுவை உதவிகளாகக் கொடுத்த US டொலர் 695.0 மில்லியனும் அடங்கும். நிதியம் உதவி வழங்குவதற்கு அங்கீகரித்த 448 உதவித் திட்டங்களில் 257 உதவித் திட்டங்களுக்கான மொத்தச் செலவினமான US டொலர் 1018.0 மில்லியன் ஆபிரிக்க நாடுகளுக்கும், 127 உதவித் திட்டங்களுக்கான மொத்தச் செலவினமான US டொலர் 897.0 மில்லியன் ஆசிய நாடுகளுக்கும் 68 உதவித் திட்டங்களுக்கான மொத்தச் செலவினமான US டொலர் 222.0 மில்லியன் இலத்தீன் அமெரிக்க கரிபியன் நாடுகளுக்கும் வழங்க அங்கீாரம் கொடுத்துள்ளது. அங்கீகரித்த செயற்திட்டங்களுக்கு கடனக வழங்கிய US டொலர் 1348.0 மில்லியனின் துறைரீதியான பகிர்வினை அட்டவணை I காட்டுகிறது.

இலங்கைக்கு திட்டக்கடனக US டொலர் 25.1 மில்லியனையும் சென்மதி நிலுவைக்கான காசுக்கடனக US டொலர் 17.1 மில்லியனையும் ஒபெக் நிதியம் வழங்கியுள்ளது. இதனை விட ஒபெக் நிதியம் அதிகளவில் உதவி செய்யும் சர்வதேச விவசாய

அட்டவணை i

வழங்கிய மொத்தக் கடனின் பகிர்வு

| துறை | மில்லியன் US டொலர் |
|---|---|
| 1. சக்தி | 527.4 |
| 2. போக்குவரத்து | 255 4 |
| 3. விவசாயம்,விவசாயம் சார்ந்த அடிப்படைக் கைத்தொழில் | 236.7 |
| 4. தேசிய அபிவிருத்தி வங்கிகள் | 109.7 |
| 5. கல்வி | 71.9 |
| 6. கைத்தொழில் | 67.3 |
| 7 குடிநீர் வழங்கல் வடிகாலமைப்பு | 64.3 |
| 8. சுகாதாரம் | 11.2 |
| 9. தொலைத்தொடர்பு | 4.6 |
| | 1348 5 |

| | US டொலர் மில்லியன் |
|---|---|
| (a) சென்மதி நிலுவை உதவி | 724.3 |
| (b) நிகழ்ச்சித் திட்டக்கடன்கள் | 63.6 |
| | 787.9 |

| மொத்தக்கடன் தொழிற்பாடு | |
|---|---|
| துறைசார்ந்த கடன் | 1348.5 |
| சென்மதி நிலுவை | 724.3 |
| நிகழ்ச்சித் திட்டக் கடன் | 63.6 |
| | 2136.4 |

அபிவிருத்தி நிதியமும் ஏறத்தாழ US டொலர் 50·0 மில்லியனை உதவியாக வழங்கியிருக்கிறது. ஒபெக் நிதியம் நேரடியாக வழங்கிய உதவிகள், போவத்தன மின் திட்டம், கிராமிய மின்திட்டம், மின் செலுத்தல் (Power Transmission) திட்டத்திற்கும், ஒன்றிணைந்த தேயிலை அபிவிருத்தி திட்டத்திற்கும் வழங்கியுள்ளது. நிதியத்தின் மொத்த செயற்திட்ட கடன்களில் 40 சதவீதமான கடன் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சக்திவள அபிவிருத்திக்கே வழங்கப்பட்டுள்ளது. சக்தி வழங்கும் பிரதான மூலப்பொருளான எண்ணெயின் ஏற்றுமதி வருமானத்தையே பிரதான வருமான மூலமாகக்கொண்ட எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் தயவில் முற்று முழுதாக இயங்கி வரும் இந்த நிதியம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சக்திவளங்களை முன்னேற்றுவதற்கு கடன்களை வழங்கியிருப்பது வியப்பிற்குரியதாகும். இன்றைய சர்வதேச பொருளாதார ஒழுங்கு வறிய நாடுகளின் தங்கியிருக்கும் நிலையை அதிகப்படுத்தத்தக்க வகையில் இயங்கி வருகையில் நிதியத்தின் செயற்பாடானது தங்கியிருத்தலை குறைக்கும் வண்ணமிருப்பது வரவேற்கப்பட வேண்டிய தொன்றாகும்.

அந்நியச்செலவாணிக் கொடுப்பனவுகளைச் செய்யமுடியாது இடர்ப்படும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள் ஒபெக் நிதியத்தினது சென்மதி நிலுவைக்கான கடன் உதவியைப் பெறும் தகுதியுடையன. சென்மதி நிலுவைக்கடன்களைப் பெற்ற நாடுகள் தமது முன்னுரிமைத் தேவைக்கேற்ப அத்தியாவசிய உணவுப் பொருட்களையோ, அல்லது நாட்டின் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான இயந்திர சாதனங்களையோ அல்லது விவசாய துறைக்கான உள்ளீடுகளையோ இறக்குமதி செய்யப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. சென்மதி நிலுவை உதவியையோ அல்லது நிகழ்ச்சித் திட்ட உதவியையோ பெற்றுக்கொள்ளும் நாடு குறிப்பிட்ட காலத்திற்குள் இறக்குமதித் தொகைக்கு சமமான உள்நாட்டு நாணயத்தை அதாவது இணைக்கிணை நிதியத்தினை (Counter Part Funds) உருவாக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. நிதியத்தின் உதவியுடன் இறக்குமதி செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதன்மூலம் இணைக்கிணை நிதியத்தினை ஏற்படுத்தி ஒபெக் நிதியத்தினல் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் உள்நாட்டுச் செலவினங்களை நிதிப்படுத்தப் பயன்படுத்தும் வாய்ப்பை நிதியம் கடன் பெற்ற நாடுகளுக்கு வழங்குகின்றது.

வறிய நாடுகளின் அபிவிருத்தியில் சிரத்தை கொண்ட சர்வதேச நிறுவனங்களுக்கும் ஒபெக் நிதியத்தின் உதவி தாராளமாகக் கிடைத்துள்ளது. வளர்முகநாடுகளின் உணவு உற்பத்திப் பெருக்கம் போஷாக்கின்மையை ஒழித்தல், கிராமிய வறுமையை போக்குதல் என்ற குறிக்கோள்களுடன் உதயமாகி வளர்முக நாடுகளின் விவசாய அபிவிருத்தி தொடர்பான கடன்களை வழங்கிவரும் சர்வதேச விவசாய அபிவிருத்தி நிதியம் (The International Fund for Agricultural Development, I.F A.D) ஒபெக் நிதியத்தின் உதவியை பெருமளவில் பெற்றிருக்கிறது. மொத்தமாக US டொலர் 751.0 மில்லியனை ஒபெக் நிதியம் I.F.A.D இனது செயற்பாட்டிற்கு வழங்கியுள்ளது, இத் தொகையானது ஒபெக் நிதியம் உறுதியளித்த தொகையான US டொலர் 881.0 மில்லியனில் 85.3 சதவீதமாகும். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திப் பிரிவுகளான யுனெஸ்கோ, யுனிசெப் என்பவற்றிற்கும், உலக சுகாதார நிறுவனம், சர்வதேச நாணய நிதியம் என்பவற்றிற்கும் நன்கொடைகளை ஒபெக் நிதியம் வழங்கி அவற்றினது அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்து வருகிறது.

ஒபெக் நிதியமானது ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் இருந்த சாதகமான நிலையைப் பயன் படுத்தி உலக செல்வத்தினை பகிர்ந்தளிக்கும் ஒரு ஸ்தாபனமாக தொழிற்பட்டுள்ளதுஎன்றுல்மிகையாகாது.எண்ணெய் விலை உயர்வினல் குறுங்காலத்தில் கேள்வி நெகிழ்ச்சியற்ற பண்டமான எண்ணெயை ஏற்றுமதி செய்த ஒபெக் நாடுகளின் வருமானம் உயர்ந்தது. அதாவது எண்ணெயை உள்ளீடாகக் கொண்ட உற்பத்தித் தொழில் நுட்பங்களில் தங்கியிருந்த செல்வந்தநாடுகளிடமிருந்து செல்வம் ஒபெக் நாடுகளின் கைக்கு மாறியது. இச் செல்வத்தின் ஒரு பகுதியை மீண்டும் செல்வந்த நாடுகளிலேயே முதலீடாக மாற்றியபோதும் நிதி நெருக்கடிக்குள்ளான வறிய நாடுகளுக்கு மறுபகுதியை கடன்களாகவும் நன்கொடையாகவும் வழங்கி உலகளாவிய செல்வப் பகிர்வில் ஒபெக் அமைப்பு தன்னை ஈடுபடுத்திக்கொண்டது என்றுல் மிகையாகாது. உள்நாட்டு அபிவிருத்தியிலும் எண்ணெய் வள நாடுகள் அதிகளவு செலவினத்தை மேற்கொண்டதன் விளைவாக வறிய ஆசிய நாடுகளின் மனித வளத்திற்கும் ஏனைய சில ஏற்றுமதிப் பொருட்களுக்கும் கேள்வியை ஏற்படுத்தின. இதனுலும் இந்த வறிய ஆசிய நாடுகளின் வருமான அதிகரிப்பிற்கு மறைமுகமானபங்களிப்பைஎண்ணெய்வளநாடுகள் வழங்கின. 1980 களைத் தொடர்ந்து எண்ணை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி இதனுல் ஒபெக் நாடுகளின் வருமான வீழ்ச்சி, முதற்கட்ட எண்ணெய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் விசேடமாக அபிவிருத்தியடைந்த நாடுகள்எண்ணெய் மூலப்பொருளில் தங்கியிருத்தலை குறைக்கும் பொருட்டு எடுத்த முதலீட்டு முயற்சிகளைத் தொடர்ந்து உலக எண்ணெய்ப் பாவனையில் வீழ்ச்சி, சிக்கனம் யாவும் ஒபெக் நிதியத்தின் நிதிப் பாய்ச்சலில் பாதிப்பினை ஏற்படுத்தியது. எனவே வறிய நாடுகளுக்கு வழங்கும் உதவிகளிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகளின் வருமான மூலமான எண்ணெய் வளத்தின் விலை அதிகரிப்பா அல்லது விலை வீழ்ச்சியா வறிய நாடுகளைப் பொறுத்து சாதகமான சூழ் நிலையை ஏற்படுத்தக் கூடியது என்பது மேலும் ஆராயப்பட வேண்டிய விடயமாகும். இதனை சமூக பொருளாதார செலவு நலன் அடிப்படையில் ஆராய்ந்தால் மேலும் தெளிவான விடையைப் பெற்றுக் கொள்வதுடன் வளர்முக நாடுகள் ஒபெக் கினது கொள்கைகளுக்கு ஆதரவு வழங்கவும் வசதியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியமும் சர்வதேச அமைப்புக்களும்

மா. சின்னத்தம்பி

சர்வதேச நாணயப் பிரச்சினைகளில் ஆலோசனை, ஒத்துழைப்பு என்பவற்றை வழங்கக் கூடிய அமைப்புக்களை, உருவாக்கக் கூடிய நிரந்தரமான நிறுவனங்களை ஏற்படுத்துவதால் சர்வதேச ஒத்துழைப்புக்களை அதிகரிக்க முடியும் என சர்வதேச நாணய நிதி கருதுகிறது. அண்மைக் காலங்களில், சில சிறிய, அரச சார்பு குறைந்த அமைப்புக்கள் உருவாகியுள்ளன. ஒரே மாதிரியான பொருளாதார அக்கறையுள்ள பல நாடுகளை ஒருங்கிணைக்க அவை உதவுகின்றன. அவை அடிக்கடி பல இடைக்கால கூட்டங்களில் சந்தித்துக்கொள்கின்றன.

சர்வதேச பொருளாதார நாணய விடயங்களில், சிறிய அமைப்புக்கள் முக்கியமானவைதான் என 1986 மே மாதம் டோக்கியோ கைத்தொழில் நாடுகளின் மகாநாட்டில் ஏற்கப்பட்டது. அவைபற்றி முதலில் இங்கு சிறிதளவு விளக்குகிறோம்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியினால், சென்மதி நிலுவை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கென உருவாக்கப்பட்ட பொறுப்பாண்மை நிதி பற்றியும் இதில் விளக்கப்படுகிறது.

குழு 5 (The Group 5)

வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் போன்றவர்கள் ஒன்று கூடுதற்கான ஏற்பாடுகள் கொண்டஅமைப்பு இதுவாகும். இதில் பிரான்ஸ், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்றன இடம்பெறுகின்றன.

இதன் முதலாவது கூட்டம் ஐக்கிய இராச்சியத்தின் (U.K) நகர் வெளிப்பகுதி தங்குமிடத்தில் 1967ல் இடம் பெற்றது. இது ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளர், ஐக்கிய ராச்சியத்தின் கருவூல நாயகன் ஆகியோரின், தன் முனைப்பான முயற்சியால் இடம்பெற்றதாகும்.

உண்மையில் இந்த நாடுகளின் நிதியமைச்சர்கள் தமக்கிடையே உத்தியோகப் பற்றற்ற முறையில், சர்வதேச நாணயப் பாய்ச்சல், வட்டிவீத உறுதிப்பாடு போன்ற விடயங்களில் கலந்துரையாடுவதற்காகவே இணைந்தனர். ஆனால் இந்த ஒன்றுகூடல் முறையானது கூட்டு தீர்மானங்கள் எடுக்கவும் உதவியது. இது பிரச்சனைகளை பரஸ்பர அடிப்படையில் தீர்க்க உதவியது. இதனால் இத்தகைய கூட்டு நடவடிக்கை எதிர்காலத்திலும் பயனுடையதாகும் என உணரப்பட்டதால் "குழு 5" என்ற பெயரில் இது வெளிப்படலாயிற்று. பின்பு பல்வேறு சந்தர்ப்பங்களில், சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்தக் கூட்டங்களின் போதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்கால குழுநிலைக் கூட்டங்களின் போதும், அவர்கள் கூடினர். அதேபோல் அதிக அழுத்தமுடைய ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமென உணரும்போதும் அவை இவ்வாறு சந்திக்கலாயின. டொலரின் பரிமாற்று விகித வீழ்ச்சி தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ள ஐந்து நிதியமைச்சர்களும் 1985 செப்டம்பரில் கூடியமை இவ்வாறுதனதே.

1975ல் இக்குழுவானது, அவ்வக்காலங்களில் காணப்படும் சர்வதேச பொருளாதார நிலைமை தொடர்பாக கலந்துரையாடுதற்காக, அரசாங்கத்தின் தலைவர்கள் (formal) முறைமையான கூட்டங்களை நடாத்துவதற்கு ஒப்புக்கொண்டது. 1975ல் றம்போலிற்றில் நடைபெற்ற மகாநாட்டில் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இக்குழுவில் இத்தாலியையும் சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. 1976ல் போட்டோறிக்காவில் நடைபெற்ற இரண்டாவது மகாநாட்டில் "குழு 5" டன் கனடா, இத்தாலி என்பனவும் சேர்ந்து கொண்டன. இதனால் "குழு 7" (The Group of 7) உருவாயிற்று. கூட்டங்களில் ஐரோப்பிய சமூக அமைச்சர் குழுவின் தலைவரும், தனியாகக் கலந்து கொள்ளலாம் எனக்கூறப்பட்டது. அப்பதவி 'குழு 7'ன் ஒழுங்கான அங்கத்தவரல்லாத நாடு ஒன்றினாலும் பெறப்படலாம் எனவும் கூறப்பட்டது.

1975—1985 காலப்பகுதிகளில் குழு5ம் குழு 7ம் தனித்தனியாக சந்தித்துக்கொண்டதுண்டு. குழு 5 முறைமையற்ற மாதிரியிலும், இரகசியமாகவும் சந்தித்த போது, "குழு 7" பகிரங்கமாகவே கூடியதுடன், பரவலான தொடர்பு முறைகளைப் பின்பற்றின. டொலரின் பரிமாற்றுப் பெறுமதியை குறைப்பதில் 1985 செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்ட குழு 5ன் கூட்டம் குறிப்பிடத்தக்களவு வெற்றியளித்தது இது பின்பு 'குழு 7', 'குழு 10' போன்ற அமைப்பு மாதிரிகளில் வேறு நாடுகளையும் இணைத்துக் கொள்ள உதவியது. 1986 டோக்கியோ மகாநாட்டிலும் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது. அதிலிருந்து எதிர்காலத்தில் குழு 5ன் நிதியமைச்சர்கள் வருடாந்த கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில், அடிக்கடி மிக நெருக்கமாக இணைந்து செயற்படுவதென தீர்மானிக்கப்பட்டது. அப்போது கனடா, இத்தாலி ஆகிய நாடுகளின் நிதியமைச்சர்களையும் அழைப்பதெனவும ஒப்புக் கொள்ளப்பட்டது. சர்வதேச நாணயமுறை தொடர்பான பொருளாதாரக் கொள்கை அளவீடுகள், சர்வதேச நாணய முறையின் முகாமை சார்ந்த விடயங்களில் இவ்வாறு கூடுவதென தீர்மானிக்கப்பட்டது. 1982ல் வேர்செயில்ஸில் நடைபெற்ற மகாநாட்டில் அரச தலைவர்கள் அல்லது அரசாங்கங்கள், பல்பக்க மேற்பார்வையைப் பலப்படுத்துவதில் சர்வதேச நாணய நிதியத்துடன், ஒத்துழைப்பதென தீர்மானிக்கப்பட்டது. அதேபோல் சர்வதேச நாணய நிதியின் முகாமை இயக்குனருடன் இணைந்து மேற்பார்வை விடயங்களில் முக்கியமான பொருளாதாரக் குறிகாட்டிகளிலும் குழு 5 அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

## குழு 10 (The Group of 10)

உலகின் பிரதான கைத்தொழில் நாடுகள் 10ம் இணைந்து 1962ல் சர்வதேச நாணய நிதியில் நிதி பெறுவதற்கான பொது ஏற்பாட்டை உருவாக்கின. அதுவே 'குழு10' எனப்படுகிறது. இந்த 10 நாடுகளில் ஜேர்மனியும், சுவீடனும் தமது மத்திய வங்கி மூலமாகவே தம்மை உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்துகின்றன. சர்வதேச நாணய நிதியில் குறைவு ஏற்படும்போது முன்னேற்பாடாக அதைச்சீர் செய்யும் நோக்குடன் நாணய நிதி பணம் பெற விரும்பும் போது இந்த நாடுகள் தமது செலாவணியில் கடன் கொடுக்கத் தயாராக இருக்கின்றன.

"குழு7"டன் மேலதிகமாக பெல்ஜியம், நெதர்லாந்து,சுவீடன் ஆகியவற்றையும் குழு 10. உள்ளடக்குகிறது. சுவிற்சலாந்து 1964 லிருந்து கடன் பெறுதற்கான பொது ஏற்பாட்டு அமைப்புடன் (GAB) தொடர்புற்றிருந்தாலும் 1983லிருந்துதான் இதன் மற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருரு பங்காளனுகியது. இது 11வது அங்கத்துவ நாடாகும். அக்காலத்தில் சில பத்திரிகைகளில் குழு 11 என்றும் குறிப்பிடப்பட்டது.

இந்த அமைப்பில் ஆளணி எதுவுமில்லை. ஆனல் சர்வதேசநாணயநிதி, சர்வதேச குடியமர்வு வங்கி, (International Settlers Bank) பொருளாதார ஒத்துழைப்பு அபிவிருத்திக்கான நிறுவனம் ஆகிய ஒவ்வொரு நிறுவனத்தில் இருந்தும் ஒவ்வொரு ஆளனி அங்கத்தவரால், செயலகசேவைகள் வழங்கப்படும். சர்வதேச நாணய அமைப்பு தொடர்பான பிரதான விடயங்களில் கலந்துரையாடுதற்கும், கடன் பெறுதற்கான பொது ஏற்பாட்டின் (General-Arrangements to Borrow - GAB) நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவற்றின் கூட்டங்கள் நடைபெறும். சர்வதேச நாணய நிதியின் இடைக்கால குழுக் கூட்டங்களுக்கு முன்பும், வருடத்தின் ஏனைய காலப் பகுதியிலும், பொதுவான நாணய விடயங்களிலும், அமைச்சர்கள் மட்டத்திலும் உதவியாளர்கள் மட்டத்திலும் இதன் கூட்டங்கள் நிகழ்வதுண்டு. அமைச்சர்கள் கூட்டத்தில் பொதுவாக சர்வதேச நாணயநிதியின் முகாமை இயக்குனர் கலந்து கொள்வார். உதவி அமைச்சர்கள் மகாநாட்டில் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் கலந்து கொள்வார்.

1984 — 86 காலப் பகுதியில், உதவி அமைச்சர்கள் பல தடவைகள் கூடினர். சர்வதேச நாணய ஒழுங்கு முறையின் தற்போது செயல்முறை பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் கூடிய கவனம் செலுத்தி வந்தனர்.

குழு 77ம் குழு 24ம் :
( The Group of 77 and 24 )

" குழு 77 " என்பது 1964ம் ஆண்டு ஜெனீவாவில் வளர்முக நாடுகள் உங்டாட் 1 (UNCTAD-I) பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஒன்று கூடிய போது உருப்பெற்றதாகும்; முதலாவது ஐக்கிய நாடுகளின் வர்த்தகத்துக்கும், அபிவிருத்திக்குமான மகாநாடு தொடங்கும் போது 75நாடுகளே இருந்தன. இம் மகாநாடு முடிந்தபின் இத்தொகை 77ஆக உயர்ந்தது.

இவற்றின் செயலமர்வு பற்றிய மதிப்பீடுகள் இந்த 77அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கூட்டுப்பிரகடனத்தின் அடிப்படையில் அமைந்தன. அதன் பின்பு இக்குழுவானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார, அரசியல் விடயங்களில் அவற்றின் பிரதிநிதியாகத் தொழிற்பட்டு, பல்வேறு ஐக்கிய நாடுகள் தாபன அமைப்புக்களின் முன் தோன்றியது. 1986 நடுப்பகுதியில் அதன் அங்கத்துவம் 127ஆகக் கூடியிருந்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பிலுள்ள பெரும்பாலான எல்லா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் இதில் அங்கத்தவராகின.

தொடக்க காலங்களில் இது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான பிரதான கூட்டமைவாக செயற்பட்டது. சர்வதேச நாணய விடயங்களில் கலந்துரையாடல்களை மேற்கொண்டது:அல்ஜியர்ஸ் சாசனம்(Charter of Algiers) 1967 ஒக்ரோபரில் இக்குழுவினுல் தயாரிக்கப்பட்டது. இதில் வெளிநாட்டுக்கடன்நிலை, இணைநிலை நிதியிடல், நட்டஈட்டு நிதிவசதி, வேறுநிதிகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தன.

ஒரு தசாப்த காலத்தில் சர்வதேச நாணயக் கொள்கை ஆக்கத்தில் குழு 10ன் அதிகரிக்கும் செல்வாக்கை நன்குணரக் கூடியதாயிருந்தது; 1971ன், லிமா (LIMA) பிரகடனத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் அமைப்புக்கு வெளியே, மட்டுப்படுத்தப்பட்ட சிறிய தொகுதி நாடுகள் சர்வதேச நாணய அமைப்பு சார்ந்த எதிர்காலத்தின் பலமான முடிவுகளை மேற்கொள்ள முடியாது எனக்கூறப்பட்டது.

தொடர்ந்து வந்த வருடத்தில் ஜெனீவாவில் குழு 77 அமைப்பானது " குழு 24 " என்ற விஷேட அமைப்பை ஏற்படுத்தியது. அது சர்வதேச நாணயப் பிரச்சினைகளில், சிறப்பாக, விரிவாக' அதிக விபரங்களைக் கொண்டதாக, விளக்கமளிக்கத்தக்கதாக உருவாக்கப்பட்டது. குழு 24 சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய, நிதிக்கொள்கைகள், பிரச்சினைகள் என்பன பற்றி நன்கு ஆராய்ந்து வேறுபல நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைக்கக் கூடியதாக சிபார்சு செய்வதற்குப் போதிய வாய்ப்பு கொடுபடும் எனக்கூறப்பட்டது. குழு 24 இவ்விடயங்களில், பொறுப்பேற்றதால், இதன் பின் குழு 77 நாணய விடயங்களை விரிவாக ஆராய்வதை விட்டுவிட்டது. 1979ல் பெல்கிரேட்டில் நடைபெற்ற கூட்டத்தில், சர்வதேச நாணய சீர்திருத்த செயல் முறைக்கான செயல்திட்ட வரையறைகள் பற்றிய கூட்டத்திலிருந்தே இவ்வாறு விலகிக் கொள்ளும் பண்பை குழு 77 கையாளத் தொடங்கியது.

இதில் ஆபிரிக்காவிலிருந்து 8 பிரதிநிதிகளும், வட, தென்னமெரிக்காவுக்கு 8 பிரதிநிதிகளும், ஐரோப்பா, ஆசியா கண்டங்களுக்கு 8 பிரதிநிதிகளும் என 24 பேர் காணப்பட்டனர். ஆபிரிக்காவில், அல்ஜீரியா, எகிப்து, எதியோப்பியா, கபொன், கானா, கோட்டி விவோர், நைஜீரியா, செயர் போன்றவற்றிலிருந்து தெரிவானார்கள். அமெரிக்காவில், ஆர்ஜென்தீனா, பிரேஸில், கொலம்பியா, குவாத்தமாலா, மெக்ஸிக்கோ பெரு, திரினிடாட்டும் டொபாகோவும், வெனிசுவெலா போன்றவற்றிலிருந்து பிரதிநிதிகள் தெரிவானார்கள். ஐரோப்பா, ஆசியாவைப் பொறுத்தவரை இந்தியா, ஈரான், லெபனான், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை, சிரியா, யூகோஸ்லாவியா போன்றவற்றின் பிரதிநிதிகள் தெரிவானார்கள்.

இக்குழுவின் வேலைகளை, ஒரு தலைவரும், இரண்டு உபதலைவர்களும் மேற் கொள்வர். ஒவ்வொரு பிரதேச குழுவிலிருந்தும், ஒருவர் தெரியப்படுவார். தலைவர் பதவி வருடாந்தம் சுழல் முறையில் மாற்றியமைக்கப்படும்.

செயலக சேவைகள் சர்வதேச நாணய நிதியினால் வழங்கப்படும். ஆராய்ச்சி, ஒருங்கிணைப்பு உதவிகள் உங்டாட்டினாலும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திச் செயலகத்தினாலும் கொடுபடும். இடைக்காலக் குழுக் கூட்டங்கள், அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் என்பவற்றுக்கு முன்பாக, கூட்டங்கள் நடாத்தப்படும். அமைச்சர்கள் கூட்டங்கள் அவர்கள் உதவி அமைச்சர்களால் நடாத்தப்படக் கூடியனவாகும்.

அமைச்சர்கள் கூட்டங்களில், சர்வதேச நாணயநிதியின் முகாமை இயக்குனரும், உலக வங்கித் தலைவரும் சமூகமளிப்பார்கள். உதவி அமைச்சர்கள் கூட்டங்களில் சிரேஷ்ட அலுவலர்கள் இடம் பெறுவர். பல்வேறு சர்வதேச முகவர் நிலையங்களிலிருந்தும், குழு 24ல் இடம் பெறாத ஆனால் குழு 77ல் இடம் பெறும் நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் பார்வையாளராக இவற்றில் கலந்து கொள்ள முடியும். குழு 77ல் அங்கத்தவராக இல்லாத சீனா, குழு 24ன் கூட்டங்களில் விருந்தினராக அழைக்கப்படுவதுண்டு. இக்குழு 24, சர்வதேச புதிய நாணய ஒழுங்கு முறை பற்றிய நடவடிக்கைகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நிலை பற்றிய திட்டங்கள், அறிக்கைகள் தயாரிப்பதில் முதன்மையான பங்கு வகிக்கும். 1974ல் ' சபை 20 ''ம் இடைக்காலக் குழுவும், அபிவிருத்திக் குழுவும் உருவாக்கப்பட்ட பின் இக்குழுவும் தன் செயற்பாடுகளை அபிவிருத்தி, நாணய விடயங்கள் சார்ந்தும் விரிவுபடுத்திக் கொண்டது.

குழு 10ஐப் போலவே குழு 24ம் காலத்துக்குக் காலம் சிபார்சுக்குரியதான விரிவான கொள்கை சார்ந்த சிபார்சுகளையும் இருவகைக் குழுக்களுக்கும் சமர்ப்பிக்கும். 1979ன் சர்வதேச நாணயமுறை சீர்திருத்தம், 1985ன் சர்வதேச நாணய அமைப்பின் தொழிற் பாடுகளின் சீர்திருத்தம் தொடர்பான இவற்றின் விதப்புரைகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

## உதவி நிதியங்கள் :

**பொறுப்பாண்மை நிதியம் (TRUST FUND)**

சர்வதேச நாணய நிதியினால் வளர்முக நாடுகளின் சென்மதி நிலுவை நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு உதவியாக உருவாக்கப்பட்டுள்ள நிதியங்களில் அதிகளவு சலுகை கொண்ட நிதியம் இதுவாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் :

1974க்குப் பின் வளர்முக நாடுகளின் சென்மதி நிலுவை சார்ந்த நெருக்கடிகள் அதிகரித்தபோது, அவற்றுக்கு உதவுவதற் காக உருவாக்கப்பட்டதே இதுவாகும். 1975 ஜனவரியில் வாஷிங்டனில் உலக வங் கியின் ஆளுநர் சபைகளின் இணை அமைச் சர் குழு, வளர்முக நாடுகளுக்கான மெய் வளங்களை மாற்றும் நிதியம் ஆகியவற்றின் கூட்டத்தின் பின் இந் நிதியத்தை உருவாக் குவது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது. 1975க்கு முற்பட்ட பல வருடங்களில், தாழ் வருமான நாடுகளில் உள்நாட்டு வளங்களை திறமையுடன் பயன்படுத்தல், ஏற்றுமதியை விரிவுபடுத்தல் பற்றிய பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், முன்னேற்றம் தென்படாததால் மேலதிக நிதி பொருத்த மான நிபந்தனைகளுடன் இந்த நாடுகளுக்கு கொடுபடுவது அவசியம் என உணரப்பட் டது. இதன்படியே அதிகளவு சலுகையுடை யதாக, இது தோற்றுவிக்கப்பட்டது. 1975 ஓகஸ்டில், இடைக்காலக் குழு தங்க விற்பனை இலாபத்திலிருந்து நிதி பெறுவது பற்றி ஒப்புக் கொண்டது. இதனால் 1976 மே மாதம் ஆறும் திகதி சர்வதேச நாணய நிதி இதைத் தொடக்கியது.

நிதிபெறல் :

சர்வதேச நாணய நிதியின் கையிருப் பில் உள்ள தங்கத்தை விற்பதென்றும், அத னால் கிடைக்கும் இலாபமே இதற்கு பிர தான நிதிமூலமாக இருக்குமென்றும் தீர் மானிக்கப்பட்டது. 1976 மே மாதத்தில் இடைக்காலக் குழுவினர் ஒப்பந்தத்தின் அக விதியின் இரண்டாவது திருத்தத்தைச் செய் தவுடன் நாணய நிதியத்தின் அப்போதைய கையிருப்புத் தங்கத்தில் மூன்றில் ஒரு பகு தியை, அதாவது ஐம்பது மில்லியன் அவுன்ஸ் தங்கத்தை விற்பதென்று தீர்மானித்தது. நான்கு வருட காலத்தில் இருபத்தைந்து மில்லியன் அவுன்ஸ் தங்கத்தை பகிரங்க ஏலத் தில் விற்க முடிவானது. ஏலவிற்பனை விலை யானது உத்தியோகபூர்வமான ஒரு அவுன்ஸ் தங்கவிலையான 35 சி. எ. உ. யிலும் கூடு தலாக வரும் நிலையில் கிடைக்கும் இலா பம் நம்பிக்கை நிதியில் இடப்பட்டது. 1980 மே மாதமளவில் தங்க ஏலங்கள் முடிவுற் றன. இதன் மூலம் 4.6 பில்லியன் (4600 மில்லியன்) அமெரிக்க டொலர்கள் பெறப் பட்டன.

நாடுகள் தாமாக விரும்பி வழங்கும் தொகைகளும் இந் நிதியில் இடப்பட்டன. யூகோசிலாவியா தனக்குரிய இலாபத்தில் மூன்றில் ஒரு பங்கினை இதற்கு கொடை யாக வழங்கியது. ஒபெக் அமைப்பில் அங் கத்துவம் கொண்டுள்ள இலாபத்தில் பங்கு கொள்ளக்கூடிய பல வளர்முக நாடுகள் ஒபெக் சிறப்பு நிதியத்தினூடாக (OPEC SPECIAL FUND) தமக்குரிய பங்கினையும் இந்த நிதியத்திற்கு மாற்றின.

சில நாடுகள் விரும்பிக் கொடுக்கும் கடன்களும், இந் நிதியிலிடப்பட்டன. ரூமே னியா தனக்குரிய இலாபப் பங்கில் பத்தில் ஒரு பகுதியை இந்த நிதிக்கு கடனாக வழங்க உடன்பட்டிருந்தது.

நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களி லான முதலீட்டிலிருந்து பெறும் வருமானங் களும் இந்த நிதியில் சேர்க்கப்படலாயின.

நிபந்தனைகள் :

சர்வதேச நாணய நிதியைப் பயன் படுத்துவது பற்றிய விதிகள் நம்பிக்கை நிதி யத்துக்கு பொருந்த மாட்டா. இந்த நிதி யத்தின் வளங்களை அங்கத்தவர்கள் தமது செலாவணிக்கு கொள்வனவு செய்ய வேண் டுமென எதிர்பார்க்கப்பட மாட்டாது. ஆனால் இதன் வளங்கள் அவர்களுக்கு கட னாகக் கொடுபடும். வழங்கப்படும் கடன்கள் எல்லாம் சி. எ. உ. ல் (சிறப்பு எடுப்பனவு உரிமை—SDR) குறிப்பிடப்படும். ஆனாலும் அமெரிக்க டொலர்களில் இவை கொடுபடும். இவற்றுக்கு மிகக்கூடிய சலுகை வீதமான வருடமொன்றுக்கு 0.5 வீத வட்டி அறவி டப்படும். கடன் வழங்கப்பட்ட திகதியிலி ருந்து 10 வருட தவணைக் காலம் அனுமதிக் கப்படும். ஐந்தரை வருடத்திலிருந்து வருட இடைக்காலங்களில் இவற்றைத் திருப்பிச் செலுத்திக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976 ஜூலை முதலாம் திகதியிலிருந்து இந்நிதியிலிருந்து கடன்கள் வழங்கப்படலாயின. இரண்டு வருடம் கொண்ட இரு பருவங்களில் இவை வழங்கப்பட்டன. இரண்டாவது கடன் பருவமானது எட்டு மாதம் பின்தள்ளி 1981 பெப்ரவரி முடிவில் அமைந்தது. முதலாவது பருவத்தில் 841 மில்லியன் சி. எ. உ. வழங்கப்பட்டது. தங்க விலைகள் போதியளவு உயர்ந்ததன் காரணமாக இரண்டாவது பருவத்தில் 2100 மில்லியன் சி. எ. உ. வழங்கப்பட்டது.

நிதி உதவி பெறுவோர்:

குறைந்தளவான தலாவருமானம் பெறுகின்றவையும், சென்மதி நிலுவை நெருக்கடியின் தீர்வுக்கு போதியளவு முயற்சி எடுத்துள்ளமையை வெளிப்படுத்தக் கூடியவையுமாகிய வளர்ச்சியடைந்துவரும், இதன் அங்கத்துவ நாடுகள் இதில் உதவி பெறலாம் எனப்பட்டது.

ஒவ்வொரு பருவத்தினதும், உதவித் தீர்மானங்களுக்கும் சில தகுதி விதிகள் மாற்றப்பட்டன. முதலாவது பருவத்தில் உதவி பெற விரும்பும் நாடுகள் 1975 ஓகஸ்டில் சர்வதேச நாணய நிதியின் அங்கத்தவராக இருந்திருக்க வேண்டும். அவர்களின் தலா வருமானம் 1973ல் 300 சி. எ. உ. ஐம் குறைவாக அல்லது 300 ஆக இருந்திருக்க வேண்டும் எனக்கூறப்பட்டது. இரண்டாவது பருவத்தில் உதவிபெற விரும்பும் நாடுகளின் தலாவருமானம் 1975ல் 520 ஐக்கிய அமெரிக்க டொலரிலும் குறைவாக இருந்திருக்க வேண்டும் எனக்கூறப்பட்டது.

முதல் பருவத்தில் தலாவருமானப்படி 61 நாடுகள் தகுதி பெற்றிருந்தன. ஆனால் சென்மதி நிலுவை நிலைமைகளின்படி 43 நாடுகளே தகுதி பெற்றிருந்தன. இரண்டாவது பருவத்தில் வருமானம், சென்மதி நிலுவை ஆகியவற்றினடிப்படையில் 53 நாடுகள் கடன்பெறும் தகுதியுடையனவாக இருந்தன.

நம்பிக்கை நிதியிலிருந்து இலங்கையும் ஓரளவு நிதி பெறக்கூடியதாயிருந்தது.

இந்த நிதியம் தன் இறுதிக் கொடுப்பனவை 1981 மார்ச்சில் நிறைவேற்றியது. அத்துடன் தன் பணிகளை அது முடித்துக் கொண்டது. இதன் கடன், வட்டி என்பன திரும்பப் பெறப்படும்போது எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியின் விஷேட தீர்ப்பனவுக் கணக்கிற்குமாற்றப்படலாயின.

1976 ஜூலை 1லிருந்து 1978 ஜூன் 30 வரை வழங்கப்பட்ட கடன்கள் 840 மில்லியன் சி. எ. உ. யாக காணப்பட்டன. இதில் எகிப்து 77.9 மில்லியன் சி. எ. உ. வைப் பெற்றது. பாகிஸ்தான் 97.4 மில்லியன், பிலிப்பைன்ஸ் 64.2 மில்லியன், தாய்லாந்து 55.5 மில்லியன் சி.எ.உ. வை பெற்றிருந்தன. இலங்கை 1978 நவம்பரில் 40.6 மில்லியன் சி எ. உ. பெற்றிருந்தது.

## இரந்தெனிகலத் திட்டம்

இதுவும் பெருமளவு முடிவடைந்துள்ள திட்டமாகும் இதில் 308 அடி உயரமும் 1591 அடி நீளமான அணைக்கட்டும் 648,000 ஏக்கர் அடி தண்ணீரும் கொள்ளும் நீர்த்தேக்கமும் உண்டு. விக்டோரியா நீர்த்தேக்க தண்ணீரை ஒழுங்குபடுத்தி A, B, C, திட்டங்களுக்கு நீர்ப்பாய்ச்ச இது உதவும். ஜேர்மன் சமஷ்டி அரசாங்கம் 410 மில்லியன் டுயச் மார்க் வழங்கியது. இலங்கை ரூபா 1170 மில்லியனும் செலவாகியது. 122 மெகாவாட் மின்வலுவை இது உற்பத்தி செய்யும். வருடமொன்றுக்கு 525 ஹெகாவாட் மணித்தியால மின்வலுவை இது வழங்கும்.

உள்ளூர் மீன்பிடி வளர்ச்சி, சுற்றுலா வளர்ச்சி, பொழுது போக்குக் கைத்தொழில், சிறுகைத்தொழில் வளர்ச்சி போன்றவற்றிற்கு இது உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி)
மாணவர் பக்கம்

# பொருளாதார முறைகள்

## சமூக உடமைப் பொருளாதார அமைப்பு :

சமதர்ம பொருளாதார அமைப்பின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தவை முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் காணப்படும் குறைபாடுகளேயாகும். இத் தகைய பொருளாதார அமைப்பு உலகில் உள்ள இளைஞர்களை எவ்வளவு தூரம் கவர்ந் துள்ளது என்பதை சுவீடன் நாட்டு அரசன் ஒருவன் தனது மந்திரிக்குக் கூறிய கூற்றில் இருந்து அறிந்து கொள்ளலாம். "ஒருவன் தனக்கு இருபத்தைந்து வயது வரும் வரை சமூகவுடமைவாதியாக இல்லாமல் இருப் பானாயின் அதன் கருத்து அவனுக்கு இதயம் இல்லை என்பதாகும். ஆனால் இருபத்தைந்து வயதுக்கு மேலும் அவன் சமூகவுடைமை வாதியாக தொடர்ந்து இருப்பானாயின் அதன் கருத்து அவனுக்கு மூளை இல்லை என் பதாகும்.'' சமூக உடமைப் பொருளாதாரம் பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன. இதனால் அவ்வரைவிலக்கணங்களில் இருந்து சமூக உடமைப் பொருளாதாரத்தின் முக் கிய பண்புகளை அறிந்து கொள்ளலாம்.

H. D. Dickenson என்பவர் சமூக உட மைப் பொருளாதாரத்திற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகிறார். "உற்பத்திக் காரணிகள் யாவும் சமூகம் முழுவதற்குச் சொந்தமானவையாகவும், அவை பொதுத் திட்டத்தின் அடிப்படையில், சமூகத்தினைப் பிரதிபலிப்பதாகவும் சமூகத்திற்குப் பொறுப் பாகவும் உள்ள உறுப்புக்களால் இயக்கப்படு வதாகவும், திட்டமிட்ட உற்பத்திமூலம் பெறப்படும் நன்மைகளுக்கு, சமஉரிமை அடிப்படையில் சமூகத்தில் உள்ள அங்கத் தினர்கள் யாவரும்உரிமையுடையோராகவும் உள்ள ஒரு பொருளாதார அமைப்பாகும்." (Dickenson, H. D. Economics of Socialism 1939 P. 11) மொறிசன் (Morrison) என்பவரது விளக்கம் பின்வருமாறு: "சமூக உடமையின் முக்கிய இயல்புகள் யாதெனில் சகல பாரிய கைத்தொழில்களும் நிலமும் அரசாங்கத்திற்கு சொந்தமானதாக இருப் பதுடன் அவை (தேசிய பொருளாதாரத் திட்டத்துடன் இணைந்ததாக) தனிப்பட்ட வர்களின் லாப நோக்கத்திற்காக அல்லாது பொதுநலனுக்காக இயக்கப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். (Readings in Economics edited by P. A. Samuelson second edition P.430) மேலேயுள்ள வரைவிலக்கணங் களில் இருந்து சமூக உடமைப் பொருளாதா ரத்தில் முக்கிய உற்பத்திக் காரணிகள் சமூ கத்திற்கு சொந்தமானதாக இருக்குமென் றும் அவை சமூக நலன் கருதி பயன்படுத்தப் படுமென்றும் இதனால் அப்பொருளாதாரத் தில் வருமானப் பரம்பலில் அதிகளவு வேறு, பாடு காணப்படமாட்டாதென்றும் சமூக நீதி பெருமளவுக்கு காணப்படுமென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க வேறுபாடுகள் காணப்படமாட்டா தென்றும் அறிந்துகொள்ளலாம்.

**சமூக உடமைப் பொருளாதாரத்தின் இயல்புகள் :**

**1, உற்பத்திக் காரணிகள் அரசாங்கத்தின் உடமையாக இருத்தல்**

சமூக உடமைப் பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிகள் சமூகத்தின் அல்லது பொது உடமையாகக் கருதப்படுகின்றன. தனிப்பட்ட எவரும் உற்பத்திக் காரணிகள் மீது சொந்தம் கொண்டாட முடியாது. எனினும் சமூக உடமைப் பொருளாதாரத்தினை ஏற்படுத்துவதற்கு எல்லா உற்பத்திக் காரணிகளையும் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க வேண்டுமென்பதில்லை. முக்கியமான உற்பத்தித் துறைகளை தனியாரின் கையில் விடாமல் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதும் ஒரு வகையில் சமூக உடமை நிலையைக் குறிப்பிடும். உதாரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக உள்ள கனரகத் தொழில்கள், அடிப்படைத் தொழில்கள், தொலைத் தொடர்பு சேவைகள், போக்குவரத்து சேவைகள் போன்றவற்றை தனது கட்டுப்பாட்டின்கீழ் அரசாங்கம் வைத்திருக்க வேண்டி இருக்கும். சில முக்கியமற்ற உற்பத்தித் துறைகளை தனியார் கையிலும் விடலாம். பெரும்பாலான முக்கியமான துறைகளை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பின் சமூகத்தின் நலனை அதிகரிக்கக்கூடிய வகையில் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு, பரிமாற்றம் போன்ற பல விடயங்களையும் இலகுவாகக் கையாளலாம்.

**2. பொருளாதார சமத்துவம்**

நாட்டின் உற்பத்திக் காரணிகள் சமூக உடமையாகக் காணப்படுவதால் வருமான வேறுபாடு இப் பொருளாதாரத்தில் குறைவாகக் காணப்படுகின்றது. பெருமளவுக்கு வருமானத்தில் சமத்துவ நிலை பேணப்படுகின்றது. உழைக்காமல் வருமானம் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு இப்பொருளாதாரத்தில் ஊக்கம் கொடுக்கப்படுவதில்லை. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுகிறது. திறமையாக வேலை செய்பவர்கள் திறமையற்ற தொழிலாளர்களை விட அதிக வருமானம் பெறுவதற்கான வாய்ப்புண்டு. எனினும் முதலாளித்துவ பொருளாதாரத்தில் காணப்படுவதுபோல் வருமானத்தில் பெருமளவு ஏற்றத்தாழ்வினைக் காண முடியாது. தேசிய உற்பத்தியில் சமபங்கீடு இருக்கத்தக்க வகையில் அரசாங்கத்தினுல் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் திறமை கூடியவர்களை ஊக்குவிப்பதற்காக கூலியில் சிறிதளவு வேறுபாடு காட்டப்படுகின்றது. எனவே சமூக உடமைப் பொருளாதாரத்தில் சகலரும் சமமான கூலியைப் பெறுகின்றுர்கள் என எண்ணுவது தவறு.

**3. சமசந்தர்ப்பம்**

முதலாளித்துவ பொருளாதாரத்தில் சகல மக்களுக்கும் சமசந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. செல்வந்தர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளே இங்கு அதிகமாக உள்ளது. தம்மிடம் உள்ள செல்வத்தினை பயன்படுத்தி ஒரு சிலர் தொடர்ந்து முன்னேற முதலாளித்துவ பொருளாதாரத்தில் பலர் பின்னிற்க வேண்டி உள்ளது. ஆனுல் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விடயங்களில் செல்வந்தர்களும் அவர்களின் வாரிசுகளும் அதிக வாய்ப்பை பெறுகின்றனர். ஆனுல் சமூக உடமையின்கீழ் சகல மக்களும் முன்னேறுவதற்கான சமவாய்ப்பு காணப்படுகின்றது கல்வி, சுகாதாரம் போன்றவை அரசாங்கத்தினுல் சகலருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றது. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம்வரை சகலரின் பிள்ளைகளுக்கும் சமூக உடமைப் பொருளாதாரத்தில் சமவாய்ப்பு அளிக்கப்படுகின்றது. முதலாளித்துவ பொருளாதாரத்தில் வறியவர்களின் பிள்ளைகள் குறிப்பிட்ட எல்லைக்கப்பால் வசதியின்மை காரணமாக படிப்பினைத் தொடரமுடியாத நிலையில் இருப்பர். சமூக உடமைப் பொருளாதாரத்தில் கல்வித் தகைமைக்கேற்ற வகையில் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். சமூகத்தில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலருக்கும் சமவாய்ப்புக்கள் கிடைக்கும் போது வருமானப் பங்கீடும் சமமாக அமைவதற்கான வாய்ப்புக்கள் கூடுதலாக உண்டு.

4. பொருளாதாரத் திட்டமிடல்

பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல் என்பது சமூக உடமைப் பொருளாதாரத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். சமூக உடமைப் பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிகள் யாவும் அரசாங்கத்தின் உடமையாக இருப்பதால் திட்டமிடுதல் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சியை வெற்றிகரமாகப் பெறக்கூடியதாக உள்ளது. இங்கு திட்டமிடுதலுக்குப் பொறுப்பாக மத்திய அதிகாரசபை அல்லது திட்டமிடல் குழு என்பது உள்ளது. பெரும்பாலும் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதன் மூலம் உற்பத்தி முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றது திட்டமிடுதல் என்பது தற்போது முதலாளித்துவ நாடுகளால் கைக்கொள்ளப்பட்டு வந்தாலும் அங்கு உற்பத்திக் காரணிகள் தனியாரின் கையில் இருப்பதால் திட்டத்தின் நோக்கங்கள் சில சமயங்களில் அடையமுடியாமலேயே போய்விடுகின்றது. தேசிய உற்பத்தியினை பெருக்குவது மட்டும்தான் திட்டத்தின் நோக்கமல்ல உற்பத்தி பெருக்கமடையும் போது அவை சமூகத்திற்கிடையே சமமாகப் பங்கிடல் வேண்டும் என்பதும் நோக்கமேயாகும். சமமாகப் பங்கீடு நடைபெறும் போதே சமூக நலன் அதிகரிக்கமுடியும்.

5. பொதுநலன் குறித்த உற்பத்தி

உற்பத்தி நடைபெறும்போது இலாப நோக்கம் சமூக உடமைப் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தினைப் பெறுவதில்லை. வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற பொருட்களின் உற்பத்திக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. மக்களின் நலனைப் பெருக்குவதே உற்பத்தியின் முக்கிய நோக்கமாகும். ஆனால் முதலாளித்துவ பொருளாதாரத்தில் இலாப நோக்கம் முக்கியமாக அமைவதால் அதிக இலாபம் தரும் ஆடம்பரப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் காரணமாக முதலாளித்துவ பொருளாதாரத்தில் சில சமயங்களில் வறியவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க முடியாமல் போகின்றன. சமூக உடமைப் பொருளாதாரத்தில் மேலும் மக்கள் நலனை முன்னேற்றுவதற்காக அரசாங்கத்தினால் சமுதாயத்திற்கு இலவச மருத்துவ வசதி, இலவச கல்வி வசதி மற்றும் பல பொழுதுபோக்கு வசதிகள் என்பன வழங்கப்படுகின்றன.

6. வகுப்புபேதமற்ற சமுதாயம்

உற்பத்திக் காரணிகள் அரசாங்கத்தின் உடமையாக இருப்பதாலும் வருமானப் பங்கீட்டில் அதிக ஏற்றத் தாழ்வு ஏற்படா வண்ணம் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதனாலும் பணம் படைத்தவர்கள், வறியவர்கள் என்ற இருவகை வகுப்பினர் சமூக உடமைச் சமுதாயத்தில் காணப்படுவதில்லை. முதலாளி, தொழிலாளி என்ற வர்க்கப்போராட்டங்கள் இங்கு இல்லை. குடும்பப் பின்னணி, சாதி, சமயம் என்ற பேதமின்றி சகலருக்கும் சம வாய்ப்பு இப் பொருளாதாரத்தில் வழங்கப்படுகின்றது.

7. உழைப்புக்கு உயர்ந்த அந்தஸ்து

திறமைக்கேற்ற வகையில் உழைப்புக்கு கூலி வழங்கப்படுகின்றது. கடினமாக வேலை செய்பவர்கள் ஓரளவுக்கு மற்றவர்களைவிட உயர்ந்த வருமானம் பெறுகிறார்கள். பொருட்களின் உற்பத்தியில் ஏனைய உற்பத்திக்காரணிகளுக்கு வழங்கப்படும் மதிப்பிலும் பார்க்க உயர் மதிப்பு உழைப்புக்கே வழங்கப்படுகின்றது. எவ்வகைத் தொழிலில் உழைப்பினர் ஈடுபட்டிருந்தாலும் அத் தொழில்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமாக அமைகின்றபோது அத்தொழிலாளர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்றனர்.

**சமூக உடமைப் பொருளாதார அமைப்பின் சிறப்புக்கள்:**

1. சாதனங்கள் திறமையாகப் பயன் படுத்தப்படுதல்

சமூக உடமைச் சமுதாயத்தில் திட்டங்களின் அடிப்படையில் உற்பத்தி மேற்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்படுவதால் பொருளாதாரரீதியில் உற்பத்திச் சாதனங்கள் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. முதலாளித்துவ சமுதாயத்தில் தனியுரிமைநிலை காணப்படுவதும் வருமானம் பங்கீட்டில் அதிக ஏற்றத்தாழ்வு காணப்படும் நிலையும் உற்பத்திச் சாதனங்கள் திறமையான முறையில் பயன்படுத்துவதற்கு தடையாக உள்ளன. திட்டமிடல் குழுவானது முதலில் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அத்தகைய பொருட்களின் உற்பத்திக்கு ஊக்கம் கொடுக்கிறது. நுகர்வோன் விருப்பத் தெரிவுக்கு சமூக உடமைப் பொருளாதாரத்தில்இடம் இல்லை என முற்றாகக் கூறி விட முடியாது அரசாங்கம் குறிப்பிட்ட சில பொருட்களை உற்பத்தி செய்து நிலையான விலையினை நிர்ணயிக்கலாம். இவ் விலையில் நுகர்வோர் கொள்வனவு செய்யும் தொகைக் கேற்ப உற்பத்தியை தொடர்ந்து மேற் கொள்ளலாம். சமுதாயத்திற்கு தீங்கு தரும் பொருட்களை உற்பத்தி செய்யாமல் விடுதல் தீமையான விடயமல்ல. சமுதாய நலனையும் நுகர்வோன் தெரிவையும் கவனத்திற் கொண்டு திட்டமிடல் குழுவானது உற்பத்தியை மேற் கொள்ளும்போது சிறந்த முறையில் சாதனப் பயன்படுத்தல் இடம் பெறுகிறது.

### 2. சமமான வருமானப் பங்கீடு

நாட்டின் உற்பத்தியினை மக்களுக்கிடையே சமமாகப் பங்கிடுவதில் அரசாங்கம் தனது செல்வாக்கினை முழுமையாகப் பயன்படுத்துகிறது. இதனால் வருமானப் பங்கீட்டில் சமமின்மை குறைய ஒருவரை ஒருவர் சுரண்டும் நிலை இல்லாமல் போகின்றது. எவரும் உழைப்பினை வழங்காமல் வருமானம் பெறுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் சமுதாய நீதி அங்கே காணப்படுகின்றது. சமூக உடமைப் பொருளாதாரத்தில் பணத்திலும் பார்க்க மனிதத் தன்மைக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

### 3. வேலைவாய்ப்பு

உழைக்கும் தகுதி கொண்ட சகல மக்களுக்கும் அவரவர் திறமைக்கேற்ப சமூக உடமைச் சமுதாயத்தில் வேலை வழங்கப்படுகின்றது. வேலை இன்மை என்ற பிரச்சனை இங்கே இல்லை. இதனால் வேலையின்மை காரணமாக எழக்கூடிய சமூக பொருளாதாரத் தீங்குகள் இங்கு இல்லை.

### 4. வர்க்கப் போராட்டம்

வருமானப் பங்கீட்டில் சமமின்மை என்பது அதிகம் காணப்படுவதில்லையாதலால் முதலாளிகள் தொழிலாளிகள் என இரு வர்க்கம் இங்கு இல்லை. இதனால் மனிதனை மனிதன் சுரண்டும் நிலை இல்லை. வேலை நிறுத்தம் என்பது கிடையாது. நாட்டின் செல்வங்கள் மக்களுடைய பொதுச் சொத்தாக அமைகின்றன. எல்லோருக்கும் தேவைக்கேற்ற வசதிகள் அளிக்கப்படுகின்றன.

### 5. பொருளாதார உறுதி காணப்படல்

முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஒரு காலத்தில் தேசிய உற்பத்தியில் தேக்கமும் இன்னொரு காலத்தில் செழிப்பும் ஏற்படுகின்ற நிலை மாறி மாறிக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் தேக்க காலத்தில் மிகவும் கஷ்டப்பட வேண்டி உள்ளது: சேமிப்பு முதலீட்டிலும் பார்க்க அதிகமாக அமைகின்ற காலங்களில் தான் தேக்கநிலை ஏற்படுகின்றது. ஆனால் சமூக உடமைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் பணத்துறை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதால் தேசிய உற்பத்தியில் ஏற்றமும் இறக்கமும் காணப்படும் வர்த்தக சகட ஓட்டநிலை காணப்படுவதில்லை.

### 6. போட்டி மூலம் ஏற்படும் தீமைகள் இல்லை

முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்தியாளர், நுகர்வோர் போன்றோர் தமக்கிடையே போட்டி போடுகின்றனர் என ஏற்கனவே நோக்கியுள்ளோம். இதன் காரணமாக விளம்பரம் செய்ய வேண்டி உள்ளதென்றும் அதனால் சாதன விரயம் ஏற்படுகின்றதென்றும் நோக்கியுள்ளோம். ஏனெனில் போட்டியின் காரணமாக ஒரு பொருள் பல்வேறு வடிவங்களில் செய்யப்படுகின்றது. இவற்றில் தரம் குறைந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். தேங்கிக் கிடக்கும் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் வீணாக்கப்பட்டவையல்லவா? சமூக உடைமைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் சகல தொழில்களும் உள்ளன. அங்கு போட்டி என்பது இல்லை. இதனால் தேவையற்ற வகையில் தரம் குறைந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு தேங்கிக் கிடப்பதுமில்லை.

7, உற்பத்தித் திறமையை முன்னேற்றுதல்

முதலாளித்துவ பொருளாதாரத்தில் தனிப்பட்ட நிறுவனங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தொழில் நுட்ப முன்னேற்றங்களைப் பெற்றாலும், அவை அம்முன்னேற்றங்களை இரகசியமாக வைத்து தம்முடைய இலாபத்தினைப் பெருக்கிக் கொள்வதற்கே கையாள்கின்றன. ஆனால் பொதுஉடமைப் பொருளாதாரத்தில் ஆராய்ச்சிமூலம்பெறப்படும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் நாட்டில் சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது. இதனால் அக்கண்டுபிடிப்பினால் பெறக்கூடிய பலனை எவரும் அனுபவிக்கலாம். பல நிறுவனங்களும் தொழில் நுட்ப முன்னேற்றத்தினைப் பயன்படுத்தும்போது தேசிய உற்பத்தி அதிகரிக்கின்றது.

சமூக உடைமைப் பொருளாதார அமைப்பின் குறைபாடுகள்

1. அரசாங்கத் துறைகளின் திறமைக்குறைவு

சமூக உடமைப் பொருளாதாரத்தில் வேலை செய்யும் அனைவரும் அரசாங்க ஊழியர்களேயாவர். இவர்கள் கடினமாக உழைத்தாலும் ஓரளவுக்குமேல் உயர்ந்த வருமானத்தினைப் பெறமுடியாது. வேலையில் அக்கறை இன்றி இருப்பினும் ஓரளவு வருமானம் பெறுவர். மேலும் தனியார் சொத்துரிமையோ வாரிசு உரிமையோ சமூகப் பொருளாதாரத்தில் இல்லை. இதனால் அதிகம் வேலை செய்து அதிக வருமானம் உழைத்துச் சொத்துக்களைச் சேகரித்து வைப்பதில் மக்கள் அக்கறை காட்டமாட்டார்கள். இதன் காரணமாக மக்களின் உழைக்கும் ஆர்வம் குறையும் என்றும் வேலையில் அதிக கவனம் செலுத்தமாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

2. சாதன ஒழுங்குபடுத்தலில் குறைபாடு

சமூக உடமைப் பொருளாதாரத்தில் மக்களின் தேவைகள் எவ்வளவு என்பதைக் காட்டக்கூடிய தன்னிச்சையாக இயங்கும் குறிகாட்டிகளில்லை. முதலாளித்துவ பொருளாதாரத்தில் இத்தகைய குறிகாட்டி விலைப் பொறிமுறையாகும். எனவே சில சமயங்களில் தேவைக்கு மேலாக ஒரு பொருளை உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இங்குண்டு. இதனால் பொருட் தேக்கம் ஏற்படும். இதனால் சாதன விரயமேற்படும். இவ்வகையான சாதன விரயமேற்படாமல் சரியான முறையில் பொருட்களின் தேவைக்கேற்ற வகையில் உற்பத்தி நடைபெறவேண்டுமாயின், திறமையான திட்டமிடல் குழு இருத்தல் அவசியம். எனினும் மனித நடவடிக்கைகளை துல்லியமாகக் கணக்கிட முடியாததால் சாதன விரயம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளுண்டு.

3. உழைப்புக்கேற்ற ஊதியமில்லை

சமூக உடமைப் பொருளாதாரத்தில் உழைப்புக்கு மதிப்பு கொடுக்கப்படுகிறது. என்பது உண்மையே: திறமையான கடின உழைப்பாளிக்கும் திறமை குறைந்த உழைப்பாளிக்கும் வழங்கப்படும் சம்பளத்தில் அதிக வேறுபாடில்லை, உண்மையில் இவ்வேறுபாடு அதிகளவு இருக்கவேண்டும். கடின உழைப்பாளிகள் கூட தாம் பெற்ற வருமானத்தில் குறிப்பிட்ட அளவுக்கு மேலாக சேமித்து எதிர்காலத்தில் நன்மையைப் பெறும் நிலையும் இல்லை. இத்தன்மை நியாயமானதாக இல்லை.

4. நிர்வாகச்சுமை

சமூக உடமைப் பொருளாதாரத்தில் சகல விடயங்களையும் அரசாங்கமே கவனிக்க வேண்டியுள்ளது. இதனால் அரசாங்க உழைப்பினரின் வேலையும் அதிகரிக்கின்றது. இப்பொருளாதாரத்தில் அரசாங்க அலுவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சேவைக்கால அளவின்படியே உத்தியோக உயர்வு கிடைக்குமென நம்புகிறார். இதன் காரணமாக அவர்கள் தமது கடமைகளை விரைவாகச் செய்ய வேண்டுமென்றும் விரும்புவதில்லை. இதன் காரணமாக மெதுவாக வேலை நகரும் சிவப்பு நாடா முறை காணப்படுகின்றது.

5. நிதிப்பற்றுக்குறை

உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவு முதலீடு அவசியம். இப்பொருளாதாரத்தில் அரசாங்கமே முதலீடு யாவற்றுக்கும் பொறுப்பாகவுள்ளது. முதலாளித்துவ பொருளாதாரத்தில் தனியாரும் அரசாங்கமும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பொருளாதார வளர்ச்சியை உடனடியாக உயர்த்தவல்ல அளவுக்கு அரசாங்கத்தினால் மட்டுமே முதலீட்டினைப் பெருக்கமுடியாது என்று கூறப்படுகின்றது.

6. பொருளாதார சுதந்திரமில்லை

இப் பொருளாதாரத்தில் தனியார் சொத்துடைமையோ, வாரிசு உரிமையோ இல்லை. மக்கள் தமது விருப்பத்திற்கே பொருட்களைப் பெறக்கூடிய நிலை இங்கு காணப்படுவதில்லை. அரசாங்கம் உற்பத்தி செய்யும் பொருட்களையே நுகரவேண்டும். முதலாளித்துவ பொருளாதாரத்தில் காணப்படுவது போன்று பல்வேறு வகையான பொருட்களை இங்கே காண முடியாது சில பொருட்களே உற்பத்தி செய்யப்படுகின்றன அத்துடன் தொழிலாளி ஒருவர் தாம் விரும்பிய தொழிலுக்கு உடனடியாக மாற முடியாது. மத்திய திட்டமிடல் குழுவுக்கு அறிவித்து அதன் அனுமதியுடன்தான் வேறு தொழிலில் ஒருவர் சேர்ந்து கொள்ள முடியும். பெரும்பாலும் குறிப்பிட்ட வேலை செய்வதற்கென ஒதுக்கப்பட்ட தொழிலாளி பல ஆண்டுகள் அத்தொழிலில் வேலை செய்ய வேண்டி இருக்கும்.

7. பொருளாதார சமத்துவம் இன்மை

சமூக உடமைப் பொருளாதாரத்தில் பொருளாதார சமத்துவம் இருக்குமென்றும் இதனால் சமூக நீதி கிடைக்கும் என்றும் நியாய விரும்பிகள் பலர் எதிர்பார்த்தனர். எனினும் நடைமுறையில் சில சமூக உடமை நாடுகளில் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடு பலருக்கு ஏமாற்றம் கொடுத்துள்ளது.

8. சுதந்திரமற்ற நிலை

பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றையும் அரசாங்கமே தீவிரமாகக் கட்டுப்படுத்துகிறது. இதனால் மக்கள் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது. மக்களுக்கு அடிப்படைச் சுதந்திரம் உண்டு, எனினும் வேறு பல வழிகளால் சுதந்திர நிலை பறிபோகின்றது. சமூக உடமைப் பொருளாதார நாடுகளை 'பெரிய சிறை' என்று விமர்சகர்கள் வர்ணிக்கின்றனர்.

9. குறைபாடுடைய திட்டங்களால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுதல்

சமூக உடமைப் பொருளாதாரங்களில் திட்டங்கள் மூலமே பொருளாதார முன்னேற்றம் பெறப்படுகிறது. திட்டங்கள் சரிவர பல காரணிகள் துணை நிற்க வேண்டும். திட்டங்கள் திறம்பட தீட்டப்பட்டிருக்காவிடின் நாட்டின் முன்னேற்றமும் பாதிக்கப்படும்.

கலப்பு பொருளாதார அமைப்பு

இன்று நடைமுறையில் உள்ள பொருளாதார அமைப்புக்களை எடுத்து நோக்கின் தூய முதலாளித்துவ பொருளாதாரத்தினையோ அல்லது தூய சமூக உடமை பொருளாதாரத்தினையோ காணமுடியாது. இரண்டும் கலந்த நிலையினையே காணலாம். கலப்புப் பொருளாதாரம் என்பதன் கருத்து யாதெனில் பொருளாதார நடவடிக்கைகள் அரசாங்கத்தினாலும் தனியாராலும் இயக்கப்படுவதைக் குறிக்கும். அதாவது தனியார் துறை இப்பொருளாதாரத்தில் கட்டுப்பாடின்றி தமது விருப்பப்படி இயங்கமுடியாது. அரசாங்கம் தனியார்துறை நடவடிக்கைகளில் இடைக்கிடை தலையிட்டு அதனை ஒழுங்குபடுத்துகிறது. காரணம் தனியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையினை தனியே இயங்க விடுவதால் ஏற்படும் வருமானச் சமமின்மை, வர்த்தக சகட ஓட்டம், வேலையின்மை, பணவீக்கம் போன்ற தீமைகள் எழாவண்ணம் தடுப்ப தற்கேயாகும். அரசாங்கத்துறையின் உதவி யில்லாமல், திட்டமிட்ட அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக் கொள்வது முடியாத காரியம் என்பது பல குறைவிருத்தி நாடுகளின் அனுபவங்களில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. எனவே அரசாங்கம் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நன்கு வளர்ச்சி அடைந்த முதலாளித்தவ நாடுகளில் கூட அரசாங்கத் துறையின் பங்கு அதிகரித்துக்கொண்டு வருவதைக் காணலாம்.

### கலப்பு பொருளாதாரத்தின் பிரதான இயல்புகள்

1. தனியார்துறையும் அரசாங்கத்துறையும் இணைந்து இருத்தல்

தனியார்துறையும் அரசாங்கத்துறை யும் பொருளாதார நடவடிக்கைகளில் ஏறக்குறைய சமமான அளவில் பங்கு பெறும் கலப்புப் பொருளாதார அமைப்பில் காணப்படும் நாட்டின் பொரு ளாதாரத்திற்கு மிகவும் அடிப்படையான துறைகளை அரசாங்கம் தனது கட்டுப்பாட் டின் கீழ் வைத்திருக்கும். உதாரணமாக கனரக அடிப்படைக் கைத்தொழில்கள், அணு உற்பத்தி, பாதுகாப்பு உபகரண உற்பத்தி போன்றவற்றைக்கூறலாம். ஏனைய துறைகளான நுகர்வுப் பொருட்களை உற் பத்தி செய்யும் கைத்தொழில்கள், சிறிய குடிசைக் கைத்தொழில்கள், விவசாயம் போன்றன தனியார் கையில் விடப்பட் டிருக்கும். எனினும் தனியாரால் மேற் கொள்ளப்படும் உற்பத்தித்துறைகளுக்கு அரசாங்கம் பல சலுகைகளை, உதவிகளை வழங்கி அதன் முன்னேற்றத்திற்காக வும் பாடுபடும். ஏனெனில் தனியார்துறை யில் ஏற்படும் ஒழுங்கான முன்னேற்றமும் நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத் தும் என்பதலாகும். அரசாங்கத்திற்கும், தனி யார் துறைக்கும் இடையே போட்டி என் பது சில துறைகளில் மட்டும் காணப்படும்.

2. விலை முறையும் திட்டமிடல் முறையும் இணைந்து இருத்தல்

கலப்புப் பொருளாதார முறையில் இயங்குகின்ற தனியார் துறைக்கு வழிகாட் டியாக விலைமுறை அமைந்திருக்கும். எப் பொருள் அதிக இலாபம் தரக்கூடியதாக இருக்குமோ அப்பொருட்களையே தனியார் துறையினர் கூடுதலாக உற்பத்திசெய்யமுனை வர். உதாரணமாக விவசாயத்துறையினை எடுத்துக்கொண்டால் மிளகாய்உற்பத்தியில் ஈடுபடுவதினால் பெறப்படும் இலாபத்திலும் பார்க்க வெங்காய உற்பத்தியில் ஈடுபடுதல் அதிக இலாபம் தரும் எனினும் பெரும்பா லான விவசாயிகள் குறிப்பிட்ட காலத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவர். எனவே தனியார் துறையினைப் பொறுத்த மட்டில் உற்பத்தி சாதன ஒதுக்கலில் இவ்விலை முறையே பெரும் பங்கினைப் பெற்றுக் கொள்கின்றது அரசாங்கத் துறையினைப் பொறுத்த உற்பத்திச் சாதன ஒதுக்கலா னது திட்டமிட்ட அடிப்படையில் நடை பெறுகின்றது.

3. அரசாங்க விதி ஒழுங்குகளும் தனியார் துறை மீதான கட்டுப்பாடும்

கலப்புப் பொருளாதாரத்தில் சில துறை கள் தனியார் கையில் விடப்பட்டிருப்பினும், அத்துறைகளைப் பொறுத்து தனியார் தமது விருப்பம்போல செயற்பட முடியாது. நாட்டு மக்களின் நலன் கருதி அரசாங்கம் தனி யார்துறைமீது சிலகட்டுப்பாடுகளை மேற் கொள்ளும். அனுமதிப் பத்திரமுறை என் பது இத்தகைய கட்டுப்பாட்டு முறைகளில் ஒன்றேயாகும். குறிப்பிட்ட ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தனியார் துறைக்கு, அனுமதி வழங்கலாம் அல்லது மறுக்கலாம். அரசாங்கம் காலத்திற்குக் காலம் பொருத்தமான முறையில் நாணய நடைமுறைக் கொள்கை, நிதி நடைமுறைக் கொள்கை என்பவற்றில் மாற்றங்களை ஏற் படுத்தி தனியார் துறைமீது ஒழுங்கு நட வடிக்கைகளை மேற்கொள்கின்றது. வரிவிடு தலை, கடன் வசதிகள், வரிச்சலுகைகள், இறக்குமதி அனுமதிப்பங்கு போன்ற விட யங்கள் தனியார் துறைமீது அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளும் ஒழுங்கு படுத்தல் நடவடிக்கைகளையே தெரிவிக்கின்றன,

4. நுகர்வோர் சுதந்திரம் பாதுகாக்கப்படல்

சமூக உடமைப் பொருளாதாரத்தில் நுகர்வோன் இறைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறினோம். கலப்புப் பொருளாதாரத்தில் பங்கீடு, விலைக்கட்டுப்பாடு போன்ற முறைகள் நுகர்வோனது தெரிவில் சில அசௌகரியங்களை ஏற்படுத்தினுலும் அவை நுகர்வோன் நலன் கருதியும், சமூக நலன் கருதியுமே ஏற்படுத்தப்படுகின்றன. தனியுரிமை உற்பத்தியாளர்கள் நுகர்வோரைச் சுரண்டுவதைத் தடுப்பதற்காக அரசாங்கம் உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலைகளை விதிக்கிறது. முதலாளிகள் தொழிலாளிகளுக்கு குறைந்த பட்ச கூலி வழங்கி சுரண்டுவதைத் தடுப்பதற்காகவே குறைந்தபட்ச கூலிச் சட்டங்களை அரசாங்கம் இயற்றி அவற்றினை நடைமுறைப்படுத்துகிறது. நுகர்வோர் இப்பொருளாதார அமைப்பில் பல பொருட்களையும் தம் விருப்பப்படி பெறக்கூடியநிலை காணப்படுகின்றது. நுகர்வோரின் தெரிவே தனியார்துறை உற்பத்தியாளர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது.

5. வருமானப் பங்கீட்டில் உள்ள சமமின்மையைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்

வருமானப் பங்கீட்டில் உள்ள சமமின்மையானது பலவகைத் தீங்குகளுக்கு வழிவகுப்பது மட்டுமல்ல, சமூக ரீதியாக அநீதியானதுமாகும். வருமானப் பங்கீட்டில் உள்ள சமமின்மை செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்கவும்' வறியவர்களை மேலும் வறியவர்களாக்கவும் வழிவகுக்கும். கலப்புப் பொருளாதாரத்தில் வருமானப் பங்கீட்டில் உள்ள சமமின்மையை நீக்க அரசாங்கத்தினுல் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. செல்வந்தர்களின் வருமானத்தில் கணிசமான அளவு வரியாகப் பெறப்படுகின்றது. சொத்துவரி, விருத்தி முறைவரி, நன்கொடைவரி போன்றவை வருமானப் பரம்பலில் காணப்படும் சமமின்மையை நீக்குவதற்கு உதவுகின்றன. மேலும் வறிய மக்களின் நலனை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினுல் மானியங்கள் பல வழங்கப்படுகின்றன. இலவசக்கல்வி, இலவச மருத்துவ வசதிகள், கடன் வசதிகள் மற்றும் பல சமூக நலசேவைகள் போன்றவற்றை மேற்கூறியதற்கு உதாரணமாகக் கூறலாம்.

6. சுரண்டலைத் தடுத்தல்

முதலாளிகளின் சுரண்டலில் இருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகள் ஒழுங்கு விதிகளைக் கையாள்கிறது.

வருமானம் குறைவாக உள்ளவர்கள் தமது சிறிய பிள்ளைகளையும் வேலைக்கு விட்டு சம்பாதிக்க முனைவர். இது சிறுவர்களின் நலனைப் பாதிப்பதுடன் சிறந்த பிரஜையாக உருவாக்குவதையும் தடுக்கும். இதனைத் தடுப்பதற்கு சிறுவர்கள் வேலைக்குச் செல்லக் கூடாது என்ற சட்டம் உண்டு. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கென பல சட்டங்கள் இயற்றப்பட்டு உள்ளன. உதாரணம் குறைந்தபட்ச கூலிச்சட்டம், தனியுரிமை உற்பத்தியாளர்கள் தமது தனியுரிமை நிலையைப் பயன்படுத்தி உற்பத்தியைக் குறைத்து விலையை உயர்வாக வைத்திருக்கலாம். உற்பத்தியைக் குறைத்தால் வேலைவாய்ப்பும் குறையும். இத்தகைய தொழில்களை அரசாங்கம் தானே ஏற்று நடாத்த முயலலாம். மேலும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களின் விலையினை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உயர விடாது அரசாங்கம் பார்த்துக்கொள்கிறது. எனினும் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் போன்ருேர் கணிசமான அளவு இலாபம் பெறவும் முடிகின்றது.

கலப்பு பொருளாதாரஅமைப்பின் நன்மைகள்

1. சமுதாய நலன் பேணப்படல்

முதலாளித்துவ பொருளாதாரத்தில் காணப்படுவதுபோல, கலப்புப் பொருளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தில் சகல நடவடிக்கைகளும் இலாப நோக்கத்தின் அடிப்படையில் செய்யப்படு வதில்லை. அரசாங்கம் சமுதாய நலனைப் பேணும் வகையில் கைத்தொழில், விவசாயம், வர்த்தகக் கொள்கைகளைத் தீர்மானிக் கின்றது. தனியுரிமை நிலைகளைக் கட்டுப் படுத்துகின்றது. கொள்ளை இலாபம் ஈட்டு வதில் இருந்து வர்த்தகர்களை தடுக்கிறது. வருமானத்தில் அதிக ஏற்றத்தாழ்வு ஏற் படாமல் பாதுகாத்துக் கொள்ளுகின்றது.

2. சுதந்திரம் உண்டு

சமூக உடமைப் பொருளாதாரத்தில் காணப்படுவதுபோல் நுகர்வோர் சுதந்திரம் பெருமளவுக்கு கலப்பு பொருளாதாரத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதில்லை. நுகர் வோர் தெரிவுக்கு இப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பலவகையான பொருட்களையும் மக்களால் நுகர்வு செய்யமுடியும். முக்கியமாக இப் பொருளாதாரத்தில் அரசியல் சுதந்திரத் தினை மக்கள் அனுபவிப்பது குறிப்பிடத் தக்கது.

3. கடின உழைப்புக்கு உயர்ந்த மதிப்பு

சொத்துரிமை, வாரிசுரிமை என்பன கலப்பு பொருளாதாரத்தில் காணப்படு கின்றன. இதனால் திறமைமிக்கவர்கள் அதி கம் பிரயாசைப்பட்டு பெருமளவு வருமா னம் ஈட்டி சமுதாயத்தில் மேல் நிலைக்கு வருகின்றனர். சுயநலனை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இவர்களால் உற்பத்தி பெருக இறுதியில் தேசிய நலனும் அதிகரிக் கின்றது.

4. அரசாங்கத்தின் நிர்வாகச்சுமை குறைதல்

சமூக உடமைப் பொருளாதாரத்தில் சகல நடவடிக்கைகளையும் அரசாங்கமே மேற்கொள்வதால் அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரம் பெரும் சுமையினை ஏற்கவேண்டி உள்ளது. கலப்புப் பொருளாதாரத்தில் ஒரு பகுதி உற்பத்தியினை தனியார்துறை மேற்கொள்வதால் அரசாங்கத்தின் நிர்வா கச் சுமை குறைகின்றது.

கலப்புப் பொருளாதார அமைப்பின் குறைபாடுகள்

1. தனியார் துறையோ அல்லது அரசாங்கத் துறையோ திறமையாக இயங்க முடியாத நிலை

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறை முற்று முழுதாக சொந்த விருப்பத் தின் அடிப்படையில் இயங்கமுடியாது. வரி விதிப்பு, விலைக்கட்டுப்பாடு போன்றவற்றின் மூலம் தனியார் துறையின் இலாபம் கட்டுப் படுத்தப்படுவதால் முழுச் சுதந்திரத்துடன் தனியார்துறை இயங்குவதில்லை. மறுபக்கத் தில் அரசாங்கத்துறையும் திறமையாக இயங்குவதில்லை. தனியார் துறையானது கூடிய வேதனத்தை திறமைமிக்கவர்களுக்கு வழங்குவதன்மூலம், அவர்களின் சேவை களைத் தானே பெற்றுக்கொள்கின்றது. அர சாங்கத் துறையில் வேலை செய்வோர் பல ரும் ஏனோ தானோ என்று கடமையாற்றுவ தால் உற்பத்தி குறைவாக உள்ளது. பல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாப னங்கள் நட்டத்தில் இயங்கும் நிலை இதனை வெளிப்படுத்துகின்றது. அரசாங்கத் துறை யில் காணப்படும் பலவீனம் தனியார் துறை யின் நடவடிக்கைகளையும் பாதிக்கின்றது. ஏனெனில் தனியார் துறையானது, தனது நடவடிக்கைகளை விரிவாக்கிக்கொள்வதற்கு அரசாங்கத்துறையினைச் சார்ந்திருக்க வேண் டி இருப்பதனாலாகும்.

2. நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய தன்று

கலப்புப் பொருளாதாரத்தில் பொதுத் துறையும், தனியார் துறையும் ஏறக்குறைய சமபங்கினை ஏற்றுக்கொள்ளவேண்டும். அந் நிலையினையே நாம் கலப்புப் பொருளாதார மென தெளிவாகக் கூறமுடியும். ஆனால் நடைமுறை உதாரணங்களை வைத்து நோக் குகின்றபோது நீண்ட காலத்தில் படிப்படி யாக அரசாங்கத்தின்பங்கு அதிகரித்து வரு வதை கலப்புப்பொருளாதார அமைப்புக் களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. போக்குவரத்து, வங்கி, நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள்,தொலைத்தொடர்பு வசதிகள் போன்ற அடிப்படைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களில் பெரும்பகுதியை பொதுத் துறை தானே ஏற்று நடாத்த முற்படுகின்றது. இவற்றைச் சார்ந்த தனியார் துறையும் இயங்கவேண்டிய நிலை ஏற்பட காலப் போக்கில் அது சமூக உடமைப் பொருளாதாரமாக மாற்றமடைவதற்குத் தூண்டு கோலாக அமைகின்றது.

3. நிர்வாகத்தில் குழப்பம்

கலப்புப் பொருளாதாரத்தில் அரசாங்கத்துறை, தனியார்துறை, தனியார் - அரசாங்கக் கூட்டுத்துறை, கூட்டுறவுத்துறை எனப் பலபிரிவுகள் கலப்புப் பொருளாதாரத்தில் காணப்படுவதால் நிர்வாகத்தில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. எந்தத் துறையின் கீழ் எந்தத் தொழில்களை அனுமதிப்பதுபற்றி முடிவை எடுப்பதில் பிரச்சனைகள் தோன்றுகின்றன. சில தொழில்களை அரசாங்கமும் தனியாரும் சேர்ந்து மேற்கொள்ளும் போது அரசாங்கத் துறையில் ஊழல்கள் மலிகின்றன. இத்தகைய ஊழல்களால் நிர்வாகச்சுமை அரசாங்கத்திற்கு அதிகரிக்கின்றது.

4. மோசடிகளுக்கான முன் சூழ்நிலை உருவாதல்

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறையும், அரசாங்கத்துறையும் சேர்ந்து இயங்கும்போது சமூக விரோதிகள் மோசடிகளை மேற்கொள்கின்றனர். இதற்கு நடைமுறை உதாரணங்கள் பலவற்றை எடுத்துக் கூறலாம். உதாரணமாக கூட்டுறவுச் சங்க அமைப்பினை எடுத்துக் கொள்வோம். அரசாங்கத்தினுல் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்குமாறு கொடுக்கப்படும் பொருட்கள் பல பொதுமக்களின் கைகளுக்கு கிட்டாமல் தனியார் விற்பனை நிலையங்களுக்கு சென்று விடுகின்றன. பின்னர் உயர்ந்த விலை கொடுத்தே பொதுமக்கள் அவற்றைப் பெறவேண்டிய நிலையில் உள்ளனர். அரசாங்கத்துறையில் உள்ள வாகனங்களுக்கு நிரப்பப்படும்எரிபொருளில் கணிசமான பகுதி தனியார் கைகளுக்கு சென்று விடுகின்றது. அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் மருந்து வகைகளில் கணிசமான பகுதி தனியார் மருந்துக்கடைகளுக்கு சட்டரீதியல்லாத முறையில் சென்று விடுகின்றது. பாடசாலைகளில் ஒழுங்காக வேலை செய்யாத ஆசிரியர்கள் தனியார் கல்வி நிலையங்கள் மூலம் பெறப்படும் அதிக வேதனத்திற்காக ஓய்வின்றி உழைக்கின்றனர். பதுக்கல், கறுப்புச்சந்தை போன்றவற்றை நாட்டில் அதிகம் காணமுடிகின்றது.

5. சாதனப் பங்கீட்டில் திறமை இன்மை

தனியார்துறையின் நடவடிக்கைகளை இயக்குவது விலைப்பொறிமுறையேயாகும். விலைகள் சுதந்திரமாக இயங்கினுல்தான் சாதனங்களும் திறமையான முறையில் ஒதுக்கப்படும். ஆனுல் கலப்புப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக விலை இயக்கம் சுதந்திரமாக கேள்வி, நிரம்பல் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதில்லை. வரிவிதிப்பு, விலைக்கட்டுப்பாடு, உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகியோருக்கு வழங்கும் மானியங்கள் ஆகியவற்றின் காரணமாக சந்தையில் விலைகள் செயற்கை முறையில் நிர்ணயிக்கப்படுகின்றன. உண்மையான அருமைத் தன்மையினை பிரதிபலிப்பனவாக அவ்விலைகள் அமைவதில்லை. எனவே இவ்விலைகளின் அடிப்படையில் சாதன ஒதுக்கீட்டினை மேற்கொள்ளுதல் சரியானதாகவோ, திறமையானதாகவோ இருப்பதில்லை.

6 வர்த்தக சமூகத்தினருக்கும், அரசியல்வாதிகட்கும் இடையேயான பரஸ்பர குற்றச்சாட்டு

கலப்புப் பொருளாதார அமைப்புக் காணப்படும் பல நாடுகளில் உள்ள வர்த்தக சமூகத்தினரும், அரசியல்வாதிகளும் பொருளாதார அமைப்பில் காணும் குறைகளுக்கு ஒருவரை ஒருவர் குற்றம்காண்பது வழக்கமாக உள்ளது. அரசியல் தரப்பினர் வர்த்தக சமூகமானது நாட்டில் கறுப்புச் சந்தை தோன்றவும் ஊழல்கள் நடைபெறவும் காரணமாக அமைகின்றதென்ற குற்றச்சாட்டைக் கூறுவர். வர்த்தக சமூகத்தினர் நாட்டில் பணவீக்கம், பொருளாதார த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கம் போன்றவை தோன்ற அரசாங்கக் கொள்கைகளே காரணம் என்று வாதிடுவர். அதாவது இருதரப்பினரும் நாட்டில் நிலவும் தீமைகளுக்கு தாம் பொறுப்பில்லை எனவும் மற்றவர்களே அவற்றிற்கு காரணமாக அமைவர் என்றும் கூறுவர்.

முடிவாகக் கூறின் மூன்று பெரும் பிரிவுகளாக பொருளாதாரங்களை வகுத்தாலும் நடைமுறையில் யாவும் கலப்புப் பொருளாதார அமைப்பாகவே காணப்படுகின்றன. தனியார்துறையினை தனியே இயங்க விடுவதன் காரணமாக ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் பொருளாதார நடவடிக்கைகள் சிலவற்றை ஒழுங்கு படுத்துவது அவசியமாக அமைகின்றது. அதேவேளையில் தனியார் துறையின் உற்பத்தி இயலளவை முழுமையாகப் பெறுவதற்கு சில விடயங்களில் தனியார் துறையினருக்கு முழு சுதந்திரத்தினையும் கொடுக்கவேண்டி உள்ளது.

## மாதுறு ஓயாத்திட்டம்

துரித மகாவலித் திட்டத்தின் மற்றொரு பகுதி இதுவாகும். 1983 ஜூலையில் தொடக்கப்பட்ட இதில் 3.5 மைல் நீளமான சுரங்கம் அமைகிறது. 131 அடி உயரமும் 3280 அடி நீளமும் கொண்ட அணைக்கட்டும், 379,000ஏக்கர் அடி தண்ணீருள்ள நீர்த்தேக்கமும் அமைக்கப்படுகிறது. இதற்கு கனடா 76.8 மில்லியன் கனேடிய டொலர்களை உதவியாக வழங்குகிறது. வெளிநாட்டுச் செலாவணியாக 100 மில்லியன் கனேடிய டொலரும், இலங்கை ரூபா 962 மில்லியனும் இதற்கு செலவாகிறது. 7.2 மெகாவாட் மின்வலு இதில் உற்பத்தியாகும். பின்பு 2.5 மெகாவாட் கொண்ட மூன்று நிலையங்கள் உருவாகும். B திட்டத்திலான பகுதியிலமையும் 46,750 ஹெக்டேயர் புதிய காணிக்கும், 3750 ஹெக்டேயர் பழைய காணிக்கும் இது நீர்ப்பாசன வசதி வழங்கும்.

OOO

## கீழ் நீரோட்ட பொறியியல் வேலைப்பகுதி

துரித மகாவலித்திட்டத்தின் மற்றொரு பகுதி இதுவாகும். பிரதான நான்கு நீர்த்தேக்கங்களிலிருந்து மின்வலு உற்பத்தி செய்தபின் வரும் நீர் C திட்டத்திலான மினிப்பே அணைக்கட்டினூடாக பிரதான கால்வாயின் வலது கரை, மாதுறு ஓயாவின் B திட்டம் ஆகியவற்றிற்கு நீர்ப்பாய்ச்சும். இதுவரை B திட்டப்பகுதியில் 590 மில்லியன் ரூபாவும், C திட்டப்பகுதியில் 1039 மில்லியன் ரூபாவும் செலவாகியுள்ளன. எனினும் இவற்றுக்கான மொத்தச் செலவு முறையே 5415 மில்லியன், 4343 மில்லியன் ரூபாவாக அமையும் எனப்படுகிறது. திட்டம் Cக்கு ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC), ஜப்பான், குவைத் என்பன உதவுகின்றன. திட்டம் Bக்கு அமெரிக்க உதவி அமைப்பு (USAID) உதவுகின்றது. இது 45,000 ஹெக்டேயருக்கு நீர்ப்பாசனம் வழங்கும். 50,000 குடும்பங்களை குடியமர்த்தவும் 100,000 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கவும் உதவக்கூடியதாகும்.

OOO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமைப் புரட்சியும் இலங்கையின் கிராமிய விவசாயத் துறையின் பொருளியல் சமூக மாற்றங்களும்

க. சண்முகலிங்கம்

புரட்சி என்னும் சொல் சமூகவியலில் ஒரு குறிப்பிட்ட பொருளில் இன்று உப யோகிக்கப்படுகின்றது. சடுதியானதோர் மாற்றம், முன்னர் நிலவிய சமூக, பொருளி யல் உறவுகள் குறிப்பாகச் சொத்துடமை உறவுகள் முற்றாக மாற்றியமைத்தல், அர சியல் அதிகாரம் ஒரு வகுப்பிலிருந்து சமூ கத்தின் இன்னொரு வகுப்பிற்கு கைமா றுதல் ஆகியன புரட்சியின் முக்கிய இயல் புகள் ஆகும். பசுமை என்னும் அடை மொழியை தன்னுடன் இணைத்துக் கொண் டுள்ள பசுமைப்புரட்சி [Green Revolution] என்னும் தொடர் விவசாய உற்பத்தித் துறையில் மூன்றும் உலகில் 1960க்களில் ஏற்பட்ட தொழில் நுட்பப் புரட்சியையும், அதன் விளைவாக உணவு உற்பத்தியில் ஏற் பட்ட மாற்றத்தையும் குறிப்பதற்காக பொருளியலில் உபயோகத்திற்கு வந்த தொடராகும். இலங்கையில் 1965 – 1970 காலப்பகுதியில் காலம் சென்ற பிரதமர் டட்லி சேனநாயக்க ஆட்சியில் 'பசுமைப் புரட்சி உணர்வு பூர்வமாகப் பின்பற்றப் பட்டது. உணவு உற்பத்தி இயக்கம் [Food drive] என்ற பெயரிலிது செயற்படுத்தப் பட்டது. பசுமைப் புரட்சி இலங்கையில் மட் டுமல்லாது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் 1960க்களில் ஏற்பட்ட உணவு உற்பத்தித் துறையின் தொழில் நுட்பப் புரட்சியைக் குறித்து நிற்கின்றது. இக்காலப்பகுதியில் மூன்றும் உலகநாடுகளை அச்சுறுத்தி வந்த வறுமைப் பிணியும் அதன் விளைவாக எழுந்த பலாத்கார வழியிலான ஆயுதப் போராட்டங்களும் 'பசுமைப்புரட்சி' சிந்தனையின் பின்னணியாக அமைந்தன. வறுமை ஒழிப்பு, உணவில் தன்னிறைவு, ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல் ஆகியன மூன்றும் உலக நாடு களின் அரசாங்கங்களின் பொருளியல் சமூக கொள்கைகளாக அமைந்தன. சுருங்கக் கூறின் கிராமப் புறத்தில் 'பசுமை'யையும் செழிப்பையும் ஏற்படுத்தும் 'பசுமைப்புரட்சி' மூன்றும் உலகை அச்சுறுத்திய 'சிவப்புப் புரட்சி' யின் எதிர் விளைவாக அமைந்தது.

## பசுமைப்புரட்சி ஒரு தொழில் நுட்பப்புரட்சி

விவசாயத்துறையில் தொழில் நுட்ப மாற்றம் இரு வகையில் அமையும். அவை யாவன.

1. உயிர் இரசாயன தொழில் நுட்பம் [Bio chemical Technology]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொறிமுறைத் தொழில் நுட்பம் [Mechanical Technology]

உயிர் இரசாயன தொழில் நுட்பம் புதிய பயிர் இனங்களின் கண்டுபிடிப்பு. இரசாயன உரங்கள், களை கொல்லிகள், கிருமிநாசினிகள் ஆகியவற்றின் உபயோகம் ஆகியவற்றை உள்ளடக்கும் பொறிமுறைத் தொழில்நுட்பம், உழுதல், சூடடித்தல், மருந்து தெளித்தல், பயிர் நடுதல், பதனிடுதல், ஏற்றியிறக்கல் ஆகியவற்றில் உபயோகிக்கப்படும் இயந்திரத் தொழில்நுட்பத்தைக் குறிக்கும். பசுமைப்புரட்சி பொறிமுறைத் தொழில்நுட்பத்தை அல்லது உயிர் இரசாயனத் தொழில் நுட்பத்தின் பிரயோகத்தால் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட புரட்சியைச் சுட்டி நிற்கின்றது.

பசுமைப்புரட்சியின் மையமான கண்டுபிடிப்புகள் கோதுமை, நெல், சோளம், இறுங்கு ஆகிய பயிரினங்களில் விஞ்ஞானிகளால் செயற்கைக்கலப்பின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உயர் விளைவு தரும் விதை இனங்களாகும். [High Yielding Varities] இவை HYV என்னும் சுருக்க எழுத்துக்களால் குறிக்கப்படும். பிலிப்பைன்சில் அமைந்துள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் [International Rice Research Institute] புதிய நெல் விதை இனங்களை ஆசியநாடுகளில் பரப்பியது. இது நெல் ஆராய்ச்சி முயற்சிகளுக்கு தலைமையிடமாக இருந்தது. IRRI என்று சுருக்க எழுத்துக்களால் குறிக்கப்படும் இத்தாபனம் அறிமுகப்படுத்திய IR 8 என்னும் புதிய இன நெல் அற்புத நெல் [Miracle Rice] எனப்பட்டது. இவ்வினம் 1969ல் இலங்கையில் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. IR என்னும் முதல் எழுத்துக்களுடன் கூடிய ஏனைய நெல்லினங்களும் IRRI ஆல் கண்டுபிடிக்கப்பட்டவையே. IR இனங்களின் வரவின் முன்னர் இலங்கையில் H என்னும் இனங்கள் உள்நாட்டிலிருந்து பழைய இனங்களுடன் கலப்பு முறைமூலம் [Hybrid] விருத்தி செய்யப்பட்டு 1950களின் பிற்பகுதியில் புகுத்தப்பட்டன. 1957ல் அறிமுகமான H4 அத்தகையதொரு நெல்லினமே. மகாஇலுப்பலம, பத்தலகொட, பண்டாரவளை ஆகிய ஆராய்ச்சி நிலையங்களின் பெயர்களை முதல் எழுத்தாகக் கொண்ட MI, BG, BW ஆகிய இனங்களும் பின்னர் பரப்பப்பட்டன. லத்தீன் அமெரிக்காவில் மெக்சிக்கோவிலும், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலும் புதிய இனக்கோதுமை இனங்கள், பசுமைப் புரட்சியின் சாதனைகளை நிறுவின. தைவான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து இந்தோனேசியா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் பசுமைப்புரட்சியால் நெல் உற்பத்தியில் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் ஏற்பட்டன. மனித நாகரீக வளர்ச்சியில் மக்கள் தொகைப் பெருக்கம், உணவுத் தேவையின் அதிகரிப்பு ஆகியவற்றிற்கு இரு வகைத் தீர்வுகள் காணப்பட்டன. பயிர்ச் செய்கை பண்ணப்படும் நிலத்தின் அதிகரிப்பு ஒருவகைத் தீர்வு. விவசாயத் தொழில் நுட்ப விருத்தியும், உற்பத்தி விளைத்திறன் [Productivity] அதிகரிப்பும் இன்னொரு வகைத் தீர்வு. பசுமைப்புரட்சி விவசாயத்தில் உயிர் இரசாயனத் தொழில் நுட்ப புகுத்தலின் மூலம் உற்பத்தி அதிகரித்தலைக் குறிக்கும். 1949ற்கும் 1984ற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இலங்கையின் நெல்லுற்பத்தி 225% ஆல் அதிகரித்தது. 1965ம் ஆண்டுவரை சராசரி 4லட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்த எமது நாடு 1980ல் 1,75,000 மெற்றிக்தொன்களையும், 1984ல் 38,000 மெற்றிக்தொன்களையும் இறக்குமதி செய்தது. அரிசியில் தன்னிறைவை நோக்கிய இம்மாற்றத்தில் பயிர்ச்செய்கை நிலத்தின் அதிகரிப்பு மட்டுமன்றி பசுமைப்புரட்சியின் விளைவால் உற்பத்தி விளைத்திறன் பெருகியதும் காரணமாயிற்று.

பசுமைப்புரட்சியின் கருத்து நிலை [Ideology of Green Revolution]

கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டு காலத்தில் இலங்கையிலும் பிற ஆசிய நாடுகளிலும் பின்பற்றப்படும் சமூகப்பொருளியல் கொள்கைகள் பற்றிய மதிப்பீட்டைச் செய்வதற்குப் பசுமைப்புரட்சியின் கருத்து நிலை அம்சங்களைப் புரிந்து கொள்ளல் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியம். தேசிய மட்டத்தில் அரசியல்வாதிகள், திட்டமிடுவோர், விஞ்ஞானிகள், நிர்வாகிகள், விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் எதிர் நோக்கும் விவசாயப்பிரச்சினை பற்றிய நோக்கு நிலைகளின் முற்சார்புகள் [Bias] பசுமைப்புரட்சியின் கருத்து நிலையின் அடிப்படைகளாகும். இவ்வம்சங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. அரசின் திட்டங்கள் உற்பத்தி இலக்குகளை மையமாகக் கொண்டன. உணவில் தன்னிறைவு, அரசியல் பலமுள்ள வகுப்பினருக்கு மலிவான உணவை விற்பனை செய்தல், சென்மதி நிலுவைப் பிரச்சனை, 'உதவி' பெறும் நாடுகளின் உதவிபற்றிய நிர்பந்தங்கள் ஆகியன பசுமைப்புரட்சியை ஊக்குவித்த காரணிகளாகும்.

2. தொழில்நுட்ப உயர்வு = உற்பத்தி உயர்வும் சமூகப் பொருளியல் முன்னேற்றமும் என்னும் எளிமைப்படுத்தப்பட்ட தொழில் நுட்பவியல் நோக்கு.

3. தொழில் நுட்பம் வெற்றிடத்தில் இடம் பெறுவதில்லை. அது குறிப்பிட்ட சமூக, வர்க்க கட்டமைப்பின்கீழ் தான் செயல்படுகிறது. தொழில்நுட்பம் வெவ்வேறு வர்க்கங்களை வெவ்வேறு விதமாகப் பாதிக்கின்றது. தொழில் நுட்பப்புரட்சியின் சமூக விளைவுகளை பசுமைப்புரட்சி கருத்தில் கொள்ளவில்லை. தொழில் நுட்பம் நடுநிலையான செயல் ஊக்கி [A nuetral Agent] என்னும் அனுமானம் பசுமைப்புரட்சிக் கருத்து நிலையின் ஆதாரம்.

4. உற்பத்தி இலக்குகளின் நிறைவேற்றம்' திட்டமிடுவோரின் 'பிரச்சனை'. இந்தப் பிரச்சனையின் தீர்வுக்கான வழிகளை நாடும் முறையில் கிராமிய விவசாயத்துறை பற்றி அவர்கள் மனதில் ஒரு படிமம் [image] உள்ளது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் உயர் தொழில் நுட்பத்தையும் பின்தங்கிய விவசாயச் சமூகத்தினுல் ஏற்படச் செய்தல் [adoption] தான் பசுமைப்புரட்சியின் மையப்பிரச்சனை.

5. இதனுல் ஆய்வுக்கு அடுத்த அல்லது இணையான முக்கியம் உடையது விஸ்தரிப்பு [extension] நடவடிக்கை.

6. விஸ்தரிப்பு செயல்முறை விவசாயிகளில் பலதரப்பட்டவர்களை இனங்காணுகின்றது. இவர்களில் முற்போக்கான விவசாயிகள் [Progressive farmers] விரைந்து ஏற்போர் [early adopters] நழுவிப் பின்னடைவோர் [Back - sliders] எனப்பல பிரிவினர்களைச் சந்திக்கின்ருேம். பசுமைப் புரட்சியின் நன்மைகளை விரைந்து ஏற்கும் ஆற்றலும், திறமையும் உடையவர்கள் முற்போக்கான விவசாயிகள்.

7. நவீனமயமாதல் [Modernisation] குடியான் சமூகத்தின் தனிநபர்களிடையே காணப்படும் ஆளுமை இயல்புகளைப் பொறுத்து அமையுமெனக் கருதப்படும். முற்போக்கான விவசாயிகள் குடியான் சமூகத்தின் விதிவாத நோக்கில் [Fatalism] இருந்து விடுபட்டவர்கள் இதனுல் விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றமான விவசாயிகளை உந்தித்தள்ளும் அதேசமயம் முன்னேற்றப்பாதையில் இருந்து விலகி நிற்போர்களையும் அப்பாதையில் செல்லும் ஆற்றல் அற்றவர்களேயும் ஒதுக்கிவிடுகின்றனர்.

8. பசுமைப்புரட்சி வர்க்கச்சார்புடையது. [Class biased] அது கிராமப்புறத்தில் ஒரு குலக் வகுப்பை [Kulak Class] உருவாக்கி வருகிறது. ஓரினத்தன்மையுடைய குடியான் சமூகத்தில் [Peasantry] புதிய தொழில்நுட்பம் வர்க்க வேறுபாடுகளை உருவாக்குகிறது. உபரி உற்பத்தியின் சேர்க்கை மூலம் பணக்கார விவசாயியாக தன்னை மாற்றும் புதிய வகுப்பையே 'குலக்வகுப்பு'என்னும் தொடர் குறிக்கும். கிராமப்புறத்திலும் குடியேற்ற திட்டங்களிலும் இன்று நிகழும் செயல் முறையை மூன்ருக வகுக்கலாம்.

(i) வர்க்கப் பிரிவினைகள் பெருகுதல் [Class differentiation] இதன் விளைவால் நிலத்தை இழக்கும் பாட்டாளி வகுப்பு உருவாகிறது. அதேசமயம் நடுத்தர விவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயிகள், பணக்கார விவசாயிகள் என வகுப்புப் பிரிவினை வளர்கின்றது.

(ii) வறியோராதல் [Pauperisation] தொழில்நுட்பப்பின்னடைவு காரணமாக நிலத்தோடு பிணைக்கப்பட்ட குடியான் வறுமை நிலைக்குத் தள்ளப்படல்.

(iii) அபிவிருத்தியின் போக்கில் இருந்து சில பிரிவினர் முற்றாக ஒதுக்கப்படும் எல்லை நிலையாக்கம் [marginalasition].

பொருளியல் மாற்றம் பற்றிய தொழில் நுட்பவியல் பார்வை [Technological out look] இச் சமூகவிளைவுகளின் பின்னணியில் உள்ளதென்பது வெளிப்படை.

**உயர் விளைவு தரும் விதையினங்களின் [HYV] தொழில்நுட்ப இயல்புகள்**

பசுமைப் புரட்சியின் கருத்துநிலை அதன் தொழில்நுட்பவியல் நோக்கால் வரையறுக்கப்பட்டது மட்டுமன்றி உயர் விளைவு தரும் விதையினங்களின் தொழில்நுட்ப இயல்புகள் பசுமைப்புரட்சியின் இயல்புகளை நிர்ணயித்த காரணிகளாகவும் அமைந்திருப்பதையும் அவதானிக்கலாம். புதிய நெல் இனங்களின் தொழில்நுட்ப இயல்புகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. குட்டை இனங்கள் [dwarf varieties] குட்டை இனங்கள் குறைந்தளவு இலைகளை உடையவை. குட்டையானவை. நேராக நின்று சூரிய ஒளியைப்பெறும் இயல்பின. வளர்ச்சி காரணமாகச் சாயும் இயல்பும் அதனால் சூரிய ஒளியைப் பெறமுடியாமையும் நெட்டை இனங்களான பழைய இனங்களின் இயல்பு, குட்டை இனங்களின் ஊட்டச்சத்து இலை, தண்டு வளர்ச்சியில் வீணாவதில்லை.

2. கூடிய நெல்மணி புதிய இனங்கள் கூடிய கதிர்களை ஈனும் இயல்புடையவை. மணிகள் கூடிய கதிர்களைத் தாங்கும் ஆற்றல் உடையவை. அரிவிவெட்டும்போதோ, காற்றின் காரணமாகவோ நெல் மணிகள் சிதறப்படாத இயல்புடையவை. பயிர் ஊட்டச்சத்து இலைகளில் விரையமாகாது நெல்மணியாகப் பயன்தரும்.

3. பசளையால் தூண்டப்படல் : புதிய இனங்கள் பசளையால் விரைவில் தூண்டப்படும். பழைய இனங்களின் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 25—30 புசலாகும். பசளை இடுவதால் இதை 40 புசல்வரை உயர்த்தலாம். ஆனால், புதிய இனங்கள் இரசாயனப் பசளையால் தூண்டப்படும். H Y V ஏக்கருக்கு 160—180 புசல்கள் வரை விளைவைத்தர வல்லன.

4. களைகட்டலின் அவசியம் : குட்டை இனங்களை மூடி புற்கள் வளர்ந்துவிடும் இரசாயன உரம் இடுவதால் புற்களும் செழித்து வளரும். இதனால் களைகட்டல் மிக அவசியம்.

5. கிருமித்தாக்குதலிலிருந்து பாதுகாப்பு : புதிய இனங்கள் நோய்க்கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாகக் கூடியவை. இதனால் கிருமிநாசினிகளை உபயோகித்தல் வேண்டும்.

6. நீர்ப்பாசன வசதி : போதியளவு நீர் கிடைக்குமிடத்துத்தான் உயர்விளைவு சாத்தியமானது. மானாவாரி நிலங்களை விட நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களில் புதிய இனங்கள் எதிர்பார்த்த பலனைத்தர வல்லன.

7. குறுகிய காலத்தில் முதிர்ச்சி : பயிரின் வளர்ச்சிக்காலம் குறுகியதாய் அமைவதால் குறுகிய காலத்தில் விளைவைப் பெறுவதோடு ஒரு வருடத்தில் மூன்று முறை பயிரிடுதல் சாத்தியமாகிறது.

உ+ம் BG 34-6 மூன்றரை மாதப் பயிராகும். BG 34-8 மூன்று மாதத்தில் விளைவைத் தரும்.

8. உயர் நிர்வாகம் : உரிய காலத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை செய்தல், விஞ்ஞான முறையான பயிர்ச்செய்கை முறைகளைக் கையாளல் உயர்ந்த நீர் நிர்வாகம் என்பன அவசியம். உயர்ந்த தரத்தினதான நிர்வாகம் இல்லாதவிடத்து பயிர்ச்செய்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் ரீதியில் வெற்றியைத்தரமாட்டாது.

உயர்விளைவைத்தரும் புதிய இனங்களின் மேற்குறித்த தொழில்நுட்ப இயல்புகள் காரணமாக பசுமைப்புரட்சியின் வெற்றிக்கு ஏதுவாக அமையக் கூடிய முற்போக்கான விவசாயிகள் குறிப்பிட்ட தகுதிகளைக் கொண்டவர்களாய் அமைதல் வேண்டும்.

1. பசுமைப்புரட்சி புதிய தொழில் நுட்பமொன்றைச் சுட்டுவது மட்டுமல்ல விவசாயச் செயற்படு திட்டத்தின் புதிய தந்திரம் [strategy] ஒன்றையும் குறிக்கின்றது என்பதும் முக்கியமாகும். பசுமைப்புரட்சி ஒரு தொழில்நுட்ப பொதியாகும். [a technological package] உயர்தர விதையும் அதனேடிணைந்த உள்ளீடுகளும் காலநிலை, மண்வளம் பிறபயிர்ச்செய்கை [Agronomic] நிலைகள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு உரிய அளவிலும் தரத்திலும் கூட்டாகத்தரப்படுகின்றன. இந்தப் பொதியில் ஒன்று குறைபடினும் உத்தம விளைவு பாதிப்படையும் வாய்ப்பு உண்டு. பசுமைப்புரட்சி ஒரு தந்திரம் என்றமுறையில் குறித்த நிலைமைகளில் உத்தம விளைவுக்கான பொருத்தமான உள்ளீடுகளையும் தொழில் நுட்பத்தையும் ஏற்கச்செய்வதைக் கருதும். சுருங்கக் கூறின் பரிசோதனைக் கூடத்தின் [Laboratory] உத்தம சூழ்நிலைகளுக்கு ஒத்ததாக இல்லாவிடினும் அதற்கு நெருங்கிய நிலைமைகளை களத்தில் உருவாக்குதலும் விவசாயியை அத்தகைய தொழில்நுட்பத்தை ஏற்கச் செய்தலும் (adoption) தான் பசுமைப்புரட்சித் தந்திரோபாயமாகும்.

1. விவசாயம் குறிப்பிடக்கூடியளவு பண முதலீட்டை வேண்டிநிற்கும் ஒரு முயற்சியாக மாறுகிறது: உரம், களை, கிருமிநாசினிகள் ஆகியவற்றில் முதலிடுவதற்கும் விவசாய நடவடிக்கைகளை உரியகாலத்தில் தொழிலாளரை அமர்த்திச் செய்வதற்குப் போதிய முதல் தேவைப்படுகிறது.

2. பசுமைப்புரட்சி உயிர் இரசாயனத் தொழில்நுட்பமாற்றத்தின்விளைவு எனினும், பசுமைப்புரட்சியுடன் ஒன்றிணைந்து பொறிமுறைத் தொழில் நுட்பமும் புகுந்துள்ளது. இன்று நெல் உற்பத்தி செய்யும் மாவட்டங்களில் உழுதல், நிலத்தைப் பண்படுத்தல், சூடடித்தல்,ஏற்றியிறக்கல் ஆகிய செயல்கள் யந்திரமாக்கப்பட்டுள்ளன. உழவு நடவடிக்கையில் ராக்டர் யந்திரமயமாக்கலின் வீதாசாரம் கீழ் குறிப்பிட்ட மாவட்டங்களில் 1970க்களின் நடுப்பகுதியில் பின்வருமாறு காணப்பட்டது.

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 73.3% |
| அம்பாறை | 84% |
| வவுனியா | 68% |

3. பிழைப்பூதிய விவசாயம் [Subsistence Farming] வர்த்தக மயப்படுத்தப்பட்டது. சந்தைக்காக உற்பத்தி செய்யும் பண்டமாக [Commodity] நெல் மாறியுள்ளது. குடியான் சமூக அமைப்பின் சில இயல்புகள் சடுதியான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன. குடும்ப உழைப்பு விவசாய நடவடிக்கையில் பெரும் பங்கினைப் பெற்ற நிலை மாறி கூலி உழைப்பினரை விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தும் தேவை உருவானது.

4. இவை யாவற்றினதும் ஒன்றிணைந்த விளைவாக முதலாளித்துவ உற்பத்தி முறையின் துரித விருத்தியை கிராமிய விவசாயத்துறையில் காண்கிறோம். பசுமைப்புரட்சி இச்செயல் முறைக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்துள்ளது.

புதிய நெல்லினங்கள் பசுமைப்புரட்சிக் காலத்தில் மிக வேகமாகப் பரவின. சில மாவட்டங்களில் இன்று HVY, NHVY ரக நெல் இனங்கள் தான் கூடியளவு பயிரிடப்படுகின்றன. பின்வரும் புள்ளி விபரங்கள் இவற்றின் விரைவான பரவலைக் காட்டுகின்றன.

| ஆண்டு | மொத்த நெல் பயிரிடு நிலத்தில் புதிய இனங்களின் வீதாசாரம் |
|---|---|
| 1961 | 43% |
| ·968 | 61% |
| 1970 | 67% |
| 1983 | 70% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமைப்புரட்சியை ஒரு தொழில்நுட்பப் பொதி என்கிறோம். 1984ல் சுமார் 30% நெல் பயிரிடும் நிலங்கள் மானாவாரி நிலங்களாய் இருந்தன. மானாவாரி நிலங்களைப் பயிரிடுவோர் பெரும்பாலும் ஏழைக்குடியான்களே. நீர்ப்பாசன வசதியுள்ள குடியேற்றத்திட்டங்களில் பொருளியல் சாதனங்களைப் பெறுவதில் உள்ள ஆற்றலின் வேறுபாடுகள் [Differential access to means of production] காரணமாக நிலத்தை இழத்தல், மறைமுகக் குத்தகை [Hidden tenancy] பாட்டாளிகளாதல் [Proletarilanisation] பொருளியல் விருத்தியின் மத்திய ஓட்டத்திலிருந்து விலகும் எல்லை நிலையாக்கம் [Marginalsation] அதன் விளைவான தொழில்நுட்ப பின்னடைவும் [Technological Regression] வறுமையும் ஆகிய நிகழ்வுகள் நெல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் நிகழ்கின்றன.

**வர்த்தக மூலதனமும் உற்பத்தி மூலதனமும்: [Commercial Captial and Productive Capital]**

பசுமைப்புரட்சியால் துரிதமாக்கப்படும் வளர்ச்சியை கிராமியத்துறையில் வர்த்தக மூலதனத்தின் இடத்தை உற்பத்தி மூலதனம் பிடித்துக்கொள்ளும் செயல்முறை எனக் குறிப்பிடலாம். இச் செயல்முறையை கலாநிதி நியூட்டன் குணசிங்க Capital and Peasant Production என்ற நூலின் முகவுரையில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். கிராமியத்துறையில் விவசாயத் தொழில் முயல்வோர் வகுப்பு [Agrarian entreprneurs] ஒன்று உருவாகி உள்ளது. இவ்வகுப்பு முன்னர் இருந்த இடைத்தரகரில் [Middle man] இருந்து முற்றிலும் வேறுபட்டது. ஏனெனில் இடைத்தரகு முதலாளித்துவம் வர்த்தக மூலதனத்தைக் கொண்டியங்குவது. புதிய விவசாயத்தொழில் முயல்வோரின் மூலதனம் உற்பத்தி மூலதனமாகும்: வர்த்தக மூலதனம் தானிய வர்த்தகம், நுகர்வுப்பொருள் பரிவர்த்தனை, வட்டிக்குப் பணம் கொடுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டது. உற்பத்தி மூலதனம் இதற்குமாறாக விவசாயத்திலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களிலும் முதலீட்டைக் குறிக்கும். விவசாயத் தொழில் முயல்வோன் அரிசி ஆலை, உழவு யந்திரம், 20, 30 ஏக்கர் விவசாயம் ஆகியவற்றில் தன்முதலீட்டைச் செய்வான். மூலதனத்தின் தன்மை மட்டுமன்றி அதன் அளவும் [Scale] மாறுபடுகின்றன. இன்று நெல் உற்பத்தி மாவட்டங்களில் சுமார் 50 மில்லியன் ரூபா வரையான முதலீடுகளைச் செய்திருக்கும் விவசாயத் தொழில் முயல்வோரைக் காணலாம். மூலதனம் நிலை மூலதனம் [Constant Capital] மாறும் மூலதனம் (Variable Capital) என இருவகைப்படும். வர்த்தக மூலதனத்தின் பெரும் பகுதி மாறும் மூலதனத்தைக் கொண்டது. உற்பத்தி மூலதனம் உழவு யந்திரம், நீரிறைக்கும் யந்திரம், குழாய்க்கிணறு, நீர்ப்பாய்ச்சல் வசதியுடைய காணி, அரிசி ஆலை முதலிய நிலை முதலீடுகளில் பெரும் அளவினைக் கொண்டது, இது தவிர வர்த்தக மூலதனமும் உற்பத்தி மூலதனமும் ஒன்றிணைவதையும் காண்கிறோம். உரம், கிருமி நாசினி, வர்த்தகம், தானிய வர்த்தகம், வட்டிக்குப் பணம் கொடுத்தல் ஆகியனவும் புதிய விவசாயத்தொழில் முயல்வோரின் முயற்சிகளின் பாகமாக அமைகின்றன. மேலும் இடைத்தரகரின் வர்த்தகமுதல் கிராமிய மட்டத்திலேயே சுழன்றது. உற்பத்தி மூலதனம் கிராமத்தைக் கடந்த பரந்த மட்டத்தில் சுழல்கின்றது. இப்பணியை அரச வர்த்தக வங்கிகளின் விஸ்தரிப்பு செயல் படுத்தி வருகின்றது.

கிராமியத்துறையின் சமூகப்பொருளியல் மாற்றத்தின் தன்மையை எவ்விதம் விளக்கலாம்? ஆசிய நாடுகளின் சமூக அமைப்பின் தன்மையை நிலப்பிரபுத்துவம் (Fuedalism) அரைநிலப்பிரபுத்துவம் (Semi-Fuedalism) முதலாளித்துவம் (Capitalism) ஆகிய திட்டமான வரையறைகள் விளக்க உதவமாட்டா. இம் மாற்றத்தின் தன்மையைப்பற்றி பல வாதப்பிரதிவாதங்கள் உள்ளன.

இலங்கையில் தோட்டத் தொழிலின் வருகையுடன் 19ம் நூற்றுண்டிலும் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர் 20ம் நூற்றுண்டிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பொருளியலாளர்கள் இருவகையில் விளக்கினர்.

1) உருக்குலேவும் சிதைவும் (Dissolution / Disintergration Model)

2) பேணலும் நிலைநிறுத்தலும் (Conservation / Preservation Model)

முதலாளித்துவத்திற்கு முந்திய சமூக பொருளியல் உறவுகள் (Precapitalist Social and Economic relations) சிதைவடைந்து, முதலாளித்துவ உறவுகள் வளர்ச்சியடைந்ததாக சில பொருளியலாளர்கள் கூறுவர். உருக்குலேவும் சிதைவும் மாதிரி இக்கருத்தையே வற்புறுத்துகின்றது. ரல்ப்பீரிஸ் (Relp Peris) லண்டன் டிரிசன் (Randendrisen) சர்கார் (Sarkar) தம்பையா (Tambiah) முதல் அசோக பண்டாரகே (Asoka-Bandarage) வரை இந்த நோக்கில் பொருளியல் சமூக மாற்றங்களை விபரித்தனர் என்று நியூட்டன் குணசிங்க கூறுகிருர். ரல்ப்பீரிஸ் பெருந்தோட்ட நிலங்கள் பிரிட்டிஷாரின் கைக்கு மாறியதை இங்கிலாந்தின் நில அடைப்பு இயக்கத்திற்கு ஒப்பிடுருர். இதற்கு மாறுன கருத்தை முன் வைக்கும் பொருளியலாளர்கள் சிலர் இலங்கையில் பிரிட்டிஷார் புகுத்திய மாற்றம் கைத்தொழிலின் மூலதனத்தையும் (Industrial-Capital) முழு அளவிலான முதலாளித்துவ மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இலங்கையில் வர்த்தக மூலதனம் (Commercial-Capital) தான் தலைமையிடம் பெற்றது. சிற்றளவுப் பண்ட உற்பத்தி முறை (Petty Commodity Production) அதனுேடு இணைந்த பின்னடைவான உற்பத்தி உறவுகள் (Archiac relations) என்பன வர்த்தக மூலதனத்தால் பேணிப் பாதுகாக்கப்பட்டன என்றும் இவர்கள் கூறுவர். இக்கருத்தை அண்மைக் காலத்தில் விரிவாக ஆராய்ந்து எழுதியவர்கள் S. B. de சில்வாவும், N. சண்முகரத்தினமும் ஆவர். குணசிங்கவின் கருத்துப்படி இவ்விரு எதிர்நிலை மாதிரிகளுக்கும் பதிலாக

1. வர்க்கப்பிரிவினை (Class differentiation)
2. பாட்டாளிமயமாதல் (Proletarianisation)
3. வறியோராதல் (Pauperisation)
4. எல்லை நிலையாக்கம் (Marginalisation)

என்ற யாவற்றினதும் ஒன்றிணைந்த செயல் முறையைத்தான் இன்றைய கிராமியத்துறையின் நிதர்சனம் காட்டுகிறது. அத்தோடு நிலப்பிரபுத்துவம், அரைநிலைப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என்ற வகைகளை விடுத்து வெவ்வேறு விவசாய முறைகளை (Agrarian Systems) அடையாளம் காணலாம் என்றும் அத்தகைய முறைமை (Systems) என்ற கருத்தேற்றம் (Concept) சிறந்த ஆய்வுக்கருவியாகும் என்றும் 'Peasant Agrarian Systems and structural transformation in Sri - Lanka' என்ற தமது ஆய்வுக் கட்டுரையில் அவர் விளக்கியுள்ளார். பசுமைப் புரட்சியின் சமூகப் பொருளியல் விளைவுகள் இத்தகைய கருத்தேற்றங்களின் (Conceptual tools) துணையுடன் புரிந்து கொள்ளப்பட வேண்டியன.

### பசுமைப் புரட்சியின் வெளிப்பிணைப்புகள் (External linkages of Green Revolution)

பசுமைப்புரட்சியின் இன்னுேர் முக்கிய விளைவு கிராமிய விவசாயத்துறை பல்தேசிய கம்பனிகளுடனும் (Multi nationals) அன்னியநாடுகளுடனும் ஏற்படுத்தும் பிணைப்பாகும். உயர் தொழில் நுட்பத்தின் வருகை உரம், விவசாயம் இரசாயனங்கள், உழவு யந்திரங்கள் ஆகியவற்றின் இறக்குமதி முதல் விவசாயப் பொருட்களை கைத்தொழில் மையங்களுக்கு ஏற்றுமதி செய்யும் Agri - businessவளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது. பசுமைப் புரட்சியின் செம்மைக்கால மான 60க்களின் பிற்பகுதியிலும் 70க்களிலும் (classical period ot the Green Revolution) விதை உற்பத்தியும், ஆராய்ச்சியும் பல்தேசிய நிறுவனங்களதோ உள்ளூர் தனியார் நிறுவனங்களதோ ஆதிக்கத்திற்கு உட்படவில்லை. ஆனுல் 80க்களில் உயிர் இரசாயனத் தொழில்நுட்பம் பயிர்ச் செய்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும் தாக்கம் (Impact of Bio-chemical technology in Agriculture) புதிய ஆபத்துக்களை தோற்றுவிக்கின்றன.

இந்தியா, மெச்சிக்கோ, பிரேசில் போன்ற மூன்றும் உலகின் நாடுகள் சில பசுமைப்புரட்சியின் விளைவாக எழும் புதிய தங்கியிருத்தலை (New dependency) தவிர்க்கும் அளவிற்கு கைத்தொழில் முன்னேறியுள்ளன. ஆனால் இலங்கை போன்ற ஒரு நாட்டின் நிலைமை இரசாயன உரத்தின் உபயோகம் தொடர்பான பின்வரும் தரவுகள் நாம் புதிய தங்கியிருத்தல் நிலையை அடைந்துள்ளோம் என்பதைக் காட்டுகிறது.

**இலங்கையின் உரப்பாவனை அதிகரிப்பு**

| | | |
|---|---|---|
| 1961 | 29041 | மெட்ரிக் தொன் |
| 1970 — | 87069 | ,, ,, |
| 1980 — | 186000 | ,, ,, |

1976 ல் 305 உழவு இயந்திரங்களை இறக்குமதி செய்த எமது நாடு 1980-84 காலப்பகுதியில் 16058 உழவு இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளமை பிறிதோர் எடுத்துக்காட்டாகும்.

**இருவகைப் பசுமைப்புரட்சிகள்**

உயிர் இரசாயனத்துறையின் புரட்சியும் அதன் விளைவான தொழில்நுட்ப மாற்றமும் மூன்றும் உலகின் விவசாயப் பாட்டாளிகளை மேன்மேலும் வறுமை நிலைக்குத் தள்ளுவதற்கும் வர்க்க முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்வதற்கும் தான் உதவுகிறதா? இத்தகையதொரு அவநம்பிக்கை தரும் சித்திரத்திற்கு மாற்றுவழி இல்லையா? இந்தியாவின் பஞ்சாப் மாநிலமும், தமிழ் நாடும் முறையே கோதுமை, அரிசி உற்பத்திகளில் சாதனை நிலைநாட்டின. தமிழ் நாட்டின் தஞ்சாவூர் நெற்களஞ்சியமாக மாறியுள்ளது. 1976ன் கணிப்பீடுகளின்படி தஞ்சாவூர் பற்றிய சில தகவல்கள் பின்வருமாறு. 4 மில்லியன் மக்கள் தொகையுடைய தஞ்சாவூர் தனது அரிசித்தேவையின் மூன்று மடங்கை உற்பத்திசெய்து பிறபகுதிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. 1952ல் அங்கு விவசாயக்கூலி உழைப்பாளர் தொகை மொத்த உழைப்பாளர் தொகையின் 40% ஆக இருந்தது. 1976ல் இது 65% ஆக உயர்ந்தது. பிராமணர்களும் நாயுடுக்களும் மட்டுமே நிலஉடமையாளராக இருந்த தஞ்சாவூரின் சாதியமைப்பின் மத்திய தரத்திலும் பின்தங்கிய நிலையிலும் இருந்த (Middle and back ward castes) பிரிவுகளில் இருந்து புதிய நில உடமையாளர் வகுப்புத் தோன்றியுள்ளது. நிலஉச்சவரம்பு மசோதாக்கள் செயலற்றனவாகும் வேளையில் பாட்டாளி மயமாதலும் (Propetari-anisation) நிலஉடமையாளர் வகுப்பினதும், விவசாயத் தொழில் முயல்வோர் குழுக்களினதும் பெருக்கம் ஏற்பட்டுச் செல்கிறது. இச் சூழ்நிலையில்தான் கீழ்வெண்மணிப்படுகொலை போன்ற ஒரு நிகழ்வின் சமூக பொருளியல் தாற்பரியத்தை ஒருவர் புரிந்து கொள்ளல் இயலும். கு. சின்னப்பாரதியின் 'தாகம்' நாவல் தஞ்சாவூரின் விவசாயப் பொருளியல் மாற்றத்தின் பின்னணியை விளக்கும் ஒரு காலப்படைப்பு எனக் கூறுவேன்.

தஞ்சாவூரைப்பற்றி ஆய்வுகளை நிகழ்த்திய மானிடவியலாளர் கத்லின்கௌ (Kathleen Gough) 1976ல் அங்கு மீண்டும் சென்று விவசாயப் புரட்சியின் விளைவுகளை அவதானித்தார். அதே ஆண்டில் வட வியட்னும் நிலைமைகளையும் அவதானித்தபின் 'The Green Revolution in South India and North Vietnam' என்னும் கட்டுரையை அவர் எழுதினார். இக்கட்டுரையில் பசுமைப் புரட்சியின் தீய விளைவுகளைத் தவிர்ப்பதில் வட வியட்னும் எங்ஙனம் வெற்றி கண்டது என்பதை கத்லின் கௌ ஒப்பீட்டு முறையில் விளக்கியுள்ளார். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீடு: அண்மைய மாற்றங்கள் பற்றிய சிறு குறிப்பு

இலங்கை அரசாங்கம் தனது வரவு செலவுத் திட்டத்தின் தரவுகளைத் தனது வழக்கமான பதிவுமுறைகளிலிருந்து மாற்றியமைத்துள்ளது. 1987லிருந்து இவை பின்பற்றப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது. சர்வதேச நாணயநிதி (IMF)யத்தின் கைநூலாகிய அரசநிதிப் புள்ளி விபரவியலில் காணப்படும் பதிவுகளின் மாதிரியைப் பின்பற்றியே இப்புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய மாற்றங்கள் உலகநாடுகள் பலவற்றினலும் நீண்டகாலமாகக் கையாளப்பட்டுவரும் முறையென்பதும் கவனத்திற்குரியன. அத்துடன் தேசிய வருமானக் கணக்குமுறை, சென்மதிநிலுவைப் பதிவுகள் என்பவற்றுடன் இப்பதிவு முறை ஒத்துச் செல்லும் என்பதாலும் இவை விரும்பத்தக்கவை.

இம்மாற்றங்கள் பின்வருவன :

(i) **அரசிறை :** இதில் இதுவரை காலம் வரிமூலங்கள், வரியில்லா மூலங்கள் என்பன மாத்திரமே சேர்க்கப்பட்டன. நன்கொடைகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அவை பற்றுக்குறைக்குரிய நிதியீட்ட மூலங்களில் ஒன்றுகவே கருதப்பட்டன. தற்போது மீளச் செலுத்தப்பட வேண்டியதல்லாத எல்லா வரவுகளும் அரசிறை எனப்படுகின்றன. இதன்படி நன்கொடைகளும் அரசிறையின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதனுல் பற்றுக்குறையின் அளவைக் குறைத்துக் காட்ட முடிந்தது.

தற்போது அரசிறையிலிருந்து மீளளிப்புத்தொகைகள் கழித்துக் காட்டப்படுகின்றன. தற்போதைய அரசாங்கத்தினுல் ஏற்றுமதியாளருக்கு ஊக்கமளிப்பதற்காக ஏற்கனவே அவர்களால் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைகள் திருப்பிக் கொடுக்கப்படுகின்றது. உண்மையில் அவற்றை அரசிறையிலிருந்து கழித்துக் காட்டவேண்டும். அவ்வாறுதான் தற்போது கழித்துக் காட்டுகின்றனர்.

அரச வர்த்தக முயற்சிகள் இலாபம் உழைக்கும் போது முன்பு போலவே தற்போதும் அரசிறையில் சேர்க்கப்படுகின்றன.

**செலவினங்கள் :** இதில் இதுவரை நடைமுறைச் செலவுகள் (இவை மீண்டெழும் செலவினங்கள் என்றும் அழைக்கப்படுவதுண்டு). மூலதனச் செலவுகளென்ற இரண்டு பகுதிகளும் அடக்கப்பட்டிருந்தன.

தற்போது செலவினங்களில் இவற்றுடன் அரசினுல் வழங்கப்படும் கடன்களும் மூன்றுவது பகுதியாக சேர்க்கப்படுகின்றன. ஆனுல் அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுக்கப்படும் கடன்கள் ஏதாவதிருந்தால் அவற்றைக் கழித்த பின்வரும் மிகுதிக் கடன்கள் மாத்திரமே இதில் சேர்க்கப்படும். இவை முன்பு மூலதனச் செலவுகளில் நிதிச் சொத்துக்களின் கொள்வனவென காட்டப்பட்டிருந்தவை. தற்போது தனியான அம்சமாகக் காட்டப்படுகின்றன.

**நடைமுறைச் செலவினங்கள் :** இதில் பல புதிய விடயங்களைச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது அவை :

(1) இது வரை மூலதனச் செலவில் உள்ளடக்கப்பட்டிருந்த அரசின் பாதுகாப்புச் செலவினங்களும், இதற்கு மாற்றப்பட்டுள்ளன. இதனுல் பாதுகாப்புச் சார்ந்த சம்பளக் கொடுப்பனவு, எரிபொருள், பராமரிப்புச் செலவுகளுடன், ஆயுதக் கொள்வனவு, தளநிர்மாணங்கள், யுத்த வாகனங்களின் கொள்வனவு போன்றவற்றுக்கான செலவுகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன, இதனுல் யுத்தச் செலவு ஒரு அழிந்து போகும் செலவு மாத்திரமே. அது நீண்டகால வளர்ச்சிக்கான ஆதாரச் செலவுகளாக அமையமாட்டாதென்பது ஏற்கப்பட்டுள்ளது.

(2) பொதுக் கூட்டுத் தாபனங்கள் நட்டமடைவது அதிகரித்து வருகின்றது. இந்த நட்டங்களைத் தனியாக எடுத்து அவற்றையும் இதில் சேர்க்கின்றனர். நட்டங்களும் நடைமுறைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக தாங்கிக் கொள்ளப்படுவனவே என்பது வலியுறுத்தப்படுவதாக இது அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம்

## The Foreign Exchange Entitlement Certificate Scheme (FEECS)

1956ம் ஆண்டிக்குப் பின்னர் இலங்கையின் சென்மதி நிலுவையில் பாதகநிலை தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்ததால் அதனைத் தீர்க்குமுகமாக பல இறுக்கமான கட்டுப்பாடுகள் 1960 களின் ஆரம்பத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. இத்தகைய கட்டுப்பாடுகளின் காரணமாக அந்நிய செலாவணியின் உண்மையான தட்டுப்பாட்டுப் பெறுமதிக்கு முரண்பாடான வகையில் அந்நிய செலாவணி மாற்று விகிதம் நிலவியது. இதனுல் வெளிநாட்டு செலாவணி வருவாய்கள் ' கறுப்புச் சந்தைக்குள் திருப்பப்படும் தூண்டுதல் காணப்பட்டது. மேலும் தொடர்ந்து அந்நிய செலாவணி வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டு வந்ததாலும் இறக்குமதிகள் குறித்து இறுக்கமான கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டமையாலும் அத்தியாவசியமான மூலப்பொருட்களைக் கூட தேவையான முறையில் பெறமுடியாதநிலை காணப்பட்டது. இதனுல் கைத்தொழில்கள் தமது முழு ஆற்றல்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யமுடியாமலிருந்ததால் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி கைத்தொழிலுக்கும், விவசாயத்திற்கும் உரிய மூலப்பொருட்களினதும் முதலீட்டுப் பொருட்களினதும் விலையை அந்நிய செலாவணியின் உண்மையான தட்டுப்பாட்டுப் பெறுமதிக்கேற்ப அமையச் செய்தால் பொருளாதாரத்தில் உள்ள கைத்தொழில்கள் திறமையாக உற்பத்தியினை செய்வதற்கு வழி ஏற்படும் எனக் கருதப்பட்டது. மேலும் ஏற்றுமதிச் சந்தையில் போதியளவு போட்டியை ஏற்படுத்தத்தக்க பல மரபு வழியல்லாத ஏற்றுமதி உற்பத்திகள் குறிப்பாக கைத்தொழில் உற்பத்திகள் அன்று நிலவி கடுமையான அனுமதிப்பங்கு வீதத் திட்டத்தினுல், மிகச் சிறியளவுக்கே கைத்தொழில் மூலப்பொருட்களைப் பெற்றதனுல் தம் ஏற்றுமதி ஆற்றலில் தடைகளைக் கண்டிருந்தன. இத்தகைய குறைபாடுகளைக் களைய வேண்டியது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அவசியமானதாக இருந்தது. மேலும் 1960 களிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த இறுக்கமான கட்டுப்பாடுகள் சென்மதிநிலுவைப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பது 1967 ம் ஆண்டின் போது தெரிய வந்தது. இதனுல் 1967 ம் ஆண்டு நவம்பரில் 20 வீதத்தால் நாணயப்பெறுமதி இறக்கம் மேற்கொள்ளப்பட்டது. இவ் 20 சதவீத நாணயப் பெறுமதி இறக்கம் நல்லதொரு அடிப்படையான நாணய மாற்று விகிதத்தினை உருவாக்கும் எனக் கருதப்பட்டபோதும் கணிசமான அளவுக்கு பொருளாதாரத்தின் வளர்ச்சித் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வேண்டிய இறக்குமதிகளின் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு போதாததாகவே இருந்தது.

1966ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு அமுல் நடத்தப்பட்ட மிகையூதிய உறுதிச் சீட்டுத் (Bonus voucher scheme) திட்டமொன்று நடைமுறையிலிருந்து வந்தது. இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் இத்திட்டம்பற்றிய அனுபவம் மூலம் கூடிய அளவால் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்ட ஒரு தனி நாணயமாற்று வீதத்தைவிட, ஒரு வகையான இரட்டை வீதமே ஏற்றுமதியை வளர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் உகந்த வசதிகளை அளிக்குமென்றமுடிவு பெறப்பட்டது. மேலும் பலவித அந்நியச்செலாவணி முறையைக் கடைப்பிடிப்பதனுல் ஏற்படும் நன்மையாதெனில் இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் விலை அமைப்பானது தனிப்பட்ட நாணயமாற்று விகிதத்தின்கீழ் இருப்பதை விடக்கூடியளவு உண்மையுடையதாக விளங்கும் என்பதாகும். இதன் காரணமாக இருவகையான மாற்று விகிதங்களை வைத்திருக்கவேண்டிய தேவை உணரப்பட்டது. இந்நோக்கத்தினை அடையும் பொருட்டு இலங்கை மத்திய லங்கி சர்வதேச நாணய நிதியுடன் (IMF) கலந்தாலோசித்து 1968 மே மாதம் 6ம் திகதி அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. அத்திட்டத்தினை இலங்கை மத்திய வங்கியே இயக்கியும் வந்தது.

அந்நிய செலலாவணி உரிமை சான்றிதழ் திட்டம் இருவகையான பிரதான நோக்கங்களைக் கொண்டிருந்தது.

1. ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவதும், ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதும், குறிப்பாக மரபு ரீதியல்லாத ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஊக்குவிப்புகளை அளித்தல்.

2. வீழ்ச்சியடைந்து செல்லும் அந்நிய செலாவணி ஒதுக்கு நிலைமையில் இறக்குமதிகளின் மீது விதிக்கப்பட்டிருக்கும் இறுக்கமான கட்டுப்பாடுகள், அனுமதிப்பங்கு முறை போன்றவற்றினை தளர்த்தி அல்லது நீக்கி இறக்குமதிகளின் அசைவினை சந்தையமைப்பு முறையினுல் வழிப்படுத்தல் இதன் மூலம் கைத்தொழில் விவசாயம் ஆகியவற்றுக்குத் தேவையான மூலப் பொருட்கள் முதலீட்டுப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்து அவற்றின் உற்பத்தியை அதிகரித்தல்.

பரந்த ரீதியில் நோக்கின் இத்திட்டம் பின்வரும் வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டது. சகல வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களும் (ஏற்றுமதிகள், இறக்குமதிகள் கட்புலனுகா கொடுக்கல் வாங்கல்கள்) இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட சில ஏற்றுமதிப் பொருட்களுக்கும் கட்புலனுகா வருவாய்களுக்கும் ரூபாய் ரீதியான ஊக்குவிப்பினை அளிக்கும் முறையிலும், தெரிவு செய்யப்பட்ட சில இறக்குமதிகளுக்கும், கட்புலனுகாத கொடுப்பனவுகளுக்கும் மேலதிகமான ரூபாய்ச் செலவினை சுமத்தும் வகையிலும் 'பீக்ஸ்' திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் படி ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள் யாவும் A வகைப்பொருட்கள் என்றும் B வகைப் பொருட்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

'A' வகைக்குள் அடங்கும் ஏற்றுமதிப் பொருட்கள், இறக்குமதிப் பொருட்கள் கட்புலனுகா கொடுக்கல் வாங்கல்கள் போன்றன பற்றிய நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமான நாணய மாற்று விகிதத்தில் நடைபெறும். இவை அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் பெறுவதற்கு தகுதியுடையனவல்ல. 'B' வகைக்குள் அடங்கும் ஏற்றுமதிப் பொருட்கள், இறக்குமதிப் பொருட்கள், கட்புலனுகா கொடுக்கல் வாங்கல்கள் என்பனவே அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்களைப் பெறத் தகுதியுடையனவாகும்.

'A' வகைக்குள் தேயிலை, றப்பர், தெங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பொருட்கள் போன்ற ஏற்றுமதிப் பொருட்களும், உணவுப்பொருட்கள், மருந்து வகைகள், உரம், கல்வி சம்பந்தமான கொடுப்பனவுகள் என்பனவும் உள்ளடங்கும். இப் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி என்பன உத்தியோக பூர்வமான நாணய மாற்று விகிதத்தில் நடைபெற்றது. குறிப்பாகக் கூறின் மரபுரீதியான ஏற்றுமதிப் பொருட்களும், அத்தியாவசிய, அரை அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களும் 'A' வகைக்குள் அடக்கப்பட்டனவெனலாம். ஏனைய ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் சேவைகள் 'B' வகைக்குள் அடக்கப்பட்டன. குறிப்பாகக் கூறின் மரபுரீதியல்லாத ஏற்றுமதிப் பொருட்கள் ஆடம்பர இறக்குமதிப் பொருட்கள், அரை அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்கள் போன்றன ஆரம்பத்தில் B வகைக்குள் அடக்கப்பட்டன

முதன் முதலாக அந்நியசெலாவணி விகிதத்தினூடாக சில தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கு ஊக்கமளிக்கும் முயற்சியாக இத்திட்டம் அமைந்திருந்தது. B வகைக்குள் அடங்கும் இறக்குமதிகளை மேற்கொள்வோருக்கு மேலதிக ரூபாய் செலவும் ஏற்றுமதிகளை மேற்கொள்வோருக்கு மேலதிக ரூபாய் நன்மையும் ஏற்படும் வகையில் இத்திட்டம் அமைந்திருந்தது. இவ்வாறு ஏற்படக்கூடிய மேலதிக ரூபாய் செலவினையும் மேலதிக ரூபாய் நன்மையினையும் பின்வரும் உதாரணத்தின் மூலம் விளக்குவோம்.

நூறு ரூபாய் பெறுமதியுடைய அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழின் பெறுமதி 144 ரூபா எனக் கொள்வோம். அத்துடன் ஸ்டேர்லிங் பவுண், இலங்கை ரூபாய் ஆகிய இரு நாட்டு நாணயங்களுக்குமிடையேயான நாணயமாற்று விகிதம் 1 ஸ்டேர்லிங் பவுண் = 50 ரூபாய் என உள்ளதென்றும் கொள்வோம். இந் நிலையில் ஏற்றுமதியாளர் ஒருவர் A வகைக்குள் அடங்கும் (உதாரணமாக தேயிலை) ஒரு பொருளை இங்லாந்துக்கு ஏற்றுமதி செய்து 1000 ஸ்டேர்லிங் பவுண்களை வருமானமாகப் பெறுகிறார் என எடுத்துக் கொள்வோம். இதனை ரூபாய் வடிவில் பெறும்போது 50,000 = (100 × 50) ரூபாய்களை பெற்றுக்கொள்வார். ஆனால் B வகைக்குள் அடங்கும் ஒரு பொருளை (உதாரணமாக இரத்தினக்கல்) ஏற்றுமதி செய்து 1000 ஸ்டேலிங் பவுணை ஏற்றுமதி வருமானமாகப் பெறும் ஒருவர் ரூபாய் வடிவில் கூடுதலான பணத்தைப் பெறுவார். அது பின்வருமாறு இருக்கும்.

ஏற்றுமதி வருமானம்

$$(1000 \times 50) = 50,000$$

பீக்ஸ் திட்ட மூலம் கிடைக்கும் மேலதிக ரூபாய் நன்மை

$$\left(50,000 \times \frac{44}{100}\right) = 22,000$$

மொத்தம் = 72, 000

இதற்கு மாறாக B வகைக்குள் அடங்கும் பொருளை இறக்குமதி செய்பவருக்கு மேலதிக ரூபாய் செலவு ஏற்படும். உதாரணமாக A வகைக்குள் அடங்கும் 1000 ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியான ஒரு பொருளை இறக்குமதி செய்ய ஏற்படும் செலவு 50,000 ரூபாவாக இருக்கையில் 'B' வகைக்குள் அடங்கும் 1000 ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியுடைய பொருளை இறக்குமதி செய்வதற்கு ஏற்படும் செலவு 72,000 ரூபாவாக இருக்கும். அது பின்வருமாறு:

இறக்குமதிக் கொடுப்பனவு

$$(1000 \times 50) = 50,000$$

'பீக்ஸ்' திட்ட மூலம் ஏற்படும் மேலதிக செலவு

$$\left(50,000 \times \frac{44}{100}\right) = 22,000$$

மொத்தம் = 72, 000

ஏற்றுமதி ஆற்றல்களையுடைய சில தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சித்துறைகளுக்குத் தூண்டுதல்களை அளிப்பதற்கும், இறக்குமதிப் போட்டியிடும் கைத்தொழில்களுக்கு அதிக ஆற்றலை ஊட்டுவதற்குமாக முதன் முறையாக அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தினூடாக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என இத்திட்டம் பற்றிக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திட்டத்தின்படி ஏற்றுமதி செய்யப்பட்ட சில பொருட்கள், சேவைகள் மற்றும் சில வகையான வெளிநாட்டிலிருந்து பெறப்படும் பணரீதியான வருவாய்கள் மூலம் பெறும் அந்நிய செலாவணிகளை வர்த்தக வங்கிகளில் ஒப்படைப்போருக்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்படும். மத்திய வங்கி ஆரம்பத்தில் கிழமை தோறும் அந்நிய செலாவணி சான்றிதழ் பத்திரங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் உடமையளர்கள் சில வகை இறக்குமதிப் பொருட்களுக்கும் ஏனைய பண அனுப்பல்களுக்குமாக, வர்த்தக வங்கிகளிடமிருந்து அந்நிய செலாவணி விற்பனை வீதங்களின் படியும், அவ்வந்நிய செலாவணிக்கு ஈடான முகப்புப் பெறுமதியுடைய சான்றிதழ்களை ஒப்படைப்பதன் மூலமும் அந்நிய செலாவணிகளைக் கொள்வனவு செய்வதற்கு (இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிகள், அந்நிய செலாவணிக் கட்டுடுப்பாட்டு விதிகளுக்கமைய) உரிமை பெறுவர்.

ஆரம்பத்தில் வாரம் தோறும் மத்திய வங்கி வழங்கும் சான்றிதழ்களுக்கான விலைகள் சந்தை சக்திகளினால் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றே எண்ணப்பட்டது. பின்னர் அது ஒருவகையில் ரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டதெனலாம். அந்நியசெலாவணிச் சான்றிதழ் திட்டம் புகுத்தப்பட்ட சமயத்தில் ஆரம்பத்தில் சான்றிதழ்களுக்கு மிக உயர்ந்த கேள்விகள் எழுந்தன. இதன் விலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் ஆரம்பத்தில் கூடுதலாக இருந்தன. இதற்கு ஒரு புதிய திட்டம் புகுத்தப்படுகின்ற போது உள்ள நம்பிக்கையீனம் குழப்பங்கள் போன்றன காரணமாக இருக்கலாம். இத்திட்டத் தன்மைகள் உணரப்பட்டபின் ரூபா 100 கொண்ட சான்றிதழ்களுக்கு 144 ரூபா விலை நிர்ணயிக்கப்பட்டது. இதன் பின்னர் இவ் விலை 1969ம் ஆண்டு யூன் மாதம் முதல் 155 ரூபாவாகவும் 1972ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 165 ரூபாவாகவும் யர்த்தப்பட்டது.

அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் வெற்றிகரமாக திறமையாக செயற்படவேண்டுமாயின் நாணய விரிவாக்கத்தினை கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. இத்திட்டத்தினை செம்மையாக செயற்படுத்தும் நோக்கத்துடன் பல துணையான நாணய, நிதிநடைமுறைக்கொள்கைகளை அமுல் நடத்தவேண்டியிருந்தது. வட்டி வீதத்தில் உயர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வங்கி வீதம் உயர்த்தப்பட்டது. தனியார்துறைகளுக்கு வணிக வங்கிகளால் வழங்கப்படும் கடன்கள் மீது 'மேற்தடை' விதிக்கப்பட்டது எனினும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற முக்கியமான துறைகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு இம் மேற்தடையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. வியாபாரப் புரள்வுவரி, இறக்குமதி தீர்வை போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. யந்திர உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கு மிகக் குறைந்த 5 வீதவரி விதிக்கப்பட்டது.

'பீக்ஸ்' திட்டம் ஏற்கனவே இருந்து வந்த அனுமதிப்பங்கு முறையை (quota system) இல்லாமல் செய்தது. இதன் காரணமாக பீக்ஸ் திட்டத்தின்கீழ் பேதப்படுத்தும் விலையுடன் கூடிய முறையின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது.

'பீக்ஸ்' திட்டத்தினால் உடனடியாகவே பொருளாதாரத்தில் சில விளைவுகள் ஏற்பட்டன. இத் திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட தாராள இறக்குமதி வியாபார நம்பிக்கையை ஏற்படுத்தியதன் காரணமாக முதலீடு உயர்ந்தது. கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்த காலங்களில் அருமையும் பங்கீட்டுமுறையும் நிலவின. இதனால் ஏற்கனவே தம்மை நிலைப்படுத்திக்கொண்ட இறக்குமதியாளர்கள் அருமை காரணமாக ஏற்படும் இலாபங்களைப் பெற்றுவந்தார்கள். ஆனால் தற்போது திறந்த பொது அனுமதிப்பத்திரத்தின் கீழ் (Open General Licence) மூலப் பொருட்களையும், யந்திரங்களையும் இறக்குமதி செய்யக்கூடியளவுக்கு அந்நியச் செலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணி கிடைக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் தொழில்களுக்கிடையே போட்டி ஏற்பட்டு சாதனப் பங்கீட்டில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படவும் வழி பிறந்தது. அதிகமான முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகளும் விரிவடைந்தன. 1960 களில் மிக மெதுவாக வளர்ந்து வந்த கைத்தொழில் உற்பத்தி 1968ல் 17 சதவீதத்தாலும் 1969ல் 20 சத வீதத்தாலும் அதிகரித்தது. உயர்ந்த வகையிலமைந்த பொருளாதார நடவடிக்கைகள் துணைச் சேவைகளுக்கு ஏற்பட்ட கேள்வி சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட அதிகரிப்பு யாவும் சேர்ந்து உயர்ந்த வருமானத்தினை ஏற்படுத்தியிருந்ததுடன் வேலையின்மையினளவையும் குறைத்திருந்தன. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் மரபுரீதியல்லாத பொருட்கள் 1968ல் 6.5 சதவீதத்தினைப் பெற்ற நிலையிலிருந்து 1974ல் 29 சத வீதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு பீக்ஸ் திட்டம் அளித்த தூண்டுகோலும் ஒரு காரணமாகும் என்பதை மறுக்க முடியாது. எனினும் சென்மதி நிலுவை தொடர்ந்து பாதக நிலையிலேயே இருந்தது.

1970களில் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தில் அடங்கும் பொருட்களிலும் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக விவசாயக்கருவிகள், உதிரிப்பாகங்கள், பருத்தி நூலிழை போன்ற 'B' பிரிவிலிருந்த பொருட்கள் 'A' பிரிவுக்கு மாற்றப்பட்டன. அதேவேளையில் 'A' யிலிருந்து சில பொருட்களின் இறக்குமதி 'B' பிரிவுக்கு மாற்றப்பட்டன. சீனி, சோளம் சீனிக் கூட்டுத்தானம், இலங்கை மின்சாரசபை, இலங்கை போக்குவரத்துச்சபை ஆகியவற்றின் இறக்குமதிகள் போன்றனவே இவ்வாறு மாற்றப்பட்டவையாகும்.

1977ம் ஆண்டில் 25 சதவீதமான ஏற்றுமதிகளும்,64 சதவீதமான இறக்குமதிகளும் 90 சதவீதமான சேவைகளும் பீக்ஸ் திட்டத்தின் கீழேயே நடைபெற்றன. இத்திட்டத்தின் கீழ் பெறப்படுகின்ற மேலதிக வருவாய் அரசாங்கத்திற்குரிய வருமானமாக அமைந்தது.

1977ம் ஆண்டு பதவியேற்ற புதிய அரசாங்கம் நாணயமாற்று விகிதக் கொள்கையினை திருத்தியமைத்தபோது 'பீக்ஸ்' திட்டம் கைவிடப்பட்டு ஒரு முகப்படுத்தப்பட்ட நாணய மாற்று விகித முறையே திரும்பவும் மிதக்கவிடப்படும் நாணய மாற்று விகித முறையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

## விக்ரோறியாத் திட்டம்

துரித மகாவலித் திட்டத்தின் பிரதான பகுதி இதுவாகும். 1980ல் மார்ச் 23ல் அடிக்கல் நாட்டப்பட்டது. 1985 ஏப்ரல் 12ல் செயற்படலாயிற்று. ஒரு குகை, அணைக்கட்டு, நீர்த்தேக்கம் என்பன காணப்படுகிறது. முடிந்த மொத்தச் செலவு 9044 மில்லியன் ரூபாவாகும். இதன் மின்வலு உற்பத்தி 210 மெகா வாட்ஸ் ஆகும். இது நாட்டின் மொத்தவலு உற்பத்தியில் ஏறக்குறைய அரைப் பகுதியாகும்.

இது B, C திட்டத்தின்கீழ் 200,000 ஏக்கருக்கு நீர் வழங்கும், நேரடியாக நிர்மாணத்தில் 20,000 பேர் தொழில் வாய்ப்பு பெறுவர் மொத்தமாக 100,000 பேர் தொழில் வாய்ப்பு பெறுவர். பிரித்தானியா 100 மில்லியன் ஸ்ரேலிங் பவுணை கொடையாகவும் 33 மில்லியன் பவுணை மேலதிகமாகவும் வழங்கிற்று. இத் திட்டத்துக்கு £ 145 மில்லியனும் 8020 மில்லியன் ரூபாவும் செலவு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குத் திட்டம் (CRA)

## Convertible Rupee Account Scheme

அறிமுகம்:

1956ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் சென்மதி நிலுவை தொடர்ந்து பற்றுக்குறையினை அனுபவித்து வந்ததால் அந்நிலைமையைச் சீர்ப்படுத்தும் நோக்கத்துடன் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மரபு ரீதியாக இலங்கையினுல் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த பொருட்களான தேயிலை, றப்பர், தெங்கு உற்பத்திகள் என்பனவற்றின் விலைகள் உலக சந்தையில் அடிக்கடி தளம்பலுக்குள்ளாதல், அவற்றிற்கான கேள்வியில் மெதுவாகவே அதிகரிப்பு ஏற்படுதல் போன்ற தன்மைகள் உணரப்பட்டதும், எதிர்காலத்தில் அதிகளவு அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கு அவற்றில் தங்கியிருத்தல் பயன்தராது என அறிந்ததும் ஏற்றுமதியைப் பன்முகப் படுத்தி மரபு ரீதியற்ற ஏற்றுமதிப் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கான பல நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்டன. மரபுரீதியற்ற பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கு வரிச் சலுகை அளித்தல், வரி விடுதலை, அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் போன்ற ஆதரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த வரிசையில் 1972ம் ஆண்டு யூலை மாதம் 11ம் திகதி மரபுரீதியற்ற பொருட்களின் குறிப்பாக இரத்தினக்கல் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கம் மாற்றத்தக்க ரூபாய் கணக்குத் திட்டத்தை ஆரம்பித்தது.

செயல்முறை:

இத்திட்டத்தின் கீழ் மரபுரீதியற்ற பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெறும் வருமானத்தில் ஒரு பகுதியை CRA யில் வைப்புச் செய்யலாம். அவ்வாறு வைப்புச் செய்யப்பட்ட பணத்தை அக் கணக்குக்கு உரிமையுடைய ஏற்றுமதியாளர் தான் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான செலுத்தல்களை மேற்கொள்ளவோ, வெளி நாடுகளில் பிரயாணம் செய்வதற்கோ, பயன்படுத்தலாம். இத்தகைய வசதிகளை 1970 இல் பதவிக்கு வந்த அரசாங்கம் அந்நியச் செலாவணியில் கையாண்ட இறுக்கமான கட்டுப்பாடுகளின் விளைவாக எல்லோராலும் பெறமுடியாதிருந்தது. எனவே CRA இனுல் பெறக்கூடிய வசதிகளை அனுபவிக்கும் பொருட்டு மரபுரீதியற்ற பொருட்களை ஏற்றுமதி செய்வரென்றும் அதனுல் ஏற்றுமதி பன்முகப்படுத்தப்படுமென்றும் கருதப்பட்டது. எனவே மரபு ரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதிப் பொருட்களினுல் பெறும் வருமானத்தினை அதிகரிப்பதும், அதன் மூலம் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலை மேற்கொள்வதும் இத் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

மேலும் அந்நிய செலாவணியைப்பயன் படுத்தலில் இறுக்கமான நடைமுறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடிக்கப்பட்டபோது சட்டரீதியல்லாத முறையில் அந்நிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன. இத்தகைய கறுப்புச்சந்தை நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதும் இத் திட்டத்தின் இன்னொரு நோக்கமாக இருந்தது.

1972ம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது இரத்தினக்கல் மூலம் பெறும் ஏற்றுமதி வருமானத்தில் 25 சதவீதம் இக் கணக்கில் வரவு வைக்கப்பட அனுமதிக்கப்பட்டது. ஆனுல் காலப்போக்கில் பல பொருட்களும் இத்திட்டத்திற்குள் இடம் பெற்றதுடன், CRA இல் வரவு வைக்கப்படும் விகிதங்களும் மாற்றப்பட்டன. 1974 நவம்பரில் பல்வேறு பொருட்களுக்கும் காணப்பட்ட விகிதங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(அ) இரத்தினக்கற்கள் 20%

(ஆ) இரத்தினக்கல்லில் கை வேலைப்பாடு செய்யப்பட்டு பதிக்கப்பெற்ற தங்க நகைகள் 20%

(இ) பொதிகளில் (Packets) அடைக்கப்பட்டு அல்லது பைகளில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை 20%

(ஈ) வர்த்தகப் பொருட்கள் (பெரும் தொகையாக ஏற்றுமதி செய்யப்படும் கறுப்புத்தேயிலை, சீற் றப்பர், ஸ்கிரும் றப்பர், தேங்காய் எண்ணெய், உலர்ந்த தேங்காய், கொப்பரு, உடன் தேங்காய்,தேங்காய்நார் என்பன நீங்கலாக) 5%

(உ) பதப்படுத்தப்பட்ட தேங்காய், தேங்காய்நார், கயிறு இழை, கயிறு 5%

(ஊ) சுற்றுலா மூலம் பெறும் வருமானம் 5%

(எ) தனிப்பட்டவர்களால் செய்யப்பட்ட ஓவியங்கள், சிலைகள், கலைவேலைப்பாடுகளை ஏற்றுமதி செய்வதனுல் பெறும் வருமானம் 20%

(ஏ) தனிப்பட்டவர்களால் தொழில் ரீதியான ஆலோசனைகளை வழங்கல் மூலம் பெறும் வருமானம் 20%

(ஐ) நிறுவனங்கள், கம்பனிகள் மற்றும் பன்முக தொடர்புடைய கழகங்களால் வழங்கப்படும் தொழில் ரீதியான ஆலோசனைகள் மூலம் வருமானம் பெறும் 5%

மேலே சொல்லப்பட்டவை மூலம் பெறப்படும் வருமானங்களில் குறிப்பட்ட விகிதத்தினை, கணக்கு வைத்திருப்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் CRA க்குரிய பகுதியை நடைமுறைக் கணக்கிலோ சேமிப்புக் கணக்கிலோ அல்லது வைப்புக்கணக்கிலோ (Deposit Account) வரவு வைக்கலாம். இம் முறையில் ஒவ்வொரு வகையான கணக்கிலும் உள்ள பணத்தினை மற்ற வகைக் கணக்கிற்கு மாற்ற அனுமதி இருந்தது. எனினும் இத்தகைய கணக்குகளுக்கு வட்டிக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. கணக்கு வைத்திருக்கும் ஒருவர் விரும்பினுல் உள்நாட்டில் செலவு செய்வதற்கும் இந் நிதியைப் பயன் படுத்தலாம். ஆனுல் கணக்கில் இருந்து எடுக்கப்பட்ட நிதியை இதில் திரும்பவும் வைப்பிலிட முடியாது. எனினும் அதிகார பூர்வமான வகையில் குறிப்பிட்ட நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட பணமானது அந் நோக்கத்திற்காக முழுமையாக பயன் படுத்தப்படவில்லை அல்லது ஒரு பகுதி பயன்படுத்தப்படவில்லை என நியாயமான காரணத்தினைக் காட்டினுல் திரும்பவும் அதனை CRA இல் வரவு வைக்கலாம். மேலும் ஒருவரின் கணக்கில் உள்ள பணத்தை மற்றொருவரின் பெயருக்கு மாற்ற முடியாது என்பது CRA ஐப் பொறுத்தவரையில் ஒரு இறுக்கமான விதியாக இருந்தது, மேலும் CRA இல் பெருமளவு பணத்தை வைத்திருக்கும் ஒருவர் வியாபார நடவடிக்கைகளுக்காக திரவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையுள்ள நிதியாக வைத்திருக்க விரும்பலாம். அவ்வாறு விரும்புகின்றபோது அவர் பெறும் கடனுக்கும் மேலதிக பற்றுக்குமான பிணையாக CRA இல் உள்ள நிலுவைகளை வைத்திருக்கலாம். ஆனால் CRA இல் மேலதிகப் பற்றினைப் பெறுவதற்கு அனுமதியில்லை.

பயன் படுத்துதல் :

CRA இல் வரவு வைக்கப் பட்ட நிதியானது பின்வரும் வழிகளில் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

(அ) இறக்குமதிகள்

(i) பிரயாணிகள் வாகனம் - இதற்கு குறிப்பிட்டளவு மேற்தடை (ceiling) உண்டு.

(ii) கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்பட்ட முதற் பொருட்கள்.

(iii) அனுமதிப் பங்கு முறையின் கீழ் அனுமதிக்கப்படும் சகல இறக்குமதிகள், கைத்தொழில் மூலப் பொருட்கள்.

(iv) ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப் பாட்டாளரின் அனுமதியுடனான ஏனைய இறக்குமதிகள்.

(ஆ) பிரயாணம் -- வியாபார, அல்லது விடுதலையைக் கழிப்பதற்காக அல்லது வைத்திய வசதி பெறுவதற்காக வரையறுக்கப்பட்ட அளவில் நிதியைப் பயன் படுத்தலாம்.

(இ) கல்வி — கல்விக்கான பிரயாணத்திற்காக வரையறுக்கப்பட்ட அளவில் நிதியைப் பயன்படுத்தலாம்.

(ஈ) பயிற்சி பெறல் — CRA க்கான நிதியைப் பெறும் ஒரு கைத்தொழில் நிறுவனம் தேவையான பயிற்சியைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படலாம்.

(உ) இலங்கை சுற்றுலாக் கூட்டுத்தாபனத்தின் சுற்றுலாக் கடைகளிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் பயன்படுத்தலாம்.

செயற்திறன் :

1972ம் ஆண்டு தொடக்கப்பட்ட இத்திட்டம் 1977ம் ஆண்டு நீக்கப்பட்டது. இவ்வைந்து வருட காலப்பகுதிக்குள்ளும் அது தனது நோக்கங்களை நிறைவேற்றுவதில் எத்தகைய வெற்றியினைப் பெற்றது என சுருக்கமாக நோக்கலாம். மரபுரீதியற்ற பொருட்களின் மூலம் பெறும் வருமானத்தினைப் பெருக்குதல் இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. இத்தகைய நோக்கத்தினை அடைவதற்காக வரிச்சலுகைகள், வரி விடுதலை, பீக்ஸ் திட்டம் போன்றனவும் நடைமுறையில் இருந்தன. எனினும் இவை ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்தவை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் இந்நிலையில் 1972ம் ஆண்டில் மரபுரீதியற்ற பொருட்களின் மூலம் பெற்ற வருமானம் 220.7 மில்லியன் ரூபாய்களாக விருந்து 1973 இல் 612.1 மில்லியன் ரூபாய் களாக அதிகரித்தமை CRA திட்டம் மரபு ரீதியற்ற பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பெரிதும் துணை செய்துள்ளது என்ற முடிவுக்கே நம்மை இட்டுச் செல்லுகின்றது. தனித்தனிப் பொருட்களாக நோக்கினும் இவ்வுண்மையை அறியலாம். இதனைப் பின்வரும் அட்டவணை I காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை I

மரபு ரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதி மூலம் பெற்ற வருமானம்
(மில்லியன் ரூபாய்)

| பொருட்கள் | 1972 | 1973 |
|---|---|---|
| இரத்தினக்கல் ஏற்றுமதி | 12.3 | 140.8 |
| கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி | 39.6 | 206.5 |
| கைத்தொழிலல்லாத பொருட்களின் ஏற்றுமதி | 113.4 | 162.4 |
| மீன் பொருட்களின் ஏற்றுமதி | 11.4 | 22.4 |
| சுற்றுலா | 44.0 | 80.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1972ம் ஆண்டுக்குப் பின்னர் மொத்த அந்நியச் செலாவணி வருவாயில் மரபுரீதியற்ற பொருட்கள் பெறும் பங்கு பெருமளவு அதிகரிக்கத் தொடங்கியது. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இவற்றின் பங்கு 1972 இல் 11.0 வீதமாக இருந்து, 1973இல் 23.3 வீதமாக அதிகரித்தது. எனவே CRA தனது முதலாவது நோக்கத்தினை அடைந்து கொள்வதில் வெற்றி கண்டதென்றே கூற வேண்டும். முன்னர் அந்நியச் செலாவணியில் கள்ளச்சந்தை காணப்பட்டமைக்கு முக்கிய காரணம், ஏற்றுமதியாளர்களும், வியாபாரிகளும் சில குறிப்பிட்ட இறக்குமதிப் பொருட்களைக்கூட கொள்வனவு செய்யமுடியாமல் இருந்தமையும், பிரயாணம் செய்வதற்குப் போதுமான அளவு அந்நியச் செலாவணியை சட்டரீதியாக பெறமுடியாமலிருந்தமையுமாகும். CRA திட்டத்தின் மூலம் இத்தகைய பிரச்சினைகளுக்கு ஓரளவு நிவாரணம் காணப்பட்டதால் கள்ளச்சந்தையின் அளவு குறைவதற்கு வழியேற்பட்டது.

CRA திட்டம் தொழிற்பட்ட காலத்தில் அக்கணக்கில் இருந்த நிதியில் பெருமளவு இரத்தினக்கல் மூலமும், அடுத்து கைத்தொழில்துறைப் பொருட்களின் மூலமும் பெறப்பட்டதாக இருந்தது.

CRA திட்டத்தில் இருந்த நிதியில் பெருமளவு இறக்குமதிக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளவே பயன்படுத்தப்பட்டது. அடுத்து பிரயாணத்திற்காகவும், உள்நாட்டில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டது.

குறைபாடுகள்:

CRA திட்டம் தனது நோக்கங்களை அடைவதில் குறிப்பிடத்தக்க வெற்றியினைக் கண்டதெனினும் சில குறைபாடுகளையும் கொண்டதாக இருந்தது. அக்குறைபாடுகளிற் சில பின்வருவன :

1. ஏற்றுமதியைப் பன்முகப்படுத்த வேண்டுமாயின் மரபுரீதியற்ற பொருட்களை உற்பத்தி செய்வோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் CRA திட்டம் இருக்க வேண்டும். ஆனால் இத்திட்டம் உற்பத்தி செய்வோருக்கு நேரடி நன்மையைத் தராமல் ஏற்றுமதி செய்வோருக்கே கூடிய நன்மையைக் கொடுத்தது.

2. CRA திட்டம் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தலில் தனியார் துறையின் பங்களிப்பையும் எதிர் பார்த்தது. ஆனால் நடைமுறையில் பெற்றோலியக் கூட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபனம், இரத்தினக்கல் கூட்டுத் தாபனம், இலங்கை தெங்கு சபை போன்ற அரச கூட்டுத்தாபனங்கள் சில விடயங்களில் தனியுரிமை வகித்ததால் தனியார் துறையின் பங்களிப்பு திறமையாக இருக்கவில்லை.

3. 1970க்குப் பின் அந்நியசெலாவணிப் பயன்படுத்தலில் இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அத்தியவசியப் பொருட்கள் கூட பெருமளவு கிடைக்க முடியாத நிலை காணப்பட்டது இந்நிலையில் CRA கணக்கு வைத்திருப்பவர்கள்மட்டும் ஆடம்பரமானபொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டவை நியாயமான தொன்றாக இல்லை.

4. CRAஇன் கீழ் சிந்தரிக்துணிகள், தோற் பொருட்கள், வானொலி போன்றவையும் இறக்குமதி செய்யப்பட அனுமதிக்கப்பட்டிருந்தன. அதேவேளை உள்நாட்டில், துணி உற்பத்தி செய்யும் ஆலைகள் வானொலி பொருத்தும் நிறுவனங்கள், உருவாக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் உள்நாட்டுத் தொழிலை நசுக்கக் கூடியதாக இருந்ததால் CRA திட்டம் உள்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஓரளவு தடையாக இருந்ததெனலாம்.

5. நாட்டிலுள்ள ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கையில் CRA திட்டத்தில் நிதி வைத்திருந்தவர்கள் மிகச் சிறிய பகுதியினரேயாவர். அவர்களில் கூட ஒரு சிறு பகுதியினருக்கே CRA திட்டத்திலுள்ள பெருமளவு நிதி சொந்தமானதாகவிருந்தது. இந்நிலை வருமானப்பங்கீட்டில் காணப்படும் சமமின்மையை அதிகரிப்பதற்கு CRA வழிவகுப்பதாக இருந்தது.

இத்தகைய குறைபாடுகள் இருந்த போதும், மரபுரீதியற்றபொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு CRA திட்டம் பெரிதும் துணைபுரிந்தது என்பதில்ஐயமில்லை. எனினும் 1977ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புதிய அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையினை அறிமுகப்படுத்திய போது CRA திட்டத்தையும் கைவிட்டது.

---


O இவ்விதழைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் :

O ந. பேரின்பநாதன்
37, அச்சுக்கூட ஒழுங்கை
கொக்குவில்.

O கே. ரி. கே. தம்பையா
வந்தாறுமூலை மத்திய கல்லூரி
வந்தாறுமூலை
மட்டக்களப்பு.

O எஸ். தண்டாயுதபாணி
இந்துக்கல்லூரி
திருகோணமலை.

O காசுக்கட்டளைகள் தபாற்கட்டளைகள் என்பன ந. பேரின்பநாதன், 37, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

அச்சுப்பதிவு: நியூ ஈரா பப்பிளிக்கேஷன் லிமிட்., யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேலையின்மை 1946 – 1987

| அளவீட்டின் பெயர் | வேலையில்லாதோரின் எண்ணிக்கை. | வேலைப்படையின் வீதமாக. |
|---|---|---|
| 1. சனத்தொகைக் கணிப்பீடு 1946 | 25,058 | 1.0 |
| 2. சனத்தொகைக் கணிப்பீடு 1953 | 22,694 | 0.2 |
| 3. நுகர்வோர் நிதி அளவீடு 1953 | 540,000 | 16.6 |
| 4. வேலைவாய்ப்பு, வேலையின்மை, (i) | 340,000 | 10.5 |
| கீழ் உழைப்பு பற்றிய அளவீடு (ii) 1959 – 60 | 450,000 | — |
| 5. சனத்தொகைக் கணிப்பீடு 1963 | 261,970 | 7.7 |
| 6. இலங்கையின் நுகர்வோர் நிதி அளவீடு 1963 | 457,730 | 13.8 |
| 7. கிராமிய வேலை பற்றிய அளவீடு 1964 | 475,000 | 12.6 |
| 8. வேலைப்படை பற்றிய அளவீடு 1968 | 464,200 | 13.4 |
| 9. கிராமியக் கடன், கடன்படு நிலைபற்றிய ஆய்வு 1969 | 445,082 | 11.3 |
| 10. சமூக பொருளாதார அளவீடு 1969 – 70 | 558,600 | 13.4 |
| 11. சனத்தொகைக் கணிப்பீடு 1971 | 839,264 | 18.7 |
| 1 . இலங்கையின் நுகர்வோர் நிதி அளவீடு 1973 | 1,073,000 | 24.0 |
| 13. வேலைப்படையின் பங்குகொள்ளல் வீத நிர்ணயிப்பு 1973 | 793,064 | 18.3 |
| 14. நிலமும் உழைப்பும் பயன்படுத்தல் பற்றிய அளவீடு 1975 | 984,000 | 19.7 |
| 15. நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு 1978 1979 | — | 14.8 |
| 16. வேலைப்படை, சமூக பொருளாதார அளவீடு 1980/81 (i) | 857,168 | 18.0 |
| (ii) | 86?,530 | 15.1 |
| 17. சனத்தொகைக் கணிப்பீடு 1981 | 895,143 | 17.9 |
| 18. நுக வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு 198 /82 | 609,000 | 11.7 |
| 19. வேலைப்படை, சமூக பொருளாதார அளவீடு 1985/86 | 840,252 | 14.1 |

அதிகார பூர்வமான மதிப்பீடுகளின் படி 1987 இல் 1,100,000 பேர் வேலையின்றி உள்ளனர். அது மொத்த வேலைப்படையில் 18.7 வீதமாகும்.

ஆதாரம்: (1) Unemployment and wages A case study of Sri Lanka.
(2) Employment and the Labour market in Sri Lanka,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org